

கல்கி
KALKI 20.12.87 ரூ. 2.
மெருகர்:
தமிழிசைச்
சங்கத்தின்
ஹீரோ!

"Even Sharmila can't resist adding her finishing touch"

"Over the years, while I was searching for a good suiting that I really liked, Sharmila would ask me not to be such a perfectionist. It was fine on the cricket field, but surely I couldn't expect perfection in every aspect of my life.


However, when I discovered Gwalior Suiting, and fell in love with it straightaway, dressing up became an easy proposition. I got the perfection I wanted. And just look at those admiring glances I get even from my wife. Dressing is no longer a knotty problem!"

M.A.K. PATAUDI

GWALIOR SUITING

IN A CLASS OF ITS OWN

A PRODUCT OF GRASIM INDUSTRIES LTD.



MAPP-GR-87-370



"பழம்பெருமை பேசினால் போதுமா?"

— மனோகரின் வருத்தம்

ஒரு தமிழ் நாடகத்தை ஆயிரத்து எழுநூறு முறை அரங்கேற்ற முடியுமா…? தமது 'இலங்கேசுவரன்' நாடகத்தின் மூலம் இந்தச் சாதனையைச் செய்து காட்டியிருக்கிறார் மனோகர். இன்னமும் அந்த நாடகத்தைக் காணப் பெருந்திரளாக வருகிறார்கள் மக்கள்.

இலங்கேசுவரனில்தான் முதன் முதலில் வில்லனை ஹீரோவாக்கிக் காட்டினார் மனோகர். அந்நாடகத்தின் கதை ஆனந்த ராமாயணத்தின் அடிப்படையில் எழுதப்பட்டது. ராவணனை ஹீரோவாகக் காட்டினால் மக்கள் அங்கீகரிப்பார்களா என்ற மனோகரின் பயமும் சந்தேகமும் அவசியமற்றவை என்பது சீக்கிரமே உறுதியாயிற்று. தொடர்ந்து பல ஹீரோ—வில்லன்களை நினைவில் நிற்கச் செய்தார் நாடகக் காவலர்.

இலங்கேசுவரன் நாடகத்தைப் பார்த்த இலங்கை அமைச்சர் கந்த வைத்யநாதன் இவருக்கு அளித்த பட்டம் 'இலங்கேசுவரன்'! பிறகு, எம். ஜி. ஆர். 'நாடகக் காவலர்' விருதை வழங்கினார். இப்போது தமிழிசைச் சங்கத்தார் 'இசைப் பேரறிஞர்' என்ற பட்டத்தை அளித்துள்ளனர். நாற்பத்து நான்கு ஆண்டுகளாக இசைக் கலைஞர்களே பெற்று வந்த இவ்விருது முதன் முறையாக ஒரு நாடகக் கலைஞருக்கு வழங்கப்படுகிறது.

"உங்கள் ஆதிகால நாடகங்களில் பாடிக் கொண்டே நடித்திருக்கிறீர்களா?" என்று மனோகரிடம் கேட்டோம்.

"இல்லை! இல்லை! என் இசை ஞானமெல்லாம் நாடகத்துக்கு இசையமைக்க ஆலோசனைகள் கூறும் அளவுக்குத்தான். ஆனால் தமிழிசைச் சங்கத்தின் நோக்கம் முத்தமிழையும் வளர்ப்பதாக இருக்க வேண்டும் என்ற என்



''என்னோட வீட்டுக்காரருக்கு ரொம்பவும் ஞாபகமறதி!''

''எதை வச்சு சொல்றே?''

''ஹெல்மெட் போட்டது கூடத் தெரியாம தலையைச் சொறிஞ்சிக்கிட்டு இருக்கிறாரே!'' — அ.பெ. ரவி.

ணத்தில்தான் ஒரு நாடகக் கலைஞர் இவ்வாண்டு கௌரவிக்கப்படுவதாக நான் கருதுகிறேன்.''

''நாடகத் துறையில் நீங்கள் இவ்வளவு தூரம் ஈடுபட எது தூண்டுதலாக இருந்தது?''

''நவாப் ராஜமாணிக்கம் பிள்ளையின் நாடகங்கள்தாம்.. அவரைத்தான் நான் மானசீக குருவாகக் கொண்டிருக்கிறேன்.''

''தற்போது வரும் தமிழ் நாடகங்களின் தரம் மிகச் சாதாரணமாகவோ அல்லது மோசமாகவோகூட இருக்கிறது. நாடகங்களுக்கு அதிகக் கூட்டமும் வருவதில்லை. நாடகத் துறையின் இந்தச் சரிவுக்குக் காரணம் டீ.வி. என்பீர்களா?''

''டீ.வி.—யைக் காரணம் காட்டுவது சுலபம். ஆனால் நாடகங்களின் தரக் குறைவுக்கு உண்மையான காரணம் பார்வையாளர்கள்தான். ஒரு கட்டத்தில் — சில வருடங்களுக்கு முன் — வெறும் துணுக்குத் தோரணங்கள் நாடகம் என்ற பெயரில் அரங்கேற ஆரம்பித்தன. அவற்றுக்கு அமோக வரவேற்பு அளித்தார்கள் பார்வையாளர்கள். ஆனால் அந்த நாடகங்கள் நெஞ்சில் நிறைந்து நிலையில் நிற்பவையல்ல இதைப் பார்வையாளர்கள் இப்போது உணர ஆரம்பித்து விட்டதால் மேடை நாடகங்களுக்குக் கூட்டம் குறைந்து விட்டது. வெறும் வார்த்தை ஜாலங்களும் சிலேடைகளும் எப்படி நாடகமாக முடியும்? எத்தனை காலம் நிலைக்கும்?''

''நல்ல நாடகம் எப்படி இருக்க வேண்டும் என்கிறீர்கள்?''

''வெறும் வசனம் மட்டுமே நாடகமாகாது. அப்படியிருந்தால் அது ரேடியோ நாடகம் போல்தான் இருக்கும். மேடை நாடகம் என்றால் அதில் action இருக்க வேண்டும். கதையின் போக்கில் ஒரு ரயில் விபத்து, ஒரு டெலிபோன் சம்பாஷணை என்று ஏதேனும் வந்தால் அது மேடையில் காட்டப்பட வேண்டும். ரசிகர்களின் செவிகளோடு கண்களுக்கும் வேலை தர வேண்டும். அப்போதுதான் நாடகம் நிறைவாக இருக்கும்.''

''காட்சியமைப்பாலும், ட்ரிக் ஷாட்கள் மூலமாகவும் நிகழ்ச்சிகளை மேடையில் காண்பித்தால் பார்வையாளர்களின் கவனம் கதையிலிருந்து திசை திரும்பி அந்த விசித்திரங்களில் லயித்து விடாதா?''

''கதையின் போக்கு அனுமதிக்கும் வரையில்தான் அத்தகைய காட்சிகளைச் சேர்க்கலாம். அவசியமான நிகழ்ச்சிகளைத் தந்திரக் காட்சிகள் மூலம் காட்டினால் நாடகத்தின் effect அதிகரிக்கும். கதையின் போக்கு அத்தகைய காட்சிகளை அனுமதிக்காவிடில் அவற்றைச் சேர்க்க வேண்டாம். யூல் ப்ரென்னர் நடத்திய 'கிங் அண்ட் ஐ' நாடகம் ஆறாயிரம் முறை அரங்கேறியது! அது மிக எளிமையான காட்சியமைப்புக் கொண்டதுதான், ஆனால் கதையின் போக்கை உணர்ந்த மிக அழகாகக் கையாளப்பட்டிருந்தது! நம் நாட்டிலும் வங்கத்தில் நாடகத் துறை மிகவும் முன்னேறியிருக்கிறது. ஆனால் கல்கத்தாவுக்கு அடுத்தபடியாக இந்தியாவின் மிகப் பெரிய நாடகக் கேந்திரமான சென்னையில் நாடகங்களின் நிலை மெச்சும்படியாக இல்லை என்பதே என் வருத்தம்.''

''தமிழ் நாடகம் பாரம்பரியம் மிக்கதாயிற்றே...? அதன் வேர்கள்...?''

''ஆமாம்! ஆமாம்! சிலப்பதிகாரத்தில் நாடக இலக்கணம் சொல்லப்பட்டுள்ளது. எல்லாம் உண்மைதான். ஆனால் பழைய பெருமைகளில் இப்போது குளிர் காய்வதில் என்ன பயன்? கலைஞர்களும் சரி அரசாங்கமும் சரி நாடகத் துறைக்கு என்ன செய்துள்ளார்கள், செய்யப் போகிறார்கள். சினிமாவுக்குத் தரும் ஆதரவில் சிறிதளவேனும் அரசாங்கத்தால் நாடகத்துக்குத் தரப்படுகிறதா? கேட்டால், சினிமா மூலம் கிடைக்கும் கேளிக்கை வரி நாடகத்தின் மூலம் கிடைப்பதில்லையே என்கிறார்கள். இப்படி வாதிட்டால் அப்புறம் பாரம்பரியக் கலையை எப்படிக் காப்பாற்றுவது...?

''தென்மண்டலகலாசார மையம் என்று ஒன்று ஆரம்பித்தார்கள். அந்த அமைப்பின் பட்டியலில் பாரம்பரிய நாடகம் அடங்கவில்லை. இதைச் சுட்டிக் காட்டி அவசியம் அதனைப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று மையத்தின் செயலாளர் ஷீலா ப்ரியாவுக்குக் கடிதம் எழுதினேன். நாடகக் கலைஞர்கள் அசோசியேஷனின் உபதலைவர் என்ற வகையில் நான் எழுதிய இக் கடிதத்துக்கு இன்றைய தினம் வரை ஒரு பதில்கூட வரவில்லை!

''முன்னேறிய நாடுகளில் நாடகக் கலை அற்புதமாக வளர்ந்துள்ளது. விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்தி அக்கலையை மேன்மேலும் பரிமளிக்கச் செய்துள்ளார்கள். அவர்களுடைய தொழில்நுட்ப முறைகளை இறக்குமதி செய்து கொள்ள நம் அரசாங்கம் லைசென்ஸ் தந்தால்கூட போதும். நாங்கள் அயல் நாடுகளில் நாடகம் நடத்தி அன்னியச் செலாவணி பெற்றுத் தந்தால் அதை மட்டும் இரு கரம் நீட்டி வரவேற்க அரசாங்கத்துக்குத் தெரிகிறதல்லவா!''

சந்திப்பு: வசந்தா

அட்டை வண்ணப்படம்: அரஸ்



"இது சீரியஸ் விஷயம்!"

இந்த வருடம் விருது பெறும் பாலமுரளி விடம் பழைய சங்கதியைக் கிளறிய போது அவர் சொன்னார்:

மியூசிக் தெரபி என்ன ஆச்சுன்னு எல்லாரும் கேக்கற மாதிரி நீங்களும் கேக்கறீங்க.. இன்னும் ஆரம்பக் கட்டத்திலேயே, அதாவது என் மனசுக்குள் ளேயே தான் இருக்கு. அதுக்கும் பெரிய கட்டடம், இடம், ஸ்டூடியோ, ஆபீஸ் எல்லாம் வேணும். அதெல் லாம் வந்தப்புறம்தான் ஆரம்பிக்க முடியும். இது ஏதோ சிரிச்சுட்டுப் போற சமாசாரம் இல்லே; சீரியஸ் விஷயம். மியூசிக் தெரபிக்கு லட்சக் கணக்கில் பணம் வேணும். யார் கொடுப்பாங்க? கவர்ன்மெண்ட்கிட்ட கேட்டா, அவங்க கொடுக்கிற பணத்துக்கு நான்ன செஞ்சே, எப்படி செலவழிச்சேன்னு கேட்டு, அதுக்கு ரிப்போர்ட் ரிப்போர்ட்டா அனுப்பறதுக்கே நேரம் சரியா இருக்கும்!

என்னை நம்பி, பொறுப்பா யாராவது பணம் கொடுக்கணும். ஆனா இதுல எனக்கு வெற்றி கிடைக் குமா இல்லையான்னு எனக்கே தெரியாது!

ஒரு மூத்த மருத்துவரைக் கேட்டபோது:

"மனம் சம்பந்தப்பட்ட நோய்களைக் Psychic disorders) குணப்படுத்த இசை நிச்சயம் உதவும். ஆனால், கிருமிகளாலும் உடற்கூறு கோளாறுகளாலும் ஏற்படும் வியாதிகளை இசையால் மட்டுமே குணப் படுத்த முடியாது. இந் நோய்களுக்கு மருத்துவ சிகிச்சை தவிர இசைச் சிகிச்சையும் அளித்தால் அது நோயாளி யின் மனநிலையை மேம்படுத்துவதன் மூலம் நோய் சீக்கிரம் குணமடைய உதவலாம்."

தற்போது dance therapy எனப்படும் நாட்டிய சிகிச்சையும் பிரபலமாகி வருகிறது. பம்பாயைச் சேர்ந்த டாக்டர் ராம்பாய் படேல் என்பவர் 'பாம்பே ஹாஸ்பிடலில்' இச்சிகிச்சை முறையை வெற்றிகரமாகக் கையாண்டு வருகிறார். வாதம் வலிப்பு போன்றவற் றால் விளங்காமல் போகும் உடல் உறுப்புக்களைத் திரும்ப இயங்கச் செய்ய இச் சிகிச்சை முறை உதவு கிறது. குழந்தைகளுக்குக் — குறிப்பாகப் பெண் குழந் தைகளுக்கு — இயல்பாக நாட்டியம் ஆட வருவதால் இச் சிகிச்சை குழந்தை நோயாளிகளுக்கே விரைவில் அதிக பலன் தருகிறது.

— சித்தார்த்



வீணை பாலசந்தரும் செம்மங்குடியும் இணையும் இடம்!

மேடையில் லால்குடி ஜெயராமன் ஹார்மோனியத்தை வைத்துக் கொண்டு பாட, (அண்டர்லைன்: பாட) மகன் கிருஷ்ணன் வயலினும், கே. ஆர். கணேஷ் மிருதங்கமும் வாசிக்க, ஹால் நிரம்பி வழிந்த நிகழ்ச்சி சமீபத்தில் நடைபெற்றது.

ராக ஆலாபனை என்றால் என்ன?

ஸ்வரம் பாடுவது என்றால் என்ன?

நிரவல் செய்வது என்றால் என்ன? — என்று மிக எளிமையாக (பெரிய பெரிய வார்த்தைகளாகச் சொல்லிப் பயமுறுத்தாமல்) மெலிதான நகைச்சுவை இழையோட, விளக்கிக் கொண்டிருந்தார் லால்குடி.

நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்கள், YACM எனப் பிரபலமாகியுள்ள யூத் அசோஸியேஷன் ஃபார் கிளாஸிகல் மியூசிக்.

கர்நாடக இசையிடம் இளைஞர்களுக்கு இருக்கும் பயத்தைப் போக்க, இந்த மாதிரி எளிமையான நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்வதோடு, மாதா மாதம் இளைஞர்களே பங்கு கொள்ளும் கச்சேரிகளையும் வெற்றிகரமாக நடத்தி வருகிறது இந்தச் சங்கம். இதன் இருநூற்றைம்பதுக்கும் மேற்பட்ட உறுப்பினர்களுள் அறுபது — எழுபது சதவிகிதம் பேர் பள்ளி, கல்லூரி மாணவர்கள். அல்லது சமீபத்தில் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு அலுவலகங்களில் நுழைந்திருப்பவர்கள்!

•• எப்படி இந்த யோசனை உதயமாயிற்று?

நாங்கள் கல்லூரிகளில் படிக்கும்போதே, கல்லூரிகளுக்கான கலைவிழாக்களில் பங்கு கொண்டோம். திருச்சியிலும், ஐ. ஐ. டி.யிலும் நிகழ்ச்சிகள் உற்சாகம் தந்தன.

•• கல்லூரியில் கர்நாடக இசையா? கூச்சல் போட்டு ரகளை பண்ணியிருப்பார்களே?

அதுதான் கிடையாது! எல்லாக் கல்லூரிகளிலும் நல்ல வரவேற்பு. ஒழுங்காகப் பாடவில்லை என்றால்தான் கூச்சல், கேலி எல்லாம். அதனால் எங்களுக்குக் கவலையே இல்லை. ஐ. ஐ. டி.யில் ஐந்நூறு இருக்கைகள் உள்ள அரங்கம் நிரம்பி, உட்கார இடம் இல்லாமல் போய்விட்டது.

•• இப்போது நீங்கள் எல்லோருமே இளைஞர்கள். வயதான பிறகு?

ரசிகர்கள்! மூன்று வருஷங்களுக்கு மேல் சங்க நிர்வாகப் பொறுப்பை வைத்துக் கொள்ள மாட்டோம். தலைவர்களும் செயலாளர்களும் அவ்வப்போது மாறிக் கொண்டேயிருப்பார்கள். நல்ல இளம் ரசிகர்களை உருவாக்குவதே எங்கள் நோக்கம்.

•• இதை எப்போது தொடங்கினீர்கள்?

ஆகஸ்ட் 1985 - இல். டி. ஆர். எஸ்., லால்குடி நிகழ்ச்சிகள் எல்லாமே பாமரனுக்கும் இசை புரிய வேண்டும் என்ற அடிப்படையில் அமைந்த லெக்சர் — டெமான்ஸ்ட்ரேஷன்கள்தாம்.

இரண்டு வகை உறுப்பினர்கள்: இசைக் கலைஞர்கள், இளம் ரசிகர்கள் என்று.

•• இளைஞர்களாய் இருக்கிறீர்கள். உங்களுக்குள் கருத்து மோதல்கள் வந்தால் என்ன செய்வீர்கள்?

எங்களுடையது ஜனநாயக அமைப்பு. மனம் விட்டுப் பேசி, விவாதித்து முடிவெடுப்போம். உரசல் கிரசல் எல்லாம் கிடையாது. கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வோம். ஒரு முடிவு எடுத்தால் அதை முழு மனத்துடன் செயல்படுத்துவோம். அதுபோலவே எங்களில் தனித்தனிக் குழுக்களும் கிடையாது. (சீனியர் வித்துவான்களே, இந்த பாயின்டைக் கொஞ்சம் நோட் பண்ணிக் கொள்ளுங்கள்!) எங்கள் விழாக்களில் வீணை பாலசந்தரும் பங்கு கொள்வார்; பெரியவர் செம்மங்குடியும் கலந்து கொள்வார். வி ஆர் நான் - அலைன்ட்!

•• யாரேனும் நிதியுதவி செய்கிறார்களா?

ஆறு போஷகர்கள் இருக்கிறார்கள். (எல்லோரும் தொழிலதிபர்கள்.) எங்கள் சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள். வழி காட்டுகிறார்கள். எங்கள் குறிக்கோளை நிறைவேற்ற வழிவகை சொல்லுகிறார்கள்.

மாதாந்திரக் கச்சேரி, லெக்சர் — டெமான்ஸ்ட்ரேஷன்கள் தவிர, இசைப் பெரியார்களின் ஆராதனை நாட்களை அற்புதமாக நடத்தி வருகிறார்கள் இந்த இளைஞர்கள். இசை மீது ஆசையும் பற்றும் மட்டும் அல்ல, பக்தியும் மரியாதையும் உருவாக வேண்டும் என்பது இவர்களது குறிக்கோள்.

— சாருகேசி

படம்: யோகா





* உஸ்தாத் பிஸ்மில்லா கானின் ஷெனாயும் சின்ன மௌலானாவின் நாதஸ்வரமும் ஜுகல்பந்தியாக இழைந்ததுண்டு.

மதங்களைக் கடந்த மங்கலக் கலைஞர்

கல்யாணங்களிலும் கோயில்களிலும் வாசிக்கப்பட்டு வளர்ச்சியடைந்த கலை, நாதஸ்வரக் கலை. 'இந்துமத மங்கலச் சடங்குகளில் தவறாமல் இடம் பெறும் நாதஸ்வர இசையை இஸ்லாமியரான ஷேக் சின்ன மௌலானா எப்படித் தேர்ந்தெடுத்தார்?' என்று கேட்டோம்.

''அது ஒன்றும் அபூர்வமான விஷயமில்லை'' என்றார் சின்ன மௌலானா. ''ஆந்திராவில் (இவர் பூர்வீகம்) முஸ்லிம்கள் நாதஸ்வரக் கலைஞர்களாக இருப்பது சகஜம். எங்கள் குடும்பத்தில் பலர் கடந்த மூன்று நூற்றாண்டுகளாக இக்கலையையே மேற்கொண்டுள்ளனர். இது பரம்பரைக் கலையாகிவிட்டது. மேலும், என்னைப் பொறுத்தவரையில் எல்லா மதங்களும் ஒன்றுதான்! இறைவனை அடையும் வழியைத்தானே அவையெல்லாம் காட்டுகின்றன!'' — ஆணித்தரமாகச் சொன்னார்.

'ஆசாரம் மிகுந்த முஸ்லிம்கள் உங்கள் இந்துமத ஈடுபாட்டிற்கு ஆட்சேபம் தெரிவிக்கவில்லையா?' என்றோம் விடாப்பிடியாக.

''இல்லவே இல்லை! பரம்பரையாகப் பழகிப் போன விஷயம்தானே இது. மேலும் வட இந்திய உஸ்தாதுகள் பலர் முஸ்லிம்களாயிருந்தாலும் இசையில் ஹிந்துக் கடவுள்களைப் போற்றிப் பரவுகிறார்கள். இதில் என்ன தவறு? எனக்குக் கம்ப ராமாயணத்தில் மிகுந்த ஈடுபாடு உண்டு. அது ஓர் அற்புதமான இலக்கியம். ஹிந்து இதிகாசம் என்று மதக் கண்ணோட்டத்தில் அதைப் பார்க்க முடியுமா? ஹிந்து மதச்சார்புடையது என்பதற்காக அதைப் புறக்கணிக்கலாமா? அதில் இலக்கிய ஈடுபாடு கொள்வது எங்கள் முஸ்லிம் மத நம்பிக்கைகளைப் பாதித்து விடாது. அவ்வாறேதான் இசையும்.

ஸ்ரீரங்கத்தில் வசிக்கும் சின்ன மௌலானாவின் வீட்டை ராமர் பட்டாபிஷேகப் படமும், திருப்பதி பெருமாள் படமும் அலங்கரிக்கின்றன. அவர் தமிழகத்தில் செய்த முதல் கச்சேரி சென்னை சாயிபாபா கோயிலில்; அவர் மறக்க முடியாத கச்சேரியாகக் குறிப்பிடுவது சேலம் மாரியம்மன் கோயிலில் செய்த கச்சேரியைத்தான்! பரமாச்சாரியாரின் முன்னிலையில் காஞ்சிபுரத்தில் வாசித்ததையும், அவர் கைகளால் சால்வை போர்த்



* ஸ்ரீரங்கம் வீட்டில்.



• தாத்தாவும் பேரனும்

தப் பெற்றதையும் மெய்சிலிர்ப்புடன் நினைவு கூர்கிறார்.

சின்ன மௌலானா முதன் முதலில் இசை பயின்றது தமது தந்தை ஷேக் காசிம் சாகிபிடமிருந்து. ஒரு வாத்தியக் கலைஞனுக்கு வாய்ப்பாட்டுத் தெரிந்திருப்பது அத்தியாவசியம் என்ற நோக்குடன் மகனுக்கு வாய்ப்பாட்டுக் கற்றுக் கொடுத்தார் தந்தை. தமது ஐந்தாவது வயதில் ஒரு சிறிய நாதஸ்வரத்தில் பயிற்சியை ஆரம்பித்தவர் பதினோராவது வயதில் முதல் கச்சேரி செய்தார். சில்லை கல்லூரி பேடா ஆதாம் சாகிப் என்ற பிரபல வித்வானிடமும் கற்றுக் கொண்டார்.

இப்போது சின்ன மௌலானாவின் பேரன் காசிம் அவரிடம் நாதஸ்வரம் பயின்று, அவருடன் இணைந்து கச்சேரிகளில் வாசித்து வருகிறான். தமது வீட்டிலேயே சாரதா நாதஸ்வர சங்கீத ஆசிரமம் என்ற பெயரில் ஒரு நாதஸ்வரப் பள்ளியை நடத்தி வருகிறார் சின்ன மௌலானா. காலையும் மாலையும் வரும் மாணவர்கள் கேட்டுப் பயனுறபல பாடகர்கள் மற்றும் வாத்தியக் கலைஞர்களின் காசெட்டுகளை வாங்கி வைத்துள்ளார்.


சமீபத்தில் ரஷ்யாவில் நடந்த இந்தியக் கலைவிழா உள்பட பல சர்வதேச விழாக்களில் வாசித்த பெருமை ஷேக் சின்ன மௌலானாவுக்கு உண்டு. இலங்கையில் பல முறை கச்சேரி செய்ததுண்டு; கலைமாமணியான இவர் தமிழக அரசவை வித்வான்; தவிர சங்கீத நாடக அகாடெமி விருது, பத்மஸ்ரீ பட்டம் ஆகியவையும் இவரைத் தேடி வந்துவிட்டன.

கடந்த முப்பது வருடங்களாக ஒரே நாதஸ்வரத்தைத்தான் பயன்படுத்தி வருகிறார், இவர். ஒருமுறை திருவண்ணாமலைக் கோயில் உற்சவத்தில் சுவாமி வீதி வலம் வந்தபோது நாதஸ்வரம் வாசித்தபடி முன்னால் நடந்து கொண்டிருந்தார் சின்ன மௌலானா. அப்போது ஒரு சிறுவன் அவசரமாகக் குறுக்கே ஓட, நாதஸ்வரத்தின் முன் பகுதி (அனுசு என்று இதற்குப் பெயர்) உடைந்து, கீழே விழுந்து சுக்கலாகிவிட்டது. சின்ன மௌலானா கலங்கிப் போனார். பிறகு சுதாரித்துக் கொண்டு, உடைந்த வாத்தியத்தின் ஒரு துண்டு விடாமல் பொறுக்கி எடுத்துத் தமது மேல் துண்டில் மூட்டையாகக் கட்டிக் கொண்டார். அந்த நாதஸ்வரம் சீர் செய்யப்பட்ட பிறகுதான் அவருக்கு உயிரே திரும்பியது!

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

படம்: **சோமு**

உங்கள் குழந்தைக்கு ஊட்டுங்கள் காய்கறிகளின் சிறந்த சத்தூட்டத்தை!



ஃபாரெக்ஸ்®-வெஜ்



6 மாதம் முதல்

புதிய ஃபாரெக்ஸ்-வெஜ். இது, வைட்டமின் வளம் செறிந்த காய்கறிகளான காரட், தக்காளி மற்றும் பச்சைப் பயற்றின் இயற்கையான ஊட்டச்சத்துக்களைக் கொண்டதாகும்.

இது, நன்றாக, முன்பே - பக்குவப்படுத்தப்பட்டது. ஆகவே இது, குழந்தையின் மென்மையான வயிற்றின் ஜீரண சக்திக்கு ஏற்றதாகும்.

ஃபாரெக்ஸ்—சுவையுடன் வளரும் வழி



இதோ ஃபாரெக்ஸ் வளர்ச்சி வழி: 1. பால் சேர்த்த ஃபாரெக்ஸ் சீரியல் 2. ஃபாரெக்ஸ்-வெஜ் 3. ஃபாரெக்ஸ்-எக்

GX/31/203 TML


வளரும் வயதில்
குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்
காம்ப்ளானில் மட்டுமே குழந்தைகளுக்குத் தினந்தோறும் தேவைப் படும் 23 ஆதார உணவுச் சத்துக்கள் உள்ளன.
குழந்தைகளின் வளர்ச்சிப் பருவம் சாதாரணமாக 15 அல்லது 16 வயதிலே நிறைவு பெறுகிறது. இந்த வளர்ச்சிக்கு அடிப்படை யான ஊட்டச்சத்து புரத மாகும். ஆகவே, உங்கள் குழந்தைகளுக்கு இப்போது காம்ப்ளான் மிகமிக அவசி யம். புரதச் சத்துக்களிலேயே தலைசிறந்த பால்புரதம் 20% கொண்டது காம்ப்ளான். அதுதவிர, மேலும் 22 ஆதார உணவுச் சத்துக்களும் காம்ப்ளானில் உள்ளன.
குழந்தைகள் ஆசையோடு கேட்டு அருந்தும் சுவைகளில் கிடைக்கிறது காம்ப்ளான்.
23
மூலாதார சத்துணவுகள் திட்டமிட்ட விகிதங்களில்
பால் சேர்க்கத் தேவையில்லை
Complan
COMPLETE PLANNED FOOD
CHOCOLATE FLAVOUR
காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூரண உணவு
GX/36/203 TML



பேசும்படம்



விடியற்காலைக் கருக்கலுடன் படம் தொடங்கும்போதே என்னவோ வித்தியாசமாய்ப் பண்ணப் போகிறார்கள் என்று கட்டியம் கூறிவிடுகிறார்கள். SILENT MOVIE என்ற ஆங்கிலப் படம் அளித்த ஊக்கத்தால் உருவானது என்றாலும் இது முற்றிலும் வித்தியாசம்தான்.

வசனமே இல்லாமல் ஒரு படத்தை விறு விறு என்று கொண்டு போய், வயிறு குலுங்கச் சிரிக்க வைத்து, நெஞ்சு நிறைய படபடப்பை ஏற்படுத்தி, கடைசிக் காட்சியில் இதயத்தில் ஒரு ரோஜா முள்ளைக் குத்தி வேதனைப்படச் செய்து வெளியே அனுப்பி விடுகிறார்கள்.

கதையைக் கேட்காதீர்கள். ப்ளீஸ்! அப்புறம் நீங்கள் பார்க்கும் போது ஆர்வம் குறைந்து விடும்.

நாயகன், மறுபடி மீசையில்லாத கமல். ஆஸ்கார் நடிப்பு.

முதல் ஸீனில் அந்தப் பெரியவர் சிகரெட் பிடித்துக் கொண்டே பார்வையை மேய விடுவதும், ஆல் இந்தியா ரேடியோவின் செய்தி ஒலிபரப்பாவதும் சரியான ஊசிக்குத்தல் — சபலக்காரர்களுக்கு.

தினம் போட்ட வியர்வை நாற்றச் சட்டையிலிருந்து வியர்வை நாற்றத்தைப் போக்க கமல் கையாளும் உத்தி சிரிப்புடன் பரிதாபத்தையும் சேர்த்து வரவழைக்கிறது.

அமலாதான் ஹீரோயின். அட, இவ்வளவு அழகா! அட, இவரிடம் இவ்வளவு பாவங்களா! வியக்க வைத்திருக்கிறார்.

அமலாவின் அந்த மஜிஷியன் அப்பா நல்ல காரெக்டர். கைத்தடியை எப்படி கைக் குட்டையாகப் பண்ணினார் என்பதையும் காட்டியிருந்தால், இன்னும் கொஞ்சம் ரசித்திருக்க மாட்டோமா டைரக்டர் சார்?

டினு ஆனந்த் ஜேம்ஸ் பாண்ட் ஸ்டைலில் வருவதும் அந்த அணில் பற்களுடன் ஐஸ் கத்தியை எறிவதும் சிரிப்புக்குச் சிரிப்பு — பக் பக்கிற்குப் பக் பக்.

அந்தப் பிச்சைக்காரர் நிஜமான பிச்சைக்காரர் என்றால் சரி. சினிமாவிற்காகப் பிச்சைக்காரர் என்றால் மேக்கப் போட்ட ஆசாமியை எவரெஸ்டில் ஏற்றி உட்கார வைக்கலாம்.

அந்த பெட் பான் விவகாரமும், கிஃப்ட் பார்சல் விவகாரமும் திரும்பத் திரும்ப வருவது ரொம்ப ஓவர்!

பிரிய இருந்த குடும்பத்தைச் சேர்த்து வைத்து (கிளைக்கதையில்) புண்ணியம் தேடிக் கொண்டது ஒருபுறம்; உழைத்தால் தான் உயர்வு என்பதை அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருப்பது ஒருபுறம் — டைரக்டர் சிங்கீதம் சீனிவாசராவை இந்த இரண்டு விஷயங்களுக்காகவே கட்டிப் பிடித்து எம்.ஜி.ஆர். பாணியில் முத்தம் கொடுக்கலாம்.

ஆனால் புஷ்பக்கின் முதலாளியான அந்த உழைப்பால் உயர்ந்த உத்தமரின் இறப்பைக் கேலிக் கூத்தாக்கி விட்டதைத்தான் மன்னிக்க முடியவில்லை. ஏன்யா, ஹீரோவிற்கும், ஹீரோயினுக்கும் காதல் மலர ஒரு ஃபாஷன் பரேடோ, இல்லை ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில் நடக்கும் ஒரு ஃப்ளவர் ஷோவோ போதாதா? இந்தாருங்கள் தலையில் ஒரு குட்டு.

சார்லி சாப்லினுக்கு 'ஜே' போட்டுத் தயாரிக்கப்பட்டிருக்கும் இந்தப் படத்திலே அதன் வித்தியாசமான அணுகுமுறைக்காக, அது அளிக்கும் புதுமையான அனுபவத்திற்காக, நகைச் சுவைக்காக, நடிப்பிற்காக, சிறந்த டைரக்ஷனுக்காக, உறுத்தாத ஒளிப் பதிவிற்காக, அது போதிக்கும் 'உழைத்தால் தான் உயர்வு' என்ற பாடத்திற்காக —

பார்க்கலாம். பார்க்க வேண்டும். பார்க்கப் போகிறீர்கள்.


— ஜெயமன்மதன்


கோர்பசேவ்
ரேகன்
நீங்க என்ன பெரிய ஒப்பந்தம் பண்ணிட்டீங்க?... எல்லாம் ராஜீவோட முயற்சி தான்!
கர்நாடகா லோன் மேளா
90 கோடி
வங்கிகள்
நோட்டைக் கொடுய்யா!... ஏன்யா முழிக்கறே?... நீ நோட்டை அந்தக் கையிலே வாங்கிக்கிட்டு, ஓட்டை என் கிட்ட தள்ளிடும்மா!
ஓட்டு
பூஜாரி
பதினஞ்சு..பதினாறு.. பதினேழு! பதினேழு ஓட்டைகள்! தோசையா இது?
அய்யா! தோசையை திங்கறதை விட்டு, ஓட்டையை எண்றீயே!
வி.பி.சிங்
தாக்கர் கமிஷன்
அந்நியச் செலாவணி மோசடி



கல்கி

1987 டிசம்பர் 20
மலர் 46 இதழ் 21
பிரபவ மார்கழி 5



ஜெயவர்த்தனவுக்குக் கிடுக்கிப்பிடி போடுங்கள்!

ஈழ மக்களின் புரட்சி விடுதலை முன்னணி (EPRLF) என்ற தமிழ்ப் போராளிப் பிரிவின் காரியதரிசி பத்மநாபா அர்த்தமுள்ள வார்த்தைகளைப் பேசியுள்ளார். "விடுதலைப் புலிகள் (LTTE) தங்களது குறுகிய பிரதேசப் பித்தைக் கைவிட்டு ஈழத் தமிழர்களின் நீண்ட கால நலனை மனத்தில் கொண்டு செயல்பட வேண்டும்; வன்முறைக்கு விடைகொடுத்து அமைதியும் ஜனநாயகமும் மலர இதர மக்களுடன் இணை சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும்" என்று கூறியிருக்கிறார். இதே நேரத்தில் இந்திய அரசுக்கும் அவர் விடுத்திருக்கும் உருக்கமான வேண்டுகோள் கவனத்துக்குரியது: "இந்தியா — இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தாகி ஐந்து மாதங்களாகியும் அமைதியும், ஜனநாயகமும், சுயாட்சியும் தமிழீழ மக்களுக்குக் கிடைத்தபாடில்லை. மாறாக அவர்கள் இன்னமும் ஏமாற்றத்தையும், வறுமையையும், மரணத்தையுமே சந்தித்து வருகின்றனர். இந்நிலையில் ஒப்பந்தத்துக்கு நாங்கள் ஆதரவு அளித்த போதிலும் அது நல்லதற்கே என்று மக்களை நம்பச் செய்வது நாளுக்கு நாள் கடினமாகி வருகிறது."

ஜெயவர்த்தன அரசு ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் முனைப்புக் காட்டவில்லை என்பதற்குச் சில எடுத்துக்காட்டுக்களையும் கூறுகிறார் பத்மநாபா: "தமிழ் அரசியல் கைதிகள் ஏராளமான பேர் இன்னும் விடுவிக்கப்படாமல் சிறையில் வாடிக் கொண்டிருக்கின்றனர்; தவிர, ஒப்பந்தத்தில் உறுதி செய்யப்பட்டுள்ள சுயாட்சி அதிகார மாற்றத்துக்கு முரணான முறையில் ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் அரசியல் சாசன மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன."

பத்மநாபாவின் அறிக்கை கவலை அளிப்பதாக இருந்தாலும், அமைதிப்படை இந்திய அரசிடமிருந்துதான் உத்தரவுகளைப் பெறும் என்றும், இந்தியா — இலங்கை ஒப்பந்தம் முழுமையாக அமலாகுமுன்னர் ஈழத்தை விட்டு வெளியேறாது என்றும், நமது ராணுவத்தின் தலைமைத் தளபதி சுந்தர்ஜியே உறுதி அளித்திருப்பது ஆறுதலையும் தருகிறது. 'ராணுவம் நாளை வெளியேறினால் ஈழத் தமிழரின் கதி என்ன ஆவது?' என்றும், 'விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்தால் அவர்களுக்கு யார் பாதுகாப்புத் தருவார்கள்?' என்றும் யாரும் கவலைப்பட அவசியமில்லை. சுந்தர்ஜியின் உறுதி மொழிக்குப் பிறகும் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்கத் தாமதப்படுத்துவது ஈழத் தமிழர் நலனைக் கூட மறந்த அவர்களுடைய சுயநல நோக்கையே அடிக்கோடிட்டுக் காட்டும்.

"விடுதலைப் புலிகள் முரண்டு பிடிப்பது ஒருபக்கமிருந்தாலும் அது, ஒப்பந்தப்படி அரசியல் ரீதியான தீர்வுகளைக் காண்பதிலிருந்து இந்திய அரசைத் திசை திருப்பிவிடக் கூடாது" என்று பத்மநாபா கூறியிருக்கிறார். கவனத்தில் கொள்ள வேண்டிய இந்த அம்சத்திலும் பாரதப் பிரதமர் அக்கறை காட்டி வருகிறார் என்பதும் ஜெயவர்த்தனவும் ராஜீவின் கருத்தை ஏற்று தீக்ஷித்திடம் தலையாட்டியுள்ளார் என்பதும் வரவேற்கத்தக்க செய்திகள்.

அமைதிப் படையின் பணி சீக்கிரமாக முடிவடைய வேண்டும் என்பதிலும், அது ஈழத்தில் வெகு காலம் இருப்பது அரசியல், பொருளாதார, நோக்குகளில் இரு நாடுகளுக்குமே நல்லதல்ல என்பதிலும் இரு கருத்துக்களுக்கு இடமில்லை. ஆனால் ஒப்பந்தத்தில் உறுதி அளிக்கப்பட்டுள்ள உரிமைகள் இம்மி குறையாமல் ஈழத் தமிழருக்குக் கிடைக்கும் போதுதான் அமைதிப் படையின் பணி முடிந்ததாகக் கருத இயலும்.

"அமைதிப் படை எனது ஆணையை ஏற்று இயங்கும்; நான் வெளியேறு என்றால், அது இந்தியா திரும்ப வேண்டியதுதான்" என்று முன்னர் பேசிய ஜெயவர்த்தன, சுந்தர்ஜியின் அறிக்கைக்குப் பிறகு தர்ம சங்கடத்துடன் நெளிந்து கொண்டிருப்பார். இந்த நிலைமையையே ஈழத் தமிழனுக்குச் சாதகமாக்கி, ஒப்பந்தம் துரிதமாக நூற்றுக்கு நூறு நிறைவேறப் பாரதப் பிரதமரும் அரசியல் ரீதியாக அழுத்தம் கொடுக்க வேண்டும். இதில் அவர் தாமதிக்கத் தாமதிக்க, "யூதர்களுக்காக ஹிட்லர் நடத்திய கொடூரமான சிறை முகாம்கள் போன்று யாழ்ப்பாணமே அமைதிப் படையினரால் உருமாற்றப்பட்டு விட்டது" என்பது போன்ற பொய்யான கோயபெல் பிரசாரங்கள் இங்கு தீவிரமடைவதைத் தவிர்க்க முடியாமல் போகலாம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

நம்பிக்கை

கவச குண்டலம் போல.......

•• டாக்டர் எஸ். ராமநாதன் ஒரு முறை கேரளாவில் கச்சேரி செய்யச் சென்றபோது, ஸ்ரீனிவாசன் என்பவர் அவருக்கு அறிமுகமானார். ஸ்ரீனிவாசனின் மூன்று வயது மகள், தான் கேட்ட பாட்டுக்களையெல்லாம் 'கார்பன் காப்பி' எடுத்தது போல் திரும்பப் பாடிக் கொண்டிருப்பது டாக்டர் ராமநாதனின் கவனத்தைக் கவர்ந்தது. குழந்தை சௌம்யாவுக்கு முறைப்படி பாட்டுக் கற்றுக் கொடுக்கும்படி சொல்லிவிட்டுப் போனார். பள்ளி விடுமுறை நாட்களில் சௌம்யா சென்னைக்கு வர ஆரம்பித்தாள். டாக்டர்



* சௌம்யா

ராமநாதனுடன் தங்கி அவரிடம் இசை பயின்றாள். அவர் குடும்பத்தில் ஒருத்தியாக வளர்ந்தாள். குருவைத் தாத்தா என்று அழைத்து, அவர் அன்புக்கும் பாத்திரமானாள்.

தற்போது சௌம்யா சென்னையில் பெற்றோருடன் தங்கி பி. எஸ்ஸி. படித்து வருகிறார். சுமார் முப்பது கச்சேரிகள் செய்துள்ளார். குரல் வளமும், ஆத்மார்த்தமும் இவருடைய பலங்கள்.

பட்டப்படிப்புக்கு ஏன் இசையைத் தேர்ந்தெடுக்கவில்லை என்று கேட்டபோது, "இசைத் துறையில் என் குரு ஒரு நடமாடும் கலைக்களஞ்சியம். அவர் சொல்லித் தராத எதையும் நான் புதிதாகப் பட்டப் படிப்பில் கற்றுக் கொண்டுவிட முடியாது," என்றார் உறுதியாக! "கர்ணனுக்குக் கவச குண்டலங்கள் எப்படியோ அப்படி எனக்குச் சங்கீதம்! பாட்டு இல்லாத வாழ்க்கையை என்னால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது," என்று உணர்ச்சி பொங்க இவர் சொன்ன போது இவருக்கு நல்லதொரு எதிர்காலம் உள்ளது என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

ஜூனியரில் மிக ஜூனியர்

•• வி. எல். வேதகிரி, காஞ்சி ஜனார்த்தனன், டீ. வி. கோபாலகிருஷ்ணன் என்று பல முன்னணி வித்வான்களிடம் வயலின் பயின்று வரும் வரதராஜன்தான், இன்று உள்ள ஜூனியர் வித்வான்களுள் மிக ஜூனியராக இருக்க வேண்டும்! பத்தாம் வகுப்பில் படிக்கும் இவர், பக்கவாத்தியம் வாசிப்பதோடு தனிக் கச்சேரிகளும் செய்துள்ளார். சனி, ஞாயிறுகளில் குரோம்பேட்டையிலிருந்து சென்னை பெசன்ட் நகரிலுள்ள டீ. வி. ஜி. வீட்டுக்கு வருகிறார். டீ. வி. ஜி. பாட, வரதராஜன் வாசிக்க, பாடம் நடக்கிறது.

வரதராஜனின் அண்ணா மிருதங்கம் வாசிக்கிறார். அதிகம் பேசாத இந்த இளைஞரின் ஆழமான அமைதியே அவரது ஆற்றலுக்குப் பலம் சேர்க்கும்.

நாற்காலிக்கா பாடுவது?

•• ஆஷா ராமசுவாமி சென்னைப் பல்கலைக் கழகத்தில் இசையில் பி. ஏ. படித்து முதலாவதாகத் தேறி, இப்போது எம். ஏ. மியூசிக் படித்து வருகிறார். தவிர டி. கே. ஜெயராமனிடமும் பாட்டுக் கற்றுக் கொள்கிறார். எம். அனுராதா பி. ஏ. மியூசிக்கில் அடி



* ராகவன்

நட்சத்திரங்கள்!

எடுத்து வைத்துள்ளார். எஸ். கல்யாணராமனின் சிஷ்யையான இவருக்குப் பல முறை மேடையேறிய அனுபவமும் உண்டு. இசை



• அனுராதா

யில் பட்டப் படிப்பு படிப்பது கச்சேரிகள் செய்வதற்குப் பெரிய அளவில் உதவாவிட்டாலும் இசையைப் பற்றிய பூரண ஞானம் பெற உதவுகிறது என்று இருவருமே கருதுகின்றனர். ''பிறர் இசை பற்றிக் கேள்விகள் எழுப்பினால், தக்க முறையில் பதில் சொல்ல நம்மைப் பட்டப் படிப்புத் தயார்ப்படுத்துகிறது'' என்றனர் இவ்விரு பெண்களும்.

அனுராதா, மணிக்புவா தாகுர்தாஸ் என்பவரிடம் ஹிந்துஸ்தானி இசையும் பயின்று வருகிறார். இசையில் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெற வேண்டும், ஓர் இசைப் பள்ளியைத் துவங்க வேண்டும் என்ற குறிக்கோள்கள் இவருக்கு இருக்கின்றன.



• வரதராஜன்

ஆஷா பலவித பாடாந்திர முறைகளைப் பற்றி ஆராய்ச்சி மேற்கொண்டு டாக்டர் பட்டம் பெற வேண்டும் என்று திட்டமிட்டுள்ளார். சமீபத்தில்தான் மேடைக் கச்சேரிகள் செய்ய ஆரம்பித்துள்ளார்.

''இளம் கலைஞர்களுக்காகச் சில அமைப்புக்கள் தோன்றி உதவி வருகின்றன என்றாலும் ஒரு கலைஞருக்கு உண்மையான அங்கீகாரம் பெரிய சபாக்களில் பாடுவதன் மூலம்தான் கிடைக்கிறது. ஆனால், இந்த சபாக்களோ சீசனில் மதியம் இரண்டு மணி



• ஆஷா ராமசுவாமி

கச்சேரியைத்தான் எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு ஒதுக்குகின்றன. இந்தச் சமயத்தில் ரசிகர்கள் வருவதே இல்லை. நாற்காலிகளுக்குப் பாடுவது எங்களுக்கு ஏமாற்றத்தைத்தான் தருகிறது. சபாக்கள் பொருளாதாரக் கண்ணோட்டத்துடன் மட்டுமே செயல்படாமல் எங்களைப் போன்றோருக்கு ஒரு தனி **Youth Series** நடத்தினால் என்ன?'' என்று கேட்கிறார்கள் ஆஷாவும் அனுராதாவும்.

குருவின் பார்வையில்:

•• ''என் சிஷ்யன் ராகவன், பிரில்லியண்ட் பையன்; சொல்லிக் கொடுப்பதை உடனே கிரகித்துக் கொள்ளும் சக்தி அவனுக்கு இருக்கிறது; கேட்டதைத் திரும்பப் பாடுவதற்கு ஏற்ற குரல் இருக்கிறது. எல்லாம் நல்லபடியாக இருந்தால் அவனுக்கு மிக நல்ல எதிர்காலம் அமையும் என்பேன்.'' — சிஷ்யனை மெச்சிக் கொள்கிறார் பாலமுரளி கிருஷ்ணா.

— சீதா ரவி

புகைப்படங்கள்: கே. வி. ஆனந்த்

வட்டமேஜை

'இங்கே மட்டும் என்ன வாழ்கிறது?'

தமிழினத் துரோகிகள் யார்? என்ற தலையங்கத்தைக் கண்டதும் அதிர்ச்சியடைந்தேன். இந்திய இலங்கை ஒப்பந்தத்தைப் புலிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிறீர்களே! அதை ஜெயவர்த்தனாவோ, இல்லை இலங்கை அமைச்சர்களோ, சிங்களவர்களோ ஏற்றுக் கொள்கிறார்களா? பிரபாகரன் ஆட்சியமைத்தால் பத்திரிகை சுதந்திரம் பறிபோய்விடும் என்கிறீர்கள்! இந்திய அமைதிப்படை வீரர்கள், பதினெட்டுப் பேரை விடுவித்த போது பத்திரிகையாளர்களிடம் நடந்து கொண்ட விதம் சரியோ! அவ்வளவு ஏன்? நம் நாட்டில் இந்தியன் எக்ஸ்பிரஸ் மீது நடத்தி வரும் தாக்குதல் எல்லாம் பத்திரிகை சுதந்திரம் தானா?

மேல்பட்டி. எல். மாறன்.

"காளான் எனும் சத்துணவு" கட்டுரை (22.11.87 கல்கி) தொடர்பாக: காளானை வீட்டிலே வளர்க்கலாம்.

ஒரு புட்டி காளான் வித்தின் விலை ரூ. 2.50. தபாலில் பெற இரு புட்டிகளுக்குச் சுமார் ரூ. 23 வரை ஆகலாம். காளான் வித்து கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் பயிர் நோயியல் பிரிவில் கிடைக்கிறது.

காளான் வளர்த்தலில் பயிற்சி, கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் மாதத்தில் ஒரு நாள் அளிக்கப்படுகிறது. யாரும் இலவசமாகப் பயிற்சி பெறலாம். பயிற்சிக்குப் பின்னர் தாங்களே காளான் விதைகளையும் உற்பத்தி செய்ய இயலும்.

பாளையங்கோட்டை. நிர்மலா முருகேசன்.

தலையங்கம், நடுநிலையாளர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் அமைந்திருந்தது. நம் நாட்டில் வாழ்க, ஒழிக என்ற கோஷங்கள் மலிந்து விட்டதைப் போல் 'துரோகிப் பட்டங்களும்' மலிந்துவிட்டன. ஈழப் பிரச்னையைக் கூர்ந்து கவனியாமல், எது போன்ற நடவடிக்கை நன்மையளிக்கும் என்பதை விட்டு விட்டு, மேம்போக்காக, சுயநலத்துடன் பிரச்னையினை அணுகுபவர்களே, இன்று அதிகம்.

சென்னை—15. இரா. சி. இரஞ்சன்

'வெளிச்சம்' மனித உணர்வுகளின் நிறபேதங்களை ஓர் இனிய புதுக்கவிதையாய்ப் படம் பிடித்துக் காட்டியது. படைப்பாளருக்குப் பாராட்டுக்கள்!

சீர்காழி—10. ஆர். எஸ். இராஜ்.

"சமூக நியாயங்கள்" என்ற சிறுகதையில் "எங்களோட கடவுள் நபிதான்" என்று வருகிறது. நபி வேறு. அல்லாஹ் வேறு என்ற அடிப்படை உண்மையை மறந்தது ஏனோ?

சென்னை—44. மு. அலியார்.

ஆள்வோர் மட்டுமின்றி அரசு ஊழியர்களும் அதிகார போதையில் மிதப்பதை, 'குளோஸ்—அப்'பில் காட்டியது 'முச்சந்தியில் ஒரு மோதல்' சிறுகதை.

திருச்சி—8. ஆர். மின்னல் ராஜன்.

இவ்வார கவர் ஸ்டோரியை மிக இயல்பாக எழுதியுள்ளீர்கள்! நேரில் நீங்கள் பார்த்தபோது உங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் எப்படி இருந்ததோ, அதே அனுபவத்தைக் கட்டுரையைப் படித்ததன் மூலம் நாங்களும் பெற்றோம்.

குத்தாலம். எஸ். ராஜா.

'அமெரிக்க சுவாமி நிறுவிய ஆறுமுகன் கோயில்' கட்டுரை மூலம், வெளிநாட்டவர் நம் சமயத்தில் வைத்துள்ள பற்றையும், பக்திச் சிறப்பையும் கண்டு மெய்சிலிர்த்து விட்டது!

மயிலாடுதுறை—2. வி. சந்தன்.

மிகக் கோலாகலமாக நடைபெற்ற எட்டாவது குழந்தை இலக்கிய மாநாட்டின் நிகழ்ச்சிகளைத் தெள்ளத் தெளிவாக எழுதி, குழந்தை எழுத்தாளர்களைக் குதூகலிக்கச் செய்து விட்டீர்களே!

தேனி. தேனி முருகேசன்.

"1000 கட்டினால் 3000; சறுக்கி விட்டால் பரிதாபம்" கட்டுரையைப் படித்தேன். நீங்கள் எச்சரித்தது போலவே சென்னையில் சென்ற வருடம் எனக்கு ஓர் அனுபவம் ஏற்பட்டது. காவல் துறையினர் திருப்பூர் நிறுவனங்களின் பேரில் தக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளதைப் பார்த்து ஓரளவுக்குச் சமாதானம் அடைந்தேன்.

சென்னை—33. ஆர். சுப்ரமணியம்.

எண்டாஸ்கோபி பற்றித் தரமான கட்டுரை கண்டேன். தவறுதலாக விழுங்கி விட்ட ஊசி, செயற்கைப் பல் ஆகியவற்றை எண்டாஸ்கோப் மூலம் சுலபமாக ஆபரேஷன் இன்றி வெளியே எடுக்க முடியும். மது அருந்துவதால் வரும் கல்லீரல் வியாதி காரணமாக உணவுக் குழாயில் உள்ள சில ரத்த நாளங்களிலிருந்து உண்டாகும் ரத்தக் கசிவுகளை எண்டாஸ்கோப் மூலம் வெளியிலிருந்து ஊசி போட்டுக் குணப்படுத்தலாம்.

மதுரை—10. டாக்டர். கே. என். கிருஷ்ணன்.

6.12.87 இதழில், வேளாண்மைப் பட்டதாரிகள், வேலையில்லாமல் இருப்பதைப் பற்றி திரு. கே. தியாகராஜன், கடிதம் பார்த்தேன். டிப்ளமா படித்தவர்கள் யாரும் தற்பொழுது வேளாண்மை அலுவலராகப் பணிபுரியவில்லை (பதவி உயர்வு பெறவில்லை.) வேளாண்மைத் துறையில் உதவி வேளாண்மை அலுவலராக இருந்து வேளாண்மை அலுவலராகப் பதவி உயர்வு பெற்றவர்கள் அனைவரும் கீழ்நிலைப் (மேஸ்திரி) பதவியில் இருந்து வந்தவர்கள். அவர்களின் அடிப்படை கல்வித் தகுதி வெறும் எஸ். எஸ். எல். சி.தான். தற்பொழுது தான் எங்கள் சங்கத்திலிருந்து டிப்ளமா படித்தவர்களை மட்டும்தான் வேளாண்மை அலுவலராகப் பதவி உயர்வு தரவேண்டும் என்ற கோரிக்கையை வைத்துள்ளோம்.

சென்னை—5. டி. குணசீலன்.

துணைத் தலைவர்,
தமிழ்நாடு வேளாண்மைப்பட்டயதாரிகள் சங்கம்.

மற்ற தொழில்களில் உள்ளவர்கள் சங்கங்கள் வைத்துக்கொண்டிருப்பதைப் போல, சங்கீத வித்வான்களும் சங்கம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மற்ற இடங்களைப் போல இங்கேயும் போட்டிச் சங்கம் உண்டு. இந்தப் போக்கு நீடிப்பது இசைத்துறைக்கும், அதில் ஈடுபட்டிருப்போருக்கும் நல்லதுதானா? அகில இந்திய கர்நாடிக் மியூசிஷியன்ஸ் அசோசியேஷன் சங்க உப தலைவர் மகாராஜபுரம் சந்தானமும், செயலாளர் லால்குடி ஜெயராமனும், இன்னொரு சங்கமான கர்நாடிக் மியூசிஷியன்ஸ் ஃபோரத்தின் தலைவரான டி. கே. மூர்த்தியும் நமது சந்தேகங்களுக்குப் பதிலளிக்கிறார்கள்...

சண்டைகள் ஓயுமா? சங்கங்கள் இணையுமா?

டி. கே. மூர்த்தி:

''மகாராஜபுரம் சந்தானம், லால்குடி ஜெயராமன் போன்றோர் ஒன்று கூடி சங்கீத வித்வான்களுக்குச் சங்கம் ஆரம்பிக்கப் போவதாகக் கேள்விப்பட்டு, இனிமேல் ஒன்றுபட்டுக் குரல் கொடுக்க ஓர் அமைப்பு இருக்கும் என்று பல கலைஞர்கள் சந்தோஷப் பட்டார்கள். — இது நடந்தது 1985 இல். பல வித்வான்கள் லால்குடியையும் மகாராஜபுரத்தையும் சந்தித்து, சங்கத்தில் சேர விருப்பம் தெரிவித்தார்கள். ஆனால் ''நாங்கள் சங்கத்தில் இருபது பேரைத்தான் சேர்த்துக் கொள்ளப் போகிறோம்.'' என்ற பதில்தான் அவர்களுக்குக் கிடைத்தது! இத்தனைக்கும் சங்கத்தின் பெயர் அகில இந்திய கர்நாடக சங்கீத வித்வான்கள் சங்கம்! இதற்குப் பிறகு வித்வான்கள் பலர் விழிப்படைந்தார்கள். நான், உமையாள்புரம் சிவராமன், எஸ். ராமனாதன், கே. வி. நாராயணசாமி போன்றோர் ஒன்று கூடி அகில இந்திய கர்நாடக சங்கீத வித்வான்கள் சங்கத்தின் போக்கைக் குறித்துக் கவலையுடன் விவாதித்தோம். பின்னர் நானே லால்குடி மற்றும் மகாராஜபுரம் ஆகியோரின் வீடுகளுக்குச் சென்று 'எல்லா சங்கீத வித்வான்களையும் சேர்த்துக் கொண்டு சங்கம் செயல்பட வேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்தேன். அது எடுபடவில்லை. பின்னர்தான் நாங்கள் ஒன்று கூடி கர்நாடிக் மியூசிஷியன்ஸ் ஃபோரம் என்ற அமைப்பைத் துவங்கினோம். இதில் செம்மங்குடி ஆலோசகராக இருக்கச் சம்மதித்தார். அதே சமயத்தில் சந்தானம் சங்கத்தில் பிரபல வித்வான்கள் பலர் சேர்ந்து அதற்குத் தலைவராகச் செம்மங்குடி தேர்ந்தெடுக்கப்பட்டார். மூத்தவரான அவர் இந்த இரு சங்கங்களையும் இணைக்க வேண்டுகோள் விடுத்தும் பலன் இல்லை.

நாங்கள் தனியே செயல்பட ஆரம்பித்தோம். 'அவர்கள்' சங்கத்தில் ஆண்டுச் சந்தா ஆயிரம் ரூபாய். எங்கள் சங்கத்தில்



• லால்குடி ஜெயராமன்



• டி. கே. மூர்த்தி



மகாராஜபுரம் சந்தானம்

நூறு ரூபாய்தான். இருநூறுக்கு மேற்பட்டவர்கள் எங்கள் சங்கத்தில் உறுப்பினர்களானார்கள். என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். ஆண்டு விழாவின் போது சில கலைஞர்களுக்கும் இசைக் கருவிகள் தயாரிக்கும் கைவினைஞர்களுக்கும் பண முடிப்புக் கொடுத்தோம். தவிர, எங்கள் சங்கம் ஐம்பது பேருக்கு இன்ஷூரன்ஸ் ப்ரீமியம் கட்டிக் கொண்டிருக்கிறது. இப்போதெல்லாம் கர்நாடக இசைக் குழுவில் ஐந்து பேர் சென்றால்தான் ரயில் டிக்கெட்டுக்குச் சலுகை கொடுக்கிறார்கள். ஒருவர் சென்றாலும் கொடுக்க வேண்டும் என்று போராடி வருகிறோம். அதேபோல் வித்வான்களுக்கு வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள் வாங்கவும் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.

தவிர, ஹிந்துஸ்தானி கலைஞர்களுக்குச் சபாக்காரர்கள் தரும் சன்மானமும் சரி, கௌரவமும் சரி, எங்களுக்குத் தரப்படுவதில்லை. இதற்கு இரண்டு சங்கங்களும் இணைந்து குரல் கொடுத்தால் நன்கு எடுபடும். ஆனால் 'அவர்கள்' புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறார்களே!'

வெளிநாட்டில் சான்ஸ் பிடிக்கத்தான் 'அவர்கள்' சங்கம் அமைத்திருப்பதாகச் சிலர் குற்றம் சாட்டினார்கள். சில பிரபல வித்வான்களை மட்டும் சேர்த்துக் கொண்டு அவர்கள் செயல்படுவதைப் பார்த்தால் அதில் ஓரளவு உண்மை இருக்கும் போலத்தான் தெரிகிறது!''

மகாராஜபுரம் சந்தானம், லால்குடி ஜெயராமன்:

''1985 ஆம் ஆண்டு சங்கீத ரிஸர்ச் அகாதமி என்ற அமைப்பின் ஏற்பாட்டில், அமெரிக்காவில் நடந்த ஓர் இசை விழாவுக்குச் சென்றிருந்தோம். மூன்று குழுக்களாகச் செல்வதாக முடிவு செய்யப்பட்டது. முதல் குழு சென்று வந்த பிறகு அடுத்த இரண்டு குழுக்களும் செல்ல இந்திய அரசு உதவவில்லை. மேலும் சென்று வந்த ஒரு குழுவுக்கும் இந்தியாவில் தகுந்த வரவேற்பில்லை. இதனால் நாங்கள் மிகவும் வருந்தினோம். சங்கீத வித்வான்களுக்குக் குரல் கொடுக்க ஓர் அமைப்பு தேவை என்று உணர்ந்தோம். அதன் விளைவுதான் அகில இந்திய கர்நாடிக் மியூசிஷியன்ஸ் அசோசியேஷன்.

இசைத் துறையில் இரண்டு சங்கங்கள் இருந்தால் என்ன ஸார் தப்பு? தினசரி எட்டு நாளிதழ்கள் வருகிறதே! அவை என்ன ஒன்றுக்கொன்று போட்டியா? நாங்கள் எல்லோரும் இசைத் துறைக்குச் சேவை செய்யத்தானே இருக்கிறோம். இப்போது எங்கள் சங்கத்தில் முப்பது பேர் இருக்கிறார்கள். நாங்கள் அதிகம் பேரைச் சேர்க்கப் போவதில்லை. கூட்டம் நிறையச் சேர்த்தால் வீண் விவாதங்கள் வரும். உருப்படியாக ஒன்றும் நடக்காது.

மனித குலத்துக்குக் கடவுள் கொடுத்த மிகப் பெரிய வரப்பிரசாதம் இசை. இதை வைத்துக் கொண்டு மனித குலத்துக்கு நல்லது செய்வதற்கே எங்கள் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. எங்கள் சுயநலத்திற்காக அல்ல. எங்கள் உறுப்பினர்களுக்கு வெளிநாட்டுப் பயணமோ கச்சேரியோ ஒன்றும் புதிதல்ல.

சென்னை சபாக்காரர்கள் நம்ம ஊர் வித்வான்களையும் வட இந்திய வித்வான்களையும் வேறுபடுத்திப் பார்ப்பது குறித்து நாங்கள் ஒன்றும் சொல்வதற்கில்லை. வட இந்திய வித்வான்கள் வருடத்திற்கு ஒரு முறையோ இரு முறையோ வருகிறார்கள். அவர்கள் போக்குவரத்துச் செலவு, தங்கும் செலவு அதிகம். எங்களைப் பொறுத்த வரை சபாக்காரர்கள் நன்கு நடத்துகிறார்கள்.

தொலைக்காட்சியிலும், வானொலியிலும், வட இந்தியாவில் நடக்கும் பல கலைவிழாக்களில் கர்நாடக இசைக்குப் போதுமான அளவு முக்கியத்துவம் தரப்பட வேண்டும் என்று எங்கள் சங்கம் வலியுறுத்தி வருகிறது.

சமீபத்தில் சென்னையின் இரண்டு பிரதான சாலைகளுக்கு முசிறி சுப்பிரமணிய அய்யர், பாபநாசம் சிவன் ஆகியோர் பெயர்களை வைக்கச் சொல்லி எங்கள் சங்கம் தமிழக அரசிடம் கேட்டுக் கொண்டது நல்ல பயனைத் தந்துள்ளது. எங்கள் சங்க உறுப்பினர்கள் அந்தச் சங்கத்தில் சேருவதை நாங்கள் தடை செய்யவில்லை. இந்த வேறுபாடுகளெல்லாம் எங்கள் கச்சேரிகளில் இதுவரை தலைகாட்டியதேயில்லை. இந்தியா முழுவதிலுமிருந்து பிரபல வித்வான்கள் பலர் எங்கள் சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். செம்மங்குடி அவர்கள் எங்களைச் சீரிய முறையில் வழிநடத்திச் செல்கிறார்.

பேட்டி: **ப்ரியன்**



அவர்: ''மனிதச் சங்கிலித் தொடரில் கலந்துக்கிட்டது தப்பாப் போச்சு!''

இவர்: ''ஏன்?''

அவர்: ''என் கையில் இருந்த தங்க மோதிரத்தை எவனோ கழட்டிக்கிட்டான்!''

— சேலம் சேகர்.

வேரில்லாத மரங்கள்

10

— சிவசங்கரி

குளித்து முடித்துத் தலையைத் துவட்டிக் கொண்டே சமையலறைக்குள் மாதவன் எட்டிப் பார்த்தபோது, வசந்தா இன்னமும் அதே நிலையில் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

அலமாரிக்குக் கீழே சுவரில் சாய்ந்து, முழங்கால்களைக் குத்திட்டு அணைத்து, தலையை அதில் ஒரு பக்கமாய்ப் புதைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். வலது கை தன்னிச்சையாய் எரிந்து முடிந்த தீக்குச்சி ஒன்றின் கரி முனையால் தரையில் ஏதோ கிறுக்கிக் கொண்டிருந்தது.

அடுப்பின் மேல், அரை மணிக்கு முன்னால் ஏற்றி வைக்கப்பட்ட அலுமினியச் சட்டி. அதனுள் கொதித்துச் சுண்டிப் போன குழம்பு தீய ஆரம்பித்திருந்தது.

அவசரமாய் உள்ளே நுழைந்து அடுப்பை அணைத்தான் மாதவன்.

"என்ன வசந்தா, குழம்பு ஒட்டிப் போச்சு... கவனிக்கலையா?

அவன் நுழைந்ததோ, அடுப்பை அணைத்ததோ கண்ணில் படாத மாதிரி வசந்தா அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

"வசந்தா... வசு..." என்று மறுபடி கூப்பிட்டவன், அவளருகில் மெள்ளக் குனிந்தான். தோளைத் தட்டி, மீண்டும் "ஏய்... வசு... என்னாச்சு?" என, அவள் திடுக்கிட்டவள் போல் விழித்து, "ஏ... என்ன?" என்றாள்.

"சரியாப் போச்சு! பத்து நிமிஷமா உன்னைப் போட்டு உலுக்கிக்கிட்டு இருக்கேன், நீ என்னான்னா..."

"ஸாரி மாது, ஏதோ நினைப்புல இருந்துட்டேன்... என்ன வேணும் உங்களுக்கு?"

"எனக்கு ஒண்ணும் வேணாம்மா... அடுப்புல பாரு... குழம்பு வத்திப் போய்ச் சட்டியோட ஒட்டிக்கிடுச்சு! நான் குளிக்கப் போறதுக்கு முந்தி அடுப்புல ஏத்தி வெச்சது! இத்தனை நேரம் அதைக் கூடக் கவனிக்காம என்ன யோசனை பண்ணிக்கிட்டிருக்கே? ம்?"

"ப்ச்..."

ஒன்றுமில்லை என்பதை அந்தச் சூள் கொட்டல் பொதுவாகத் தெரிவிக்க, மெதுவாக எழுந்தாள் வசந்தா. மாதவன் கரிசனத்தோடு அவளை அணைத்துக் கொண்டான்.

"சொல்லும்மா... உடம்பு சரியில்லையா? தலையை வலிக்குதா?"

"இல்லே..."

"அப்ப என்னதான் விஷயம்?"

"......"

கிட்டத்தில் குனிந்து ஆள் காட்டி விரலால் மெள்ள அவள் முகவாயை உயர்த்தியவன், "வீட்டு நினைப்பு வந்திடுச்சா? அத்தம்மாவைப் பார்க்கணும்போல இருக்குதாம்மா?" என்றான் சின்னக் குரலில்.

"அதெல்லாம் இல்லே..."

"எதைக் கேட்டாலும் இல்லேன்னு சொல்றே... அதுவும் காலையிலேர்ந்து நானும் பார்த்துக்கிட்டுத்தான் இருக்கேன், ஸம் திங் ஈஸ் டெஃபனெட்லி ராங் வித் யூ... என்கிட்ட சொல்லக் கூடாதுன்னா வேணாம்..."

"......"

"சரி விடு! சொல்ல இஷ்டமில்லாட்டி வேணாம். மணி எட்டாயிடுச்சு! இனிமே சமைச்சு எப்ப சாப்பிட்டு, எப்ப ஆபீஸுக்குப் போறது? நீ இன்னும் குளிக்கக் கூட இல்லே..."

"நா அப்புறமாக் குளிச்சுக்கறேன். நீங்க கிளம்புங்க..." பேசியவாறு இரண்டு அடி வைத்து நடந்தவள், நின்றாள். திரும்பி யோசனையுடன் கேட்டாள், "டிபன் என்ன சாப்பிடறீங்க? ப்ரேட் இருக்கு... வாட்டித் தரவா? வேணாம்னா வெளியில சாப்பிட்டுக்கறீங்களா?"

"இப்ப அதுதான் பெரிய பிரச்னையா? முதல்ல நீ கிளம்பற வழியைப் பாரு. ரெண்டு பேரும் வழக்கம் போல ஒண்ணாத்தானே புறப்படப் போறோம்...? போற வழியில சேர்ந்தே டிபன் சாப்பிட்டுட்டா போச்சு..."

என்ன சொன்னாலும் புரிந்து கொள்ளாமல் சின்னக் குழந்தையாக அவன் பிடிவாதம் பிடிக்க, எரிச்சலுடன் வசந்தா விலுக்கென்று நிமிர்ந்தாள்.

"எதுக்காக இப்படி அடம் பிடிக்கறீங்க மாது? நீங்க முன்னே போங்க. நான் அப்புறமா வர்றேன்னு சொல்றேனில்லே? என்னவோ தெரியல, கொஞ்ச நேரம் தனியா இருந்தால் தேவலை போல இருந்துச்சு... அதைக் கூடப் புரிஞ்சுக்காம..."

அவள் எரிச்சலைப் பொருட்படுத்தாமல், "அதுக்கில்லே வசு..." என்று ஆரம்

பித்தவன். அவள் அறையை விட்டு வெளியேறுவதைப் பார்த்து நிறுத்திக் கொண்டான்.

எதுவும் புரியாத குழப்பத்தோடு அரை நிமிஷம் அப்படியே நின்றுவிட்டுத் தோளைக் குலுக்கி உதட்டைப் பிதுக்கியவன், படுக்கை அறைக்கு வந்து, லுங்கியை அவிழ்த்து, பாண்ட், ஷர்ட் அணிந்து கொண்டான். 'ஷூ' மாட்டிக் கொள்ள நேரமில்லாமல் அவசரமாய்ச் செருப்பில் காலை நுழைத்து, ப்ரீஃப் கேஸைத் தூக்கிக் கொண்டான்.

வாசல் வரை போனவன், ஏதோ நினைத்த மாதிரி உள்பக்கமாய்த் திரும்பி, ''நான் வேணா உங்க ஆபீஸுக்குப் போன் பண்ணி லீவு சொல்லிடட்டுமா? இல்லே, ஒரு மணி நேரம் பர்மிஷனாவது சொல்லட்டுமா வசு?'' என அவன் கேட்டபோது, வசந்தா வெளியே வராமல் அங்கிருந்தே குரல் கொடுத்தாள்.

''எதுவும் வேணாம்... நான் பார்த்துக்கறேன், நீங்க கிளம்புங்க...''

கிளம்பினான்.

மதியத்துக்கு மேல் அலுவலக வேலை ஓரளவுக்கு முடிந்து சற்றே நிமிர்ந்த போது வசந்தா நினைவில் வந்தாள்.

தொலைபேசியை எடுத்து அவள் அலுவலக எண்ணைச் சுழற்றி, ''மிஸஸ் வசந்தா மோரி ப்ளீஸ்'' எனக் கேட்டவனுக்கு, ''ஸாரி, அவங்க இன்னிக்கு வரலே, லீவு...'' என்று பதில் கிடைத்தது.

லீவா?

காலையில் கேட்டபோது லீவு சொல்ல வேண்டாம் என்றாளே?

என்னதான் ஆயிற்று வசந்தாவுக்கு?

அதற்குமேல் வேலை ஓடாமல், என்ன என்கிற கேள்வி குடைய, மானேஜரிடம் சொல்லிவிட்டு அலுவலக நேரம் முடிவதற்கு முன்பாகவே கிளம்பி வீட்டுக்குப் போனான்.

வீடு பூட்டித்தான் இருந்தது.

தன்னிடம் இருக்கும் சாவியினால் திறந்து கொண்டு உள்ளே போனான்.

வீட்டிலும் இல்லாமல், ஆபீஸுக்கும் போகாமல் எங்கேதான் போனாள்?

பிறந்த வீட்டு நினைவு வந்து அத்தையைப் பார்ப்பதற்குப் போயிருப்பாளோ?

சரி, அதைத்தான் சொல்லிவிட்டுப் போனால் என்ன? எதற்காக அந்த முகச் சுளுக்கல்? எரிச்சல்?

யோசிக்க யோசிக்க எதுவுமே புரிபடாமல் போக, உடைகளைக் கூட மாற்றாமல் நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான்.

ஆறரை மணிக்கு மேல் வசந்தா வந்தாள்.

தினம் அலுவலகத்திலிருந்து வந்தவுடன்



பரபரவென்று உள்ளே ஓடி, இரண்டு டம்ளர்களில் காப்பி கலந்து எடுத்து வந்து ஹாலில் கிடக்கும் குட்டி மேஜையில் வைத்துவிட்டு, 'உங்களுக்கு முன்னாடி வந்துரணும்னு பாக்கறேன், முடியலே மாது! பேசாம நீங்க ஒரு ஸ்கூட்டர் வாங்கிக்கிட்டு எனக்கு ஒரு மொபெட் வாங்கிக் குடுத்திடுங்க, என்ன?' என்று சிரிக்கிற மாதிரி இன்று ஏதும் பேசவில்லே.

தளர்ந்து நடந்து வந்தவள், இவன் வந்து உட்கார்ந்திருப்பதைக் கவனியாத தினுசில் உள்ளே நுழைந்து, செருப்பை உதறிப் போட்டுவிட்டு, தரையில் ஒரு பக்கமாய் உட்கார்ந்து சுவரில் சரிந்து கொண்டாள்.

தோளிலிருந்த கைப்பையைக் கூடக் கழற்றி வைக்காமல், தலையைப் பின்னுக்குச் சாய்த்துக் கண்களை மூடிக் கொண்டாள்.

அவள் செய்கை குழப்பத்தை இன்னும் அதிகமாக்க, மாது எழுந்து நின்றான். அவள் அருகில் வந்தான். மெள்ளக் குரல் கொடுத்தான்.

''வசந்தா...''

''......''

''என்ன விஷயம்மா?''

''......''

''ரொம்ப டயர்டா இருக்கிற மாதிரி தோணுதே... எங்கே போயிட்டு வர்றே? காப்பி சாப்பிடறியா? நானும் சாப்பிடல... இன்னிக்கு நானே ரெண்டு பேருக்கும் கலந்து எடுத்திட்டு வர்றேன்... ஓ. கே.?

வசந்தா அலுப்பு விலகாமலேயே நிமிர்ந்தாள். வேண்டாம் என்று தலே அசைத்தாள்.

இப்போது மாதவன் நிஜமாகவே பயந்து போனான்.

''இங்க பார் வசு, என்கிட்ட ஏன் சரியாப் பேசவே மாட்டேன்றே? என் மேல ஏதாச்சும் கோபமா? சொன்னாத்தானே விளங்கும்? இல்லியா? சரி, அப்புறம்? உடம்பு சரியில்லேன்னா டாக்டர்கிட்டேயாவது போயிட்டு வரலாம்... இல்லே வேறே ஏதாவது விஷயம்னா, அதையாவது சொல்லு... இப்படியே இருந்தால் எப்படி?''

வசந்தா 'ப்ச்' என்றாள்.

''டாக்டர்கிட்டயா? அதான் போயிட்டு வந்துட்டனே...''

மாதவன் புருவத்தைச் சுருக்கினான்.

''டாக்டர் வீட்டுக்கா போனே? அதான் இன்னிக்கு ஆபீஸுக்குப் போகலேயா? என்ன செய்யுது உடம்புக்கு?''

''ஒண்ணும் செய்யலே... உடம்பு ரொம்ப ஹெல்த்தியாவே இருக்கு. அதான் டாக்டர்கிட்ட போனேன்...

அவள் பேசுவது எதுவும் புரியாமல் விழித்தவன், சலிப்போடு பக்கத்தில் உட்கார்ந்தான்.

''எனக்கு ஒன்றும் புரியலே வசு... சொல்றதை ஒழுங்காச் சொல்லப் போறியா இல்லியா? எதுக்கு டாக்டர்கிட்டே போனே?''

வசு கண்களைத் தழைய விட்டாள். கிசுகிசுப்பாய்ப் பேசினாள்.

''வந்து... வந்து... தீட்டு வராம தள்ளிப் போயிருக்கு மாது!''

''எ.... என்னது?''





"கர்நாடிக் மியூசிக்கை இம்போசிஷன் மியூசிக்குன்னு ஏன் சொல்றே?"

"அதிலேதானே ஒரு லைனை பத்து வாட்டி, இருபது வாட்டின்னு திருப்பித் திருப்பிப் பாடுவாங்க!"

— ஜம்பு

அந்த 'என்னது!' என்கிற வார்த்தையில் உள்ள அதிர்ச்சி புரிந்த மாதிரி வசந்தா மௌனிக்க, மாதவன் தன்னைச் சுதாரித்துக் கொண்டு படபடப்பாய்ப் பேசினான்.

"விளையாடாதே வசு."

"விளையாட இதுல என்ன இருக்கு மாது?"

"அப்ப! கர்ப்பமாயிருக்கேனு சொல்றே?"

"அப்படித்தான் தோணுது..."

'முருகா!' என்று முனகின மாதவன் எழுந்து நின்று குட்டி போட்ட பூனை போலக் குறுக்கும் நெடுக்கும் நடந்தான். நின்றான்.

"நாமதான் எல்லா ப்ரிகாஷனும் எடுத்துக்கிட்டு இருக்கோமே வசு... அப்புறம்... எப்படி?"

"எனக்கும் புரியலே... எங்கேயோ ஏதோ தவறியிருக்கணும்..."

"அதெல்லாம் சரி, டாக்டர் என்ன சொல்றாங்க? கர்ப்பம்னுதான் உறுதியாச் சொல்றாங்களா?"

"இல்ல ... உறுதியா எதுவும் சொல்லலை. இன்னிக்கு மத்தியானத்துக்கு மேல என் ஃப்ரெண்டைக் கூட்டிக்கிட்டுப் போனேன். 'நாப்பது நாள்ல 'கன்ஃபர்ம்டா சொல்ல முடியாதும்மா, ஐம்பது ஐம்பத்தஞ்சு நாளாவது ஆகணும்'னு சொல்றாங்க. பத்து நாள் கழிச்சு மறுபடி வரச் சொல்லியிருக்காங்க... எதுக்கும் இருக்கட்டும்னு யூரின் டெஸ்டுக்கு எழுதிக் குடுத்தாங்க...

என்ன வசந்தா இது! இது எதுக்கு இப்பப் போயி... இன்னும் நாம சரியா செட்டில் கூட ஆகல... உனக்கு இப்பத்தான் வேலை கன்பர்ம் ஆயிருக்கு... வேற பொறுப்பு எதுவும் இல்லாம ரெண்டு வருஷமாவது ஃப்ரீயா இருக்கணும்னு நினைச்சோம் இல்லே! அதுக்குள்ள! ப்ச்..."

"என்னமோ நா ஏதோ தப்புப் பண்ணின மாதிரி இல்லே சலிச்சுக்கறீங்க! எனக்கு மட்டும் இப்ப குழந்தை பெத்துக்கறதுல விருப்பமா என்ன? ஆபீஸ்ல இப்பத்தான் வேலையே புரிய ஆரம்பிச்சிருக்கு... கன்ஃபர்ம் ஆகி ஒரு மாசம்தான் ஆவுது... அதுக்குள்ள மெடர்னிடி லீவு அது இதுன்னு எடுத்தா மதிப்பாவா இருக்கும்! என்னடா செய்யப் போறோம்னு நானே ரெண்டு நாளாக் கலங்கிப் போயிருக்கேன்..."

வசந்தாவிடம் காணப்பட்ட சோர்வு தனக்கும் தொற்றிக் கொண்ட மாதிரி மாதவனும் தளர்ந்து போனான்.

வெகு நேரம் எதுவும் பேசாமலேயே உட்கார்ந்திருந்துவிட்டு, தனக்குத்தானே ஏதோ யோசனை பண்ணியவாறு மாதவன் எழுந்தான்.

"எழுந்திரு வசந்தா. போய் முகத்தைக் கழுவிக்கிட்டு வா... இப்பிடியே உட்கார்ந்திருந்தா எப்பிடி?"

"முகத்தைக் கழுவிக்கிட்டா பிரச்னை தீர்ந்துடுமா? ஏதாவது ஒரு வழி சொல்லுங்க..."

"என்னத்தைச் சொல்றது? டாக்டர்தான் இன்னும் தீர்மானமா எதுவும் சொல்லலியே! நீயாத்தானே சந்தேகப்படறே? அவங்க சொல்லட்டும் இது கர்ப்பம்தான்னு. அப்புறமா பாப்போம்... இப்ப எழுந்திரு..."

அன்றைக்கு ஏதோ சொல்லி மாது சமாளித்தாலும்கூட, அடுத்து வந்த நாட்களில் வசந்தாவிடம் காணப்பட்ட மாற்றங்கள் கர்ப்பம் உறுதிப்பட்டு விட்டதைத் தீர்மானமாய், தெளிவாய்ப் புரிய வைத்தன.

காலை படுக்கையை விட்டு எழுந்திருக்க விடாமல் வயிற்றைப் புரட்டியது. தலை சுற்றியது. ஒரு வாய் காப்பியோ, சாப்பாடோ உள்ளே போனாலும் குடமாய் வெளியே வந்தது. கண்ணடியில் கருவளையம் மை பூசிற்று. பூவோ, காய்கறியோ, வாசனைத் தைலமோ, ஊதுவத்தியோ — எதன் வாசமும் மூக்கைத் தொடுவதற்கு முன் குமட்டியது.

எப்படியோ சமாளித்துக் கொண்டு ஆபீஸ் போனால், மேஜையிலேயே தலை கவிழ்ந்து கொள்ள, ஒரு மணியும், அரை நாளுமாய் பர்மிஷன் கேட்டுக் கேட்டு வீட்டுக்கே வந்து விழுந்தாள்.

சரியாய் ஐம்பத்து மூன்றாம் நாள் காலை அவளைக் கட்டாயப்படுத்தி எழ வைத்து, ஆட்டோவில் மறுபடி டாக்டரின் கிளினிக்கிற்கு அழைத்துப் போனான் மாதவன்.

ரத்தம், மூத்திரம் பரிசோதனை செய்து, எல்லா ரிப்போர்ட்டுகளையும் டாக்டரிடம் காண்பித்து, அவர் மகிழ்ச்சிச் சிரிப்போடு, "கங்க்ராட்ஸ் மிஸ்டர் மாதவன்... உங்க மனைவி உண்டாகி இருக்காங்க..." என்று கூறுவதற்கு முன்பாகவே இருவருக்கும் தெரிந்து போயிருந்ததால், இப்போது கர்ப்பம் உறுதிப்பட்டதில் புதுசாய் அதிர்ச்சி ஏதும் இருக்கவில்லை.

கல்லில் செதுக்காத குறையாய் விஷயம் தெளிவானதும், இனியும் தயங்குவதில் அர்த்தம் இல்லை என்கிற தீர்மானத்தோடு, டாக்டரின் கிளினிக்கிலிருந்து ஆட்டோவில் வீடு திரும்பி, வீட்டின் உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாய் மாது சொன்னான் —

"இப்ப குழந்தை பிறக்கிறதுல ரெண்டு பேருக்குமே விருப்பம் இல்லே ... அதனாலே ... அதனாலே ... இந்தக் கர்ப்பத்தை உடனடியா, தாமதப்படுத்தாம கலைச்சிட்டா என்ன வசந்தா?"

— (தொடரும்)

பல்லைப்பிடுங்கவும் இசை; 'மூடு' ஏற்றவும் இசை!



என். ஜெயஸ்ரீ

அயல் நாடுகளிலெல்லாம் மருத்துவமனைகள், பெரிய ஹோட்டல்களின் நடைபாதைகள், லிஃப்டுகள் போன்ற பொதுவிடங்களில் மெலிதாக இசை ஒலித்தபடியே இருக்கும்.

இசையைக் கேட்டபடியே வேலை செய்தால் வேலைத் திறமை அதிகரிக்கும் என்று சொல்லப்படுகிறது. இதுகுறித்து ஒரு சிலர் கருத்துத் தெரிவிக்கிறார்கள்:

பல் டாக்டர் ஏ. ஞானம்:

பல் மருத்துவத்தைப் பொறுத்தமட்டில் இசை கேட்டபடி வேலை செய்வது வேலைத் திறமையை அதிகரிக்கும் என்பதை விட, போரடிக்காதிருக்கச் செய்யும். அதாவது கொஞ்சம் 'ரிலாக்ஸ்' செய்தபடியே வேலை செய்ய உதவும் என்றே சொல்ல வேண்டும். பல் டாக்டர் வேலை செய்வது, நோயாளியின் வாயில். எனவே நோயாளியால் பேச முடியாது. வரிசையாய் நோயாளிகள் வந்து கொண்டே இருந்தால் பேசாமலே வேலை செய்வதில் ஒருவித சோர்வு ஏற்பட்டுவிடும். இசை கேட்டபடி வேலை செய்தால் இந்தச் சோர்வு ஓரளவுக்குக் குறையும். ஆனால் அந்த இசை, மிகவும் லேசாக ஒலிக்க வேண்டும். சித்தார், வீணை, வயலின் இசையாய் இருக்கலாமேயொழிய, டிரம்ஸ் போன்ற அதிர்வு ஏற்படுத்தும் கருவியாக இருக்கக் கூடாது. பரீட்சார்த்த முறையில் செயல்படுத்தியபோது, இதை என் பேஷண்ட்டுகளும் வரவேற்றார்கள். எனக்கும் பிடித்திருந்தது. விரைவில் என் கிளினிக்கில் இதை நிரந்தரமாய்ச் செயல்படுத்தவிருக்கிறேன்.

என். ஜெயஸ்ரீ:

இசையைக் கேட்டபடி வேலை செய்தால், வேலைத் திறமை அதிகமாகும் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. ரேடியோவில் பாட்டு கேட்டுக் கொண்டே, ரசத்தில் உப்பு அதிகமாய்ப் போட்டு விடுகிற, அடுப்பில் வைத்த பாலைப் பொங்கி வழிய விட்டு விடுகிற பெண்மணிகள் நிறையப் பேர் இருக்கிறார்கள். ஒரு தொழிற்சாலையில், மெஷின்களின் சத்தத்துக்கு இடையில் எங்கே இசையை ரசிக்க முடியும்? ஒரு டாக்டர் ஆபரேஷன் செய்யும் போது இசையைக் கேட்டுக் கொண்டிருந்தால், நோயாளியின் உயிருக்கு ரிஸ்க் இல்லையா? கோர்ட்டில், ஜட்ஜும், வக்கீல்களும் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தால் வழக்கு எப்போது முடிவது? பாங்க் கேஷியர் இசையைக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு, பணத்தைக் கோட்டை விட்டால் அதற்கு என்ன காரணம்? இசைதானே! ஒரு வேலை செய்து கொண்டிருக்கும் போது, பாட்டோ, இசையோ கேட்டால் கவனம் திசை திரும்பும். அது நிச்சயம் வேலைக்கு இடையூறாகவே இருக்கும். இதில் சந்தேகத்துக்கே இடமில்லை.

டாக்டர். காளியப்பன் (சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மனோதத்துவ நிபுணர்):

சிகரெட் பிடிப்பது, பொடி போடுவது, காப்பி குடிப்பது போல, இசை கேட்டுக் கொண்டு வேலை செய்வதும் மனத்தளவில் ஒரு புத்துணர்வைத் தருகிற ஒரு பழக்கம்தான். இதனால் சோர்வில்லாமல் வேலை செய்ய முடியும் என்பதும், நல்ல 'மூடு' இருக்கும் என்பதும் உண்மைதான். அதுவும் கதை, கவிதை எழுதுவது போன்ற கற்பனையை உபயோகிக்க வேண்டிய வேலைகளுக்கு இனிமையான வாத்திய இசை (வாய்ப்பாட்டு கூடாது) உதவும். ஆனால் இசையைக் கேட்டபடியே வேலை செய்வது என்பது பழகப் பழகத்தான் படியும்.

இசை உடலுழைப்புத் திறனையோ, தரத்தையோ அதிகரிக்குமா என்பது சந்தேகமே!

பேட்டி: ஜூலி

படங்கள்: சோமு







திறக்கமுடியாத கதவுகள்

'ஜனனி'

"ரீடிங் ரூம்" பையன் வழக்கம் போல் ஏதோ சில பத்திரிகைகளைப் படிக்கக் கொடுத்து விட்டுப் போனான்.

அந்தப் பத்திரிகைகளில் ஒன்றின் அட்டையைப் பார்த்த வாணி தன்னை மறந்து போனாள். வனப்பு மிக்க பெண் ஒருத்தி, பரதநாட்டிய முத்திரைகளில் ஒன்றைச் சிரித்த முகத்துடன் — கண்களில் பாவம் பூரணமாக மின்னச் சித்திரித்துக் காட்டுவதை முழுபக்க — பல வண்ணப்படங்களாக மிக நேர்த்தியாகப் பிரசுரித்திருந்தார்கள்.

வேகமாகப் புரட்டிப் பார்த்தாள். பத்திரிகையின் நடுவில் எட்டு பக்கங்கள் அந்தப் பெண்ணின் படங்கள்தான். விதவிதமான பரதநாட்டிய அபிநயத் தோற்றங்கள். பெயர் சுதா கிருஷ்ணமூர்த்தியாம். சோவியத் நாட்டில் நடைபெற்ற இந்தியக் கலை விழாவில், ஏகோபித்த பாராட்டுகளை அள்ளிக் கொண்டு திரும்பியிருந்தாள். அடுத்த மாதம் லண்டன், நியூயார்க் போகிறாளாம்.

வீட்டில் அப்போது வாணியைத் தவிர யாரும் இல்லை. வாயிற் கதவுகளைத் தாளிட்ட பின்னர், தன் அறைக்குள் புகுந்து— அங்கிருந்த ஆள் உயர நிலைக் கண்ணாடி முன் நின்று கொண்டு, தன்னையும் அட்டையில் சிரித்த அந்தப் பெண்ணையும் மாறி மாறிப் பார்த்தாள். ஏதோ வேகத்தில் கணுக்கால்களுக்குக் கீழே தொங்கிய புடைவையைக் கொத்தாக அள்ளி இடுப்பில் செருகிக் கொண்டாள். காலில் சலங்கைகள் இல்லாமலேயே — அந்தக் கண்ணாடியைப் பார்த்தபடியே ஒரு தில்லானாவை ஆடித் தன்னைத் திருப்திப் படுத்திக் கொண்டாள்.

இதற்கு மேல் அவளால் அந்த வீட்டில் செய்ய முடியாது. இது நடந்ததே பெரிய அதிசயம்தான்!

வாணியின் தாத்தா பெரிய அதிகாரியாக இருந்தாலும் நாடகங்களில் நடிப்பதை ஒரு பொழுது போக்காக வளர்த்துக் கொண்டிருந்தார். பாட்டி வீணை வாசித்தால் மணிக் கணக்காகக் கேட்டுக் கொண்டிருக்கலாம். பெரிய விஞ்ஞானிகளில் ஒருவராக மதிக்கப் பட்ட அவள் தந்தை, வயலின் வாசிக்கத் தினமும் ஒரு மணி நேரம் ஒதுக்கியிருந்தார். அம்மா அழகாக ஆலாபனை செய்து ஸ்வர பிரஸ்தாரம் செய்து பாடுவாள். அத்தனையும் ஒட்டு மொத்தமாக வாணி பயின்றிருந்தாள். பாட்டும், பரதமும் வாணியின் ரத்தத்தின் ஒவ்வொரு துளியிலும் கலந்திருந்தன.

அவளுடைய நடன அரங்கேற்றம் பன்னிரண்டாவது வயதில் நடந்தது. பலவிதமான நடனத் தோற்றங்கள் அடங்கிய அவள் போட்டோ ஆல்பங்கள் மட்டும் பத்துக்கு மேல் இருந்தன. வானொலி நடத்திய போட்டிகளில்—சாஸ்திரீய சங்கீதம் மற்றும் மெல்லிசையில் — அடுத்தடுத்த ஆண்டுகளில் முதல் பரிசு பெற்றிருந்தாள். வீணையின் தந்திகளின் மேல் அவள் விரல்களின் நர்த்தனத்தை ரசிக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

வசதியான குடும்பம். எக்கச்சக்கமான சொத்து. பெரிய இடத்தில் மாப்பிள்ளை பார்த்தார்கள்.

சேகர் அவள் கரம் பிடித்தான். சாதாரண சேகர் அல்ல. டாக்டர் சேகர். அவன் அப்பாவும் பெரிய டாக்டர். பிள்ளைக்காகத் தனியாக நர்ஸிங் ஹோம் வைத்துக் கொடுத்திருந்தார். நல்ல 'பிராக்டிஸ்'.

பெண் பார்க்க வந்த போது, அவர்கள் வாணியைப் பாடச் சொல்லவும் இல்லை; ஆடச் சொல்லிக் கேட்கவும் இல்லை. அவளுடன் வரப் போகும் சீர் வரிசைகளின் மதிப்பை மட்டும் துல்லியமாக எடை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

கல்யாண வரவேற்புக்குப் பெரிய பாடகியின் கச்சேரி ஏற்பாடு ஆகியிருந்தது. வாணியின் கவனம் அடிக்கடி பாட்டில் லயித்துப் போவதைக் கவனித்த சேகர் 'எங்கே பராக்கு பார்க்கிறாய்?' என்று அந்த மணப் பந்தலிலேயே கண்டித்தான்.

வாணி புக்ககம் வந்து சேர்ந்தாள். மாமியாரோ—இல்லை, மாமனாரோ — கைப்பிடித்த கணவனோ — என்றாவது ஒரு நாள், ஒரு வேளை — அவள் பரதத்தையும், பாட்டையும் பற்றி விசாரித்துப் பாராட்ட மாட்டார்களா என அந்தப் பேதையின் ஏக்கமாகவே அமைந்து போயிற்று.

பெரிய 'ஸர்ஜனா'க இருந்த மாமனார், வீட்டில் இருந்த போதெல்லாம் அயல் நாட்டு மருத்துவச் சஞ்சிகைகளைப் புரட்டியபடியே இருப்பார். சாதாரணமாக ரேடியோவின் ஒலியைச் சற்று கூட்டினால் கூட ஓரேயடியாகக் கத்துவார். வீட்டில் எப்போதும் 'சுடுகாட்டு அமைதி' அவருக்குப் பிடித்தது.

மாமியாருக்குப் பாட்டு, ஆட்டம் என்றால் சுட்டோடு பிடிக்காது. பாடுபவர்கள், ஆடுபவர்கள் அத்தனை பேர் நடத்தையும் சரியில்லை என்ற அபிப்பிராயம் அவள் அடிமனத்தில் வேர் விட்டுப் போயிருந்தது.

வாணி பெற்ற பதக்கங்கள், பரிசுகள் அத்தனையும் அவள் அப்பா அவள் கூட அனுப்பியிருந்தார். அத்தனையும் பெட்டிகளில் வைத்தபடியே பரண் மேல் வீசப்பட்டு விட்டன.

தன் நடன ஆல்பத்தைத் தன் மாமியாரிடம் ஒருநாள் காட்டினாள் வாணி. 'கல்யாணத்திற்கு முன்பு எப்படி இருந்தாலும் சரி, அது உங்க வீட்டோட.... எங்க குடும்பம் கூத்தாடிப் பரம்பரை இல்லை. யார் கண்ணி

லேயாவது பட்டு, தப்பா நினைக்கப் போறாங்க... எங்கேயாவது மூலையிலே தூக்கிப் போடு..' எனப் பிரித்துக்கூடப் பார்க்காமல் பொரிந்து கொட்டினாள் அந்தப் பெரிய மனுஷி.


நவராத்திரியின் போது மட்டும் யார் அழைத்தாலும் தப்பாமல் வாணி போவாள். அவள் மாமியாரும் வற்புறுத்தி அனுப்பி வைப்பாள். மருமகள் கொண்டு வந்த நகைகளை மற்றவர்கள் பார்க்க — பார்த்து ஆனந்தப்பட இல்லை. பொறுமைப்பட — வேறு ஏது சந்தர்ப்பம்!


வாணிக்கு அதுதான் ஒரு வாய்ப்பு. அவள் குரல் வளத்திற்கு அந்த இடங்களில்தான் இன்னும் குறையாத மதிப்பு இருந்தது. ஒரு கீர்த்தனையாவது நிம்மதியாகப் பாடி விட்டு வர முடியும். கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக இப்படித்தான் செய்து கொண்டிருக்கிறாள் அவள்.

இன்று ஒரு டின்னர் பார்ட்டி. டாக்டர் ஒருவரின் பெண்ணிற்குப் பிறந்த நாள். அவளுக்குப் பரதநாட்டியம் சொல்லிக் கொடுத்திருந்தார்கள். விருந்து துவங்கும் முன் — அந்தக் குழந்தை ஊத்துக்காடு வெங்கடசுப்பையரின் 'ஆடாது அசங்காது வா கண்ணா' என்ற பாட்டிற்கு அபிநயம் பிடித்துக் காட்டினாள்.

வாணி கண்களை இமைக்காமல் பார்த்தாள். இவ்வளவுதானா? பல்லவியில் மட்டும் இன்னும் எத்தனை எத்தனை சங்கதிகள் இருக்கின்றன! எப்படி எப்படி எல்லாம் அபிநயம் பிடிக்கலாம். அவள் மனம் கற்பனையில் பறக்க — மேஜை அடியில் கால்கள் தாளம் போட்டன. கைகள் அபிநயம் பிடிக்கத் துடித்துத் துடித்துத் துவண்டன.

'டின்னர்' முடிந்தவுடன் எல்லோரும் ஒரு வட்டமாக — நடுவில் இடம் அமைத்து — உட்கார்ந்து கொண்டனர். சிலர் கதைகள் சொன்னார்கள். சிலர் 'ஜோக்' அடித்தார்கள். சிலர் 'அறுவை மழை' பொழிந்தார்கள்.





''என்னப்பா இது? கச்சேரி மேடையிலே ஒரு தூளி கட்டியிருக்கு. பக்கத்திலே ஒரு தொட்டில், அப்புறம் ஒரு ஆடு குதிரை!''

''அது ஒண்ணுமில்லே... கச்சேரி செய்யப்போறவித்வான்கள் எல்லாம் ரொம்பச் சின்னவங்களாம் — 'பேபி பிராடிஜி' களாம்!''

— ஜம்புநாத்

இரண்டொரு இளம் வட்டங்கள் 'பிரேக் டான்ஸ்' ஆடிக் காட்டினர்.

''மிஸஸ் சேகர்... நீங்கள் ஒரு பாட்டு பாடுங்கள்!'' என்றாள் கூடியிருந்தவர்களில் ஒருத்தி.

''நோ... அவளுக்குப் பாட வராது!'' என்றான் சேகர் அவசரம் அவசரமாக.

''சும்மா சொல்லாதீங்க டாக்டர்... இன்ஜினியர் சம்பத் வீட்டுக் கொலுவில் அவங்க பாடி நான் கேட்டிருக்கிறேன். என்ன 'ஸ்வீட்' வாய்ஸ் தெரியுமா? அருமையாகப் பாடுவாங்க,'' என அந்தப் பெண் பிடிவாதம் பிடிக்க—

சேகர் வேண்டா வெறுப்பாகத் தலை அசைத்தான்.

வாணி தயக்கத்துடன் பாடத்துவங்கினாள். எடுத்த பல்லவி அதே 'ஆடாது அசங்காது வா கண்ணா'தான்!

பாட்டு முடியும் வரை ஆச்சரியம் கலந்த அலாதி மௌனம். நடனமாடிய பெண், வைத்த கண் வாங்காமல் பிரமித்துப் போய் நின்றாள். நாட்டியம் கற்பித்த ஆசிரியைக்குப் பேச்சே எழவில்லை. அந்தப் பாடலை இத்தனை நேர்த்தியாக, அர்த்த பாவத்துடன் இசைக்க முடியுமா! அந்த மாயக் கண்ணனையே நேரில் பார்த்தது போன்ற உணர்ச்சிக் களிப்பில் — சேகர் உள்பட — அத்தனை பேரும் மூழ்கி எழுந்தார்கள்.

பாடி முடித்தவுடன் எழுந்த கையொலி அடங்க முழுவதாக ஒரு நிமிஷம் பிடித்தது.

''இன்னுமொரு பாட்டு... இன்னுமொரு பாட்டு....'' மாறி மாறிக் கோரிக்கைகள்.

வாணி ஒரு மணி நேரத்திற்கு மேல் பாடினாள்.

வாணியைப் பாராட்டியவர்களைவிட சேகரைப் புகழ்ந்தவர்கள்தான் அதிகம்.

''நீங்கள் ரொம்ப அதிர்ஷ்டசாலி டாக்டர். இப்படிப்பட்ட ஒரு மனைவியை வைத்துக் கொண்டு மூச்சுக் கூடக் காட்டாமல்... ஒன்றும் தெரியாதவர் மாதிரி ரொம்ப அடக்கமாக... நல்ல அழுத்தம் ஸார், நீங்க...''—

நினைவூட்டுகிறோம்!

மாதம் ஒரு மாவட்டம்

கல்கி ஏற்கும் சமுதாயப் பணி

மீண்டும் இராமநாதபுரம், திருச்சி, வடாற்காடு மாவட்டங்களுக்கு வருகிறோம்!


கடந்த ஏப்ரல், மே, ஜுலை மாதக் கல்கி இதழ்களில் இராமநாதபுரம், திருச்சி, வடாற்காடு மாவட்டங்களிலுள்ள பல பிரச்னைகள் பற்றி எழுதியிருந்தோம். அப்போதைய திருச்சி மாவட்டக் கலெக்டர் தவிர, இராமநாதபுரம், வடாற்காடு மாவட்டக் கலெக்டர்கள் இருவரும் அவரவர் மாவட்டப் பிரச்னைகள் தொடர்பாக அளித்த பேட்டியையும் வெளியிட்டிருந்தோம்.

இப்போது அந்தப் பிரச்னைகளெல்லாம் எந்த அளவில் உள்ளன? தீர்வு காணப்பட்டனவா, இல்லையா? தீர்வு காணப்பட்டவற்றையும் எழுதுங்கள்; தீர்வு காணப்படாதவற்றையும் எழுதுங்கள்.

மறுபடியும் நமது நிருபர்கள் வரும் ஜனவரி மாதத்தில் இந்த மூன்று மாவட்டங்களுக்கும் ரீ— விசிட் செய்ய வருகிறார்கள்.

கடிதங்கள் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: 20.12.87. உடனடியாக எழுதி அனுப்புங்கள்.

— ஆசிரியர்



பட்டு முதல்
பருத்தி வரை
அகில இந்திய
ரகங்கள்!

ஹேண்ட்லூம் ஹவுஸ்
வாருங்கள். பட்டு, பிரிண்டட்
சில்க், பாலியஸ்டர், ஷிபான்,
பருத்தி ஆகிய பல ரகங்களில்
பளிச்சிடும் புடவைகள்,
ஷர்ட்டிங், சூட்டிங்குகள்,
ரெடிமேட் ஆடைகள்,
அலங்காரத் துணிகள்.
உங்களுக்குப் பிடித்ததைத்
தேர்ந்தெடுங்கள். யாவும்
அகில இந்திய ரகங்கள்.
அற்புதக் கலைப்படைப்புகள்.



14-12-87 முதல்
பொங்கல் வரை
அனைத்து ரகங்களுக்கும்
20%
சிறப்புத்
தள்ளுபடி

ஹேண்ட்லூம் ஹவுஸ்

(முழுவதும் ஏர்கண்டிஷன்) மத்திய அரசு ஆதரவு பெற்றது.
- 7, ரத்தன் பஜார், சென்னை - 3.
- 134, பேலஸ் ரோடு (LIC பில்டிங்) மதுரை - 1.

ஞாயிறு அன்றும் விடுமுறை நாட்களிலும் விற்பனை உண்டு.

CANCO/HH/253

[redacted]

தளபதி திடமதி

பரிசு ரூ. 400!



சமுதாய, அரசியல் பிரச்னைகள் அல்லது நிகழ்ச்சிகள் குறித்துத் தமது அதிமேதாவித்தனமான கருத்துக்களை வெளியிடாமல் இருக்க மாட்டார் தளபதி திடமதி. பொதுக் கூட்டத்திலோ அல்லது தமது தலைவர், அமைச்சர் அல்லது சக தொண்டரிடமோ என்ன சொல்வார் என்பதை ஊகித்து, கீழே கூப்பனில் எழுதி அனுப்புங்கள். பிரசுரமானால் பரிசு ரூ. 25. ஒருவரே எழுதிய துணுக்குகள் சில அடுத்த பல இதழ்களில் பிரசுரமானால் ஒவ்வொரு முறையும் பரிசு இரட்டிப்பாகும். அதிகபட்சமாக ஒரு துணுக்குக்கு ரூ. 400 பெற வாய்ப்புண்டு. உறை மீது "தளபதி திடமதி" என்று குறிப்பிடவும்.

கூப்பன்:

கல்கி 20.12.87 இதழ் — முடிவு தேதி: 29.12.87.

தளபதி திடமதி: "..................................

....

....

....

....

....

....

....

என் பெயர்: ....

விலாசம்: ....

....

இப்படிச் செல்லமாகக் குறை கூறியவர்கள் உண்டு.

பாராட்டுகள் தலைக்கேற சேகர் தன்னை மறந்து "என் மனைவி நாட்டியம் கூடக் கற்றிருக்கிறாள். ஒரு நல்ல டான்ஸர் கூட" எனக் கூறிவிட்டான்.

"ஆண்டி... எனக்காக ஒரே ஒரு டான்ஸ்.. ப்ளீஸ்... ஆண்டி..." எனச் சலங்கைகளைக் கையில் வைத்துக் கொண்டு கெஞ்சினாள் அந்த டாக்டரின் பெண்.

வாணி சேகரைப் பார்த்தாள். அத்தனை பேரும் அவன் அனுமதிக்காகக் காத்திருக்க, அந்த உற்சாகத்தில் சேகர் 'உம்' எனத் தலை அசைத்தான்.

அடுத்த ஒரு மணி நேரம், வாணி எடுத்துக் கொண்ட பாட்டு 'பாவயாமி'. அவள் தன்னை மறந்து ஆடினாள். மனத்தில் ஒரு பெரிய அரங்கில் ரசிகர்கள் முன்னிலையில் ஆடுவதாக நினைவு. ராமாயணம் முழுவதையும் அங்கே பார்த்தார்கள். ராமன் வில்லை ஒடித்தான்; சீதை நாணினாள்... அத்தனையும் தத்ரூபமாக!

இரவு பன்னிரண்டைத் தொட்டதை யாரும் உணராமல் லயித்துப் போனார்கள்.

வீட்டுக்கு வந்ததும், சேகர் வாணியைத் தன்னருகில் வளைத்து அணைத்துக் கொண்டான்.

"ஏன் வாணி! நம்ம பெண் சுகன்யாவிற்கு நீ ஏன் பாட்டும் பரதமும் கற்றுக் கொடுக்கக் கூடாது?"

வாணி அவன் கைகளை விலக்கிக் கொண்டு எழுந்தாள். விளக்கைப் போட்டுவிட்டு அவனை ஏளனமாகப் பார்த்தாள். இத்தனை நாட்களும் மனத்தில் புதைத்து வைத்திருந்ததையெல்லாம் வெள்ளமாகக் கொட்டினாள்.

"நீங்களா இப்படிக் கேட்கிறீர்கள்?... இத்தனை வருஷங்கள் கழித்து?... உம்... எனக்கு இப்போது வயது முப்பத்தைந்து. சுகன்யாவிற்குப் பன்னிரண்டு முடியப் போகிறது. இருபத்திரண்டு வயதில் இந்த வீட்டிற்கு வந்தேன். ஒரு நாள் பாடியிருப்பேனா? ஆடியிருப்பேனா? நீங்கள் சொல்வது ஒரு விதத்தில் சரிதான். அந்த டாக்டர் பெண் ஆடும் போது, பாடும் போது நம்ம பெண் சும்மா இருந்தால் எப்படி? நம்ம 'ஸ்டேடஸ்' என்ன ஆவது? சுகன்யா புத்திசாலி; பெரிய டாக்டரின் பெண் ஆயிற்றே! எல்லாவற்றையும் சீக்கிரம் பிடித்துக் கொள்வாள். அந்தக் குழந்தையின் மனத்தில் ஓர் ஆசையை வளரவிட்டு — அதை வெறியாக ஊக்கப்படுத்தி — அப்புறம் என்னைப் போல் கல்யாணமாகி — அந்த வீட்டில் 'சங்கீதம் கிலோ என்ன விலை? நாட்டியம் மீட்டர் கணக்கில் கிடைக்குமா?' எனக் கேட்கப் போய் மனம் வெறுத்து.... வேண்டாம்... வேண்டாம்.. ப்ளீஸ் — என் பெண்ணிற்கு அப்படிப்பட்ட ஒரு ஏமாற்றம் வேண்டவே வேண்டாம்!"

அத்தனை வேகமாகக் கோபமாக வாணி இதுவரை பேசி அறியாத சேகர் வாயடைத்துப் போனான்.

• ராஸ லீலா — ராஜ்குமார் சிங்காஜித்சிங்.



மணிப்புரி நடனம்

சிவபெருமானும் உமையம்மையும் சேர்ந்து நடனமாட அழகிய அரங்கத்தைத் தேடித் தேடி, கடைசியாக, மலைகள் சூழ்ந்த ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். அப்போது சந்தியா காலம் முடிந்து இருள் சூழத் தொடங்கியிருந்தது. ஆதிசேடனுக்குத்தான் சிவதாண்டவத்தைப் பார்க்க எப்போதும் ஆசையாயிற்றே. தேவர்கள் வேறு வந்து குழுமி விட்டார்கள். அனந்தன் தன் ஆயிரம் சிரங்களிலும் உள்ள ஒளிசிந்தும் மணிகளைத் தன் முடிகளின் மீது தாங்கினார். சிவபெருமானுக்கும் தேவிக்கும் ஒளியுள்ள அரங்கம் அமைந்து விட்டது. ஆனந்தத் தாண்டவத்தைக் கண்டு களித்தார்கள், தேவர்களும் முனிவர்களும்.

இப்படி அனந்தனுடைய சிரோன்மணிகளால் ஒளி பெற்றுத் திகழ்ந்த இடத்துக்கு மணிப்பூர் என்று பெயர் வந்ததாம்.

மணிப்பூரின் தலைநகரான இம்பாலில் கோவிந்த்ஜியின் கோயிலுக்குப் போனால்

மேடைக் கலையல்ல: வாழ்க்கை முறை!



• ஸவிதா பென் மேத்தா.

தீபாராதனை சமயத்தில் பெரிய தாளங்களோடு வைஷ்ணவ பக்தர்கள் வந்து குழுமுவதைப் பார்க்கலாம். லயத்தோடு மந்திரங்களைச் சொல்லி வழிபாடு செய்கிறார்கள், அவர்கள். சங்கொலியும் சந்தியா காலமும் பக்திப் பெருக்கும் சேரும்போது பகவான் பிரத்யட்சமாகியிருப்பதாகவே தோன்றுகிறது நமக்கு. மணிப்பூரில் எல்லாரும் கோபிகள். எல்லாரும் ராஸ் ஆடுவதற்கு வாய்ப்பு உண்டு. மணிப்புரி நாட்டியம் கற்றுக்கொள்பவர்கள் குருதக்ஷிணை தர வேண்டியதில்லை. யார் வேண்டுமானாலும் கற்றுக்கொள்ளலாம். மணிப்பூரில் நாட்டியமாடாதவர்கள் குறைவு. நாட்டியம் இல்லாத விழாவே கிடையாது. காது குத்தும் சடங்கிலிருந்து, திருமணம், உபநயனம் போன்ற வைபவங்களிலும் நாட்டியம் ஆடுவார்கள். இறுதி ஊர்வல நாட்டியம்தான் ரொம்பத் தடபுடலாக இருக்கும். மணிப்பூர் மக்களிடையே நாட்டியம் ஒரு வாழ்க்கை முறையாகவே இருக்கிறது.

மணிப்புரி நாட்டியம் பாரத நாடெங்கும் பிரசித்தி அடைந்ததற்கு பம்பாய் ஜவேரி

சகோதரிகள் முக்கிய காரணமாவார்கள். ஸவிதா பென் மேத்தா என்ற மற்றொரு கலைஞரும் மணிப்புரியின் எல்லாவிதமான நாட்டிய வகைகளையும் கற்றறிந்தார். சமீப காலத்தில் மணிப்பூர் அரசாங்கமும், ஸங்கீத் நாடக் அகாதமி நடத்தி வரும் ஜவாஹர்லால் நேரு மணிப்புரி அகாதமியும் கலைஞர்களுக்கு ஊக்கமளித்து வருகின்றன. நாட்டின் எல்லாப் பிரதேசங்களுக்கும் கலைஞர்கள் சென்று தங்கள் திறனைக் காட்ட வகை செய்து வருகின்றன.

புதிய முயற்சிகளைச் செய்து வரும் மணிப்புரி கலைஞர்களுள் ஒருவர் இவ்வாண்டு கிருஷ்ண கான சபையில் நிருத்திய சூடாமணி விருதுபெறும் ராஜ்குமார் சிங்காஜித் சிங். அவருடைய சாகுந்தல நாடகம் ரஸிகர்களின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்றது. சிறந்த ரஸனை உணர்ச்சியுடன் இவர் தயாரித்து அளிக்கும் நாட்டிய நாடகங்கள் புதியவையாகவும், ஸம்பிரதாய நாட்டியங்களிலிருந்து வேறுபட்டு இருந்தாலும் ரசிகர்கள் பாராட்டும்படியாக இருக்கின்றன. இவரது மனைவியும் மணிப்புரி நாட்டியக் கலைஞர்.

பாகவத புராணத்தில் வரும் ராஸ லீலை நாட்டியம் தனித்தன்மை கொண்ட நாட்டியமாக மணிப்பூரில் உருவெடுத்தது. வஸந்த ராஸ், குஞ்ச ராஸ், மஹா ராஸ் என்று பல விதமான ராஸ லீலை நடனங்கள் உண்டு.

மணிப்புரி நாட்டியத்தின் நளினமும் அழகும் ஒட்டு மொத்தமாக வஸந்த ராஸ் நாட்டியத்தில் மிளிர்கிறது எனக் கூறலாம்.

ஆண்கள் ஆடும் நாட்டியங்களான பங் சோளம் பிரமிக்கும்படியாக இருக்கும். பங் என்ற இசைக் கருவியை வாசித்துக் கொண்டே ஆடுவார்கள். வாத்தியத்தோடு ஆகாயத்தில் எழும்பி, பம்பரமாகச் சுழன்று லயம் பிசகாமல் தரையில் குதிப்பார்கள். நாதமும், ஆட்டமும் பக்தியும் நம்மைக் கிறங்கச் செய்துவிடும். கர தாளங்களோடு செய்யும் நாட்டியங்களும் உண்டு.

வாள், ஈட்டி முதலியவற்றுடன் ஆடும் போர் நிருத்தங்கள் உலகப் புகழ்பெற்றவை. தாங் யஹுபா என்ற இந்த நாட்டியம் பண்டைக் காலத்தில் ஆண் குழந்தைகளுக்குக் கல்வியாகவே போதிக்கப்பட்டது. வேட்டையைக் கூடக் கலையாக மாற்றியவர்கள் இந்த மக்கள்.

ஒரு வகையில் இவையெல்லாம் மக்கள் நாட்டியமாக இருந்தாலும் சாஸ்திரீயக் கலையாக அங்கீகரிக்கப்படும் அளவுக்குக் கலைத்திறனில் உயர்ந்து விளங்குகின்றன.

சமீப காலத்தில் மணிப்புரி நாட்டிய பாணியில் புதிய நாட்டிய நாடகங்கள் அமைத்து வெற்றி கண்டிருக்கிறார்கள். ஜவாஹர்லால் நேரு மணிப்புரி நாட்டிய அகாதமியினர் செய்து காட்டிய ஒரு மணி நேர நாடகம் தலைநகரில் நல்ல வரவேற்பைப் பெற்றது. வனங்களையும் வனவிலங்குகளைக் காக்க வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்திருந்த இந்த நாட்டியம் மணிப்பூர் காடுகளில் வாழும் ஒரு வகை மான்களைப் பற்றியது. கதையும், மான்கள் துள்ளித் திரியும் காடுகளும், அவை மனிதர்களைக் கண்டு பயப்படுவதும், அவற்றின் துயரமும் மனத்தை உருக்குவதாக அமைந்திருந்தன.

— ஆனந்தி



"வயலின் வித்வான் வர்றேன்னு தந்தியை அனுப்பியிருக்கிறார்."

"பாக்கி வயலின், வில் எல்லாத்தையும் எப்போ அனுப்புவாராம்?"

—நாத்

"நேத்து நடந்த இரட்டையர்கள் கச்சேரியிலே ஒரு வேடிக்கை பார்த்தியா?"

"என்ன?"

"ஒருத்தர் ஆலாபனை பண்ணி மேல் பஞ்சமத்தைத் தொட்டபோது, சும்மா இருந்த அடுத்தவருக்கு மேல் மூச்சு வாங்கித்தே அதான்!"

—ராகவன்





அத்தியாயம் 36

தகுதிக்கு மதிப்பு உண்டா?

இளவரசரும் 'நந்தினி'யும் நின்ற இடத்தை நோக்கி வந்தியத்தேவன் விரைவாகவே நடந்தான். அவன் அவ்விடத்தை அடைவதற்குள் கொஞ்சம் சந்தேகம் தோன்றி விட்டது. இவள் நந்தினிதானா? பழுவூர் ராணிக்குரிய ஆடை ஆபரணங்கள் ஒன்றுமில்லையே! சந்நியாசினியைப் போல் அல்லவா எளிய உடை தரித்திருக்கிறாள்? முகம் நந்தினியின் முகம் மாதிரி தோன்றுகிறது. ஆனால் ஏதோ ஒரு வித்தியாசமும் இருக்கிறது. அது என்ன?

அவர்கள் நின்ற இடத்துக்கு வந்தியத்தேவன் சென்றதும் அந்த ஸ்திரீ நகர்ந்து வீதி ஓரத்து வீடுகளின் நிழலில் மறைந்தாள். வந்தியத்தேவன் பரபரப்புடன் அவளைத் தொடர்ந்து செல்லப் பார்த்தான். இளவரசர் அவனுடைய கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினார்.

''ஐயா! அந்த ஸ்திரீ யார்? பார்த்த முகமாகத் தோன்றியது!'' என்றான்.

இதற்குள் அங்கு வந்து சேர்ந்த ஆழ்வார்க்கடியான், ''அந்த ஸ்திரீ சோழ நாட்டின் குல தெய்வமாகத்தான் இருக்க வேண்டும். அதோ பாருங்கள்! நாம் அச்சமயம் நகர்ந்திரா விட்டால் இத்தனை நேரம் புத்தர் பெருமானின் சரணங்களை அடைந்திருப்போம்'' என்றான்.

திருமலை சுட்டிக் காட்டிய இடத்தைப் பார்த்தார்கள். அங்கே கட்டடத்தின் மேற்பகுதி இடிந்து விழுந்திருந்த இடம் ஒரு சிறிய குன்றைப் போல இருந்தது. ஒரு பெரிய யானையைக்கூட அந்தக் குன்று வெளியில் வர முடியாதபடி அமுக்கிக் கொன்றிருக்கும். மூன்று சிறிய மனிதர்கள் எம்மாத்திரம்?

''நல்ல சமயத்திலேதான் நம் குல தெய்வம் தோன்றி நம்மைக் கையைத் தட்டி அழைத்தது'' என்றார் பொன்னியின் செல்வர்.

''இளவரசே! அந்த ஸ்திரீயை யார் என்று சொன்னீர்கள்?'' என்று வந்தியத்தேவன் வியப்புடன் கேட்டான்.

''உமக்கு யார் என்று தோன்றியது? அவளைத் தொடர்ந்து போக ஏன் யத்தனித்தீர்?'' என்று இளவரசர் கேட்டார்.

''சோழர்களின் குல தெய்வம் என்றல்லவா இந்த வைஷ்ணவர் சொன்

அமரர் கல்கி

ளார்? சோழர் குலத்துக்குக் கேடாக வந்த தேவதையாக எனக்குத் தோன்றியது.''

''அப்படியென்றால்...? யார் என்று எண்ணிச் சொல்கிறீர்?''

''என்னுடைய பிரமைதானோ என்னமோ? பழுவேட்டரையர் இளைய தாரமாக மணந்திருக்கும் நந்தினி தேவி என்று தோன்றியது. உங்கள் இருவருக்கும் அப்படிப் படவில்லையா?'' என்றான் வந்தியத் தேவன்.

''நான் நன்றாய்ப் பார்க்கவில்லை. ஆனாலும் அது உன் சித்தப் பிரமையாகத்தான் இருக்க வேண்டும். பழுவூர் ராணி இங்கு எப்படி வந்திருக்க முடியும்?'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''இவர் சொல்வது முழுதும் சித்தப் பிரமையன்று. கண்ணின் பிரமையும் அதில் சேர்ந்திருக்கிறது. அப்படி ஒரு அதிசயமான முக ஒற்றுமை இருப்பதாக எனக்குக் கூடச் சில சமயம் தோன்றியதுண்டு... வாருங்கள்! நடந்து கொண்டே பேசலாம்!'' என்றார் இளவரசர்.

வீதி ஓரமாக வீடுகளின் நிழலில் நடப்பதற்குப் பதிலாக இப்போது மூவரும் நடு வீதியில் நிலா வெளிச்சத்தில் நடக்கத் தொடங்கினார்கள்.

சற்று நடந்ததும், ''இளவரசே! தங்களைக் கையைத் தட்டி அழைத்து அந்த அம்மாள் என்ன சொன்னாள்?'' என்று ஆழ்வார்க்கடியான் கேட்டான்.

''என்னைத் தேடிக் கொண்டு இரண்டு சத்துருக்கள் வந்திருக்கிறார்கள் என்று சொன்னாள். அவர்கள் என்னைக் கொல்வதற்குச் சமயத்தை எதிர் நோக்கிக் கொண்டிருப்பதாகவும் சொன்னாள்.''

''அடி பாவி! ஒருவேளை எங்களைப் பற்றித்தான் அப்படிச் சொன்னாளா என்ன?'' என்று வந்தியத் தேவன் திடுக்கிட்டுக் கேட்டான்.

பொன்னியின் செல்வர் சிரித்துவிட்டு, ''இல்லை, நீங்கள்தான் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அப்படி நீங்களாகவே இருந்தாலும் கவலையில்லை. என் உயிர் மிகக் கெட்டியானது என்று அந்தத் தேவி சொல்லியிருக்கிறாள். முன்னம் பல தடவை என்னைக் காப்பாற்றியும் இருக்கிறாள்!'' என்றார்.

''ஐயா! அந்த இரண்டு பகைவர்கள் யார் என்பது எனக்குத் தெரியும். அவர்கள் பார்த்திபேந்திர பல்லவருடன் தங்களைத் தேடி வந்தவர்கள். இடிந்து விழுந்த மாளிகையில் இரண்டு உருவங்கள் தெரிந்தன. அவர்களாகத்தான் இருக்க வேண்டும்!'' என்றான் திருமலை.

''ஐயா! வைஷ்ணவரே! இதை முன்னமேயே ஏன் சொல்லவில்லை! நீங்கள் மேலே செல்லுங்கள். நான் போய் அந்த இடிந்த வீட்டைச் சோதனை போட்டு விட்டு வருகிறேன்!'' என்று வந்தியத்தேவன் திரும்ப யத்தனித்தான்.

இளவரசர் அவனை மறுபடியும் கையைப் பிடித்து நிறுத்தி, ''அவசரம் ஒன்றுமில்லை. அந்தப் பாழடைந்த வீட்டில் அவர்களைக் கண்டு பிடிக்கவும் முடியாது. பிறகு பார்த்துக் கொள்ளலாம். நான் மறு உத்தரவு போடும் வரையில் நீர் என்னுடனேயே இருக்க வேண்டும், தெரிகிறதா? இந்தப் பாழடைந்த நகரத்தில் இன்னும் எந்த மூலை முடுக்கில் என்ன அபாயம் காத்திருக்கிறதோ, யார் கண்டது? வீர சிகாமணியே! உம்மை நம்பியல்லவா நான் வேறு யாரையும் மெய்க்காவலுக்கு அழைத்து வரவில்லை? இப்படி நடு வீதியில் என்னைக் கை விட்டுப் போய் விட்டால் நான் என்ன செய்வேன்?'' என்றார்.

இந்த வார்த்தைகள் வந்தியத் தேவனைப் போதை கொள்ளச் செய்தன. அவன் நாத் தழுதழுக்க, ''ஐயா! உங்களை விட்டு இனி நான் ஒரு கணமும் அகல மாட்டேன்!'' என்றான்.

ஆழ்வார்க்கடியான், ''உன்னை விட்டு நானும் அகல மாட்டேன். இளவரசருக்கு நீ காப்பு; உனக்கு நான் காப்பு'' என்று சொன்னான்.

சிறிது நேரத்துக்கெல்லாம், மகாஸேன சக்கரவர்த்தியின் பாழடைந்த மாளிகையின் உட்புறத்தை மூவரும் அடைந்தார்கள். விசாலமான ஓர் அறையில் மூன்று பேருக்கும் பழைய காலத்துக் கட்டில்களில் படுக்கை விரித்திருந்தது. மூவரும் படுத்துக் கொண்டார்கள். அறையின் ஒரு பக்கத்துச் சுவரில் இருந்த பலகணியின் துவாரங்கள் வழியாக நிலா வெளிச்சம் உள்ளே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

"பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் இந்த அரண்மனையில் இதே இடத்தில் இலங்கையின் சக்கரவர்த்திகளும் இளவரசர்களும் அவர்களுடைய அந்தப்புர மாதரசிகளும் படுத்திருந்திருப்பார்கள். அப்போதும் இதே மாதிரி நிலாவின் கிரணங்கள் இந்தப் பலகணியின் வழியாக எட்டிப் பார்த்திருக்கும். இப்போது அதே இடத்தில் நம்மைப் போன்ற சாதாரண மனிதர்களைப் பார்த்து விட்டு இந்த நிலாக் கிரணங்கள் ஏமாற்றமடையும். இல்லையா, வந்தியத்தேவரே!" என்றார் அருள்மொழிவர்மர்.

"ஐயா! தங்களையும் இந்த வைஷ்ணவரையும் பற்றி நீங்கள் எது வேணுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள். என்னை மட்டும் சாதாரண மனிதன் என்று சொல்ல வேண்டாம்!" என்றான் வல்லவரையன்.

"மறந்து விட்டேன்; மன்னிக்க வேண்டும். தாங்கள் பூர்வீகமான வல்லத்தரசர்கள் குலத்தில் பிறந்த அரசிளங் குமரர் அல்லவா?...."

"ஆம், ஐயா, ஆம்! என் மூதாதை ஒருவரைப் பற்றி ஒரு புலவர் பாடியிருப்பதைக் கேட்டால் இந்த வீர வைஷ்ணவர் பொறாமையினால் புழுங்கிச் செத்துப் போனாலும் போய் விடுவார்."

"போனாலும் போகட்டும்! திருமலை நல்ல தமிழ் அபிமானி, பல்லவ குலத்து நந்திவர்மனைப் போல் தமிழ்ப் பாடலுக்காக உயிரைக் கொடுக்கவும் தயங்க மாட்டார். ஆகையால், பாடலைச் சொல்லுங்கள், கேட்கலாம்."

கொஞ்சம் தயக்கத்துடன் வல்லவரையன் பின்வரும் பாடலைக் கூறினான்:

"என்கவிகை என்சிவிகை
என்கவசம் என்துவசம்
என்கரி மீ(து) என்பரி மீது
என்பரே—மன் கவன
மாவேந்தன் வாணன்
வரிசைப் பரிசுபெற்ற
பாவேந்தரை, வேந்தர்
பார்த்து!"

அதைக்கேட்ட பொன்னியின் செல்வர் "திருமலை, நீ தமிழ்ப் புலவனாயிற்றே! இந்தப் பாடலின் பொருள் என்ன, சொல்!" என்றார்.

"ஐயா! என்னைப் பரிசோதிக்கிறீர்கள் போலும். ஆகட்டும், இதோ சொல்லுகிறேன். மாவேந்தர் வாணரின் அரண்மனை வாசலில் சிற்றரசர்கள் பலர் இராஜ தரிசனத்துக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு இலேசில் தரிசனம் கிட்டவில்லை. ஏனெனில், பாவேந்தர்களாகிய கவிராயர்கள் முன்னமே அரண்மனைக்குள் சென்றிருந்தார்கள். அவர்களுடைய பாடல்களைக் கேட்டு விட்டு வாணப் பேரரசர் மன மகிழ்ந்தார். அவர்களுக்குப் பரிசில்கள் கொடுத்து அனுப்பினார். பூச்சக்கரக் குடைகள், தந்தப் பல்லக்குகள், முத்துக் கவசங்கள், ரத்தினத் துவஜங்கள், யானைகள் குதிரைகள் முதலிய பலவகைப் பரிசுகள் கொடுத்து அனுப்பினார். ஆசார வாசலில் காத்திருந்த சிற்றரசர்கள் அந்தப் பரிசில்களைப் பார்த்து வயிறெரிந்து, 'அடடா! இது என் குடை அல்லவா? என் பல்லக்கு அல்லவா? என் யானை அல்லவா? என் குதிரை அல்லவா? இந்தப் பாழும் புலவர்கள் கொண்டு போகிறார்களே!' என்று புலம்பினார்கள். அந்தச் சிற்றரசர்கள் மாவேந்தர் வாணருக்குக் காணிக்கைகளாகக் கொண்டு வந்து கொடுத்திருந்த பொருள்களை வாண மன்னர் புலவர்களுக்கு வெகுமதியாகக் கொடுத்து அனுப்பிக் கொண்டிருந்தார். இளவரசே! பாடலுக்குப் பொருள் சரிதானே?"

"நீ சொல்லுவதில் தவறு இருக்குமா? அடாடா! என்ன அற்புதமான பாடல்! எவ்வளவு நயமான கற்பனை!

இதைப் பாடிய மகாகவி யாரோ தெரியவில்லை! வாணர் குல திலகமே! வந்தியத் தேவரே! உமது மூதாதைகளின் ராஜ்யம் பெரிதோ, சிறிதோ, அதைப் பற்றிக் கவலையில்லை. இந்த மாதிரி ஒரு பாடலைப் பெற்றார்களே, அதைக் காட்டிலும் அவர்களுக்குச் சிறப்பு என்ன வேண்டும்! அவர்களுடைய குலத்திலே பிறந்த தாம் இந்த அரண்மனையில் படுக்கத் தகுந்தவர்தாம்! மகா ஸேனரின் கட்டில் மாத்திரம் என்ன? சாக்ஷாத் துஷ்டகமனு சக்கரவர்த்தி படுத்திருந்த கட்டில் இப்போது கிடைக்குமானால் அதிலேயே நாம் படுக்கலாம். நீர் அதற்குத் தகுதி வாய்ந்தவர்தாம்!''

''ஆமாம், ஐயா! ஆமாம்! நான் எதற்கும் தகுதி வாய்ந்தவன்தான். ஆனால் இந்த நாளில் தகுதிக்கு யார் மதிப்புக் கொடுக்கிறார்கள்? அந்த பிக்ஷுக்கள் இந்த இலங்கா ராஜ்யத்தின் கிரீடத்தை எனக்குக் கொடுத்தார்களா? வேண்டாம் என்று மறுதலிக்கக் கூடிய தங்களைப் பார்த்துத் தானே கொடுத்தார்கள்? அப்போது எனக்கு என்ன ஆத்திரம் வந்தது தெரியுமா? கிரீடத்தைத் தூக்கி என் தலையில் நானே சூட்டிக் கொண்டு விடலாமா என்று பார்த்தேன்! இந்த வீர வைஷ்ணவர் போட்டிக்கு வந்து விடுவாரே என்று சும்மா இருந்து விட்டேன்!''

இதைக் கேட்டதும் அருள்மொழி வர்மர் கலகலவென்று உரத்துச் சிரித்தார். அந்தச் சிரிப்பின் ஒலியைக் கேட்டு வந்தியத்தேவன் உள்ளம் மகிழ்ந்தது. வெளிப்படையில் மேலும் கோபத்தைக் காட்டி, ''சிரித்தால் மட்டும் சரியாகப் போய் விட்டதா? செய்த தவறுக்குப் பரிகாரம் என்ன?'' என்றான்.

''ஐயா! வாணகுல திலகமே! சத்தியம், தர்மம் என்று சொன்னேனே! சிம்மாசனம் வேண்டாம் என்று மறுத்ததற்கு அவை சரியான காரணங்கள் என்று தங்களுக்குப் படவில்லையா?''

''சத்தியம், தர்மம் இவற்றின் பேரில் ஏற்கெனவே எனக்குக் கொஞ்சம் சபலம் இருந்தது. இனிமேல் அவற்றின் முகத்திலேயே விழிப்பதில்லை, எவ்வித சம்பந்தமும் வைத்துக் கொள்வதில்லை என்று முடிவு செய்து விட்டேன்.''

''அடாடா! ஏன்? எதற்காக அப்படிப்பட்ட முடிவு செய்தீர்? அவற்றின் பேரில் என்ன கோபம்?''

''கோபம் ஒன்றுமில்லை. சத்தியம், தர்மம் என்னும் கன்னியர் மீது தாங்கள் காதல் கொண்டு விட்டதாகச் சொல்லவில்லையா? அதற்காக இந்த இலங்கா ராஜ்யத்தைத் தியாகம் செய்ததாகவும் சொல்லவில்லையா? வேறொருவர் காதலித்த பெண்களை நான் மனத்தினாலும் நினைப்பதில்லை!''

பொன்னியின் செல்வர் மறுபடியும் கடகடவென்று சிரித்தார். ''உம்மைப் போல் வேடிக்கைக்காரரை நான் பார்த்ததே இல்லை!'' என்றார்.

''ஆம், ஐயா! தங்களுக்கு வேடிக்கையாயிருக்கிறது. எனக்கு வயிறு எரிகிறது. இலங்கைச் சிம்மாதனம் தங்களுக்கு வேண்டாம் என்றால், பக்கத்தில் நான் நின்றேனே, என் பக்கம் கை காட்டி 'இவனுக்குக் கொடுங்கள்!' என்று சொல்லியிருக்கக் கூடாதா?'' என்றான் வந்தியத்தேவன்.

அருள்மொழி வர்மர் சிரித்து ஓய்ந்த பிறகு, ''வந்தியத் தேவரே! இராஜ்யத்தை ஏற்றுக்கொள்வது அவ்வளவு எளிய காரியமா? அதிலும் புத்த பிக்ஷுக்கள் கொடுத்து ஏற்றுக் கொள்வது சிறிதும் முறையல்ல. பின்னால் பெரிய விபரீதங்களுக்கு இடமாகும். மதத் தலைவர்கள் மத விஷயங்களுடன் நிற்க வேண்டும். மதத் தலைவர்கள் இராஜரீக காரியங்களில் தலையிட்டால் மதத்துக்கும் கேடு; இராஜ்யத்துக்கும் கேடு. மேலும் இன்று எனக்குச் சிம்மாசனம் கொடுக்க வந்த புத்த பிக்ஷுக்கள் இந்த நாட்டிலுள்ள எல்லா புத்த மதத்தாருக்கும் தலைவர்கள் அல்ல. இவர்கள் ஒரு கூட்டத்துக்குத் தலைவர்கள். இவர்களுடைய சங்கத்தைப் போல் இன்னும் இரண்டு சங்கங்கள் இருக்கின்றன. இவர்களிடம் நாம் இராஜ்யத்தை ஒப்புக்கொண்டால் இவர்களுடைய இஷ்டப்படி இராஜ்யம் ஆள வேண்டும். மற்ற இரு சங்கத்தாரும் உடனே நம் விரோதிகள் ஆவார்கள்!'' என்றார்.

''வல்லத்திளவரசருக்கு இப்போது இவ்விடத்து நிலைமை புரிந்ததா?'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''புரிந்தது, புரிந்தது! அங்கே விஷ்ணு பெரியவரா சிவன் பெரிய

"எல்லா கணக்கையும் சரியா போட்டா உனக்கு ட்ரை-மி தருவேன்!"




"ட்ரை-மி என்றால் கணக்கில்லாமல்
சாப்பிட்டு விடுவேன்!"



PARRY'S
பாரிஸின் தரமான தயாரிப்புகள்
காரமில்க் • சாக்லேட் எக்ளேர்ஸ்
ட்ரை-மி • கோகனட் கிரீம் • சாக்லேர்ஸ்
லாலிபாப்ஸ் • காஃபி பைட்


Parry's
The King of Sweets

HTA 7036



பங்கா.

கையால் இயக்கப்படும் விச . பழங்காலம் தொட்டு இந்தியாவில் பழக்கத்தில் இருந்து வருகிறது. எளிய வடிவமைப்பு. அலங்காரமான கைப்ப டியுடன், உலோகம், மரம் அல்லது துணியினால் ஆன இறக்கைப் பகுதி. வலுவானதும் சிக்கனமானதுமான குளுமை வசதி. பங்கா—எல்லோரது வாழ்வையும் வளப்படுத்தும் மனித விடாமுயற்சியைப் பிரதிபலிக்கும் சின்னமாக விளங்குகிறது.



மீண்டும் மீண்டும்
சுவைக்கத் தூண்டும்
நியூட்ரின்
மில்க் பிஸ்கட்ஸ்
nutrine
BISCUITS
MILK
nutrine
ACIL/009/86-Tam

வரா என்று சண்டை போடுகிற மூடர்களைப் போல் இங்கேயும் உண்டு என்று புரிந்தது!'' என்றான் வந்தியத் தேவன்.

''நீங்கள் இங்கே சண்டை ஆரம்பித்து விடாதீர்கள். இரவு வெகு நேரம் ஆகிவிட்டது. அதோ பெரஹரா ஊர்வலத்திலிருந்து ஜனங்கள் கலைந்து வரும் சப்தமும் கேட்கிறது. இனிமேல் சற்றுத் தூங்கலாம்'' என்றார் இளவரசர்.

''எனக்குத் தூக்கம் வராது. நடு வீதியில் கையைத் தட்டி அழைத்து நம்மை உயிருடன் சமாதியாகாமல் காப்பாற்றிய அம்மாள் யார் என்று தெரிந்து கொண்டால்தான் தூக்கம் வரும்.''

''அவள் யார் என்பது இன்னும் எனக்கும் தெரியாது. ஆனால் அவளைப் பற்றி எனக்குத் தெரிந்த செய்திகளை வேணுமானால் சொல்லுகிறேன். கேட்க விரும்பினால் என் அருகில் வந்து உட்காருங்கள்!'' என்று சொன்னார் இளவரசர்.

அத்தியாயம் 37
காவேரி அம்மன்

வந்தியத் தேவனும், ஆழ்வார்க்கடியானும் ஆர்வத்துடன் எழுந்து போய் இளவரசரின் கட்டிலுக்குப் பக்கத்தில் கீழே உட்கார்ந்தார்கள். இளவரசர் பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்:—

''நான் சிறு பையனாயிருந்த போது ஒரு சமயம் காவேரி நதியில் என் பெற்றோர்களுடன் படகில் போய்க் கொண்டிருந்தேன். என் தமையனும் என் தமக்கையும் கூட அச்சமயம் படகில் இருந்தார்கள். அவர்கள் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். நான் மட்டும் காவேரி நதியின் நீர் சுழித்துச் சுழித்து ஓடுவதையும் அந்தச் சுழிகளில் சில சமயம் கடம்ப மலர்கள் அகப்பட்டுக் கொண்டு சுழல்வதையும் கவனித்துக் கொண்டிருந்தேன். அந்தச் சின்னஞ் சிறிய பூக்கள் அப்படிச் சுழலில் அகப்பட்டுத் தவிப்பதைப் பார்த்து எனக்கு வேதனை உண்டாகும். சில சமயம் படகின் ஓரமாகக் குனிந்து தவிக்கும் கடம்ப மலர்களை நீர்ச் சுழல்களிலிருந்து எடுத்து விடுவேன். அப்படி எடுத்து விட்ட ஒரு சமயத்தில் தவறித் தண்ணீரில் விழுந்து விட்டேன்! தலை குப்புற விழுந்தபடியால் திணறித் திண்டாடிப் போனேன்!

''காவேரியின் அடி மணலில் என் தலை இடித்த உணர்ச்சி இப்போதும் என் நினைவில் இருக்கிறது. பிறகு வேகமாக ஓடிய தண்ணீர் என்னை அடித்துத் தள்ளிக் கொண்டு போனதும் நினைவிருக்கிறது. எங்கேயோ வெகு தூரத்தில் பலருடைய கூக்குரல்களின் சத்தம் கேட்டது போலிருந்தது. மூச்சுத் திணறத் தொடங்கியது. சரி, காவேரி நதி நம்மைக் கடலில் கொண்டு போய்த் தள்ளிவிடப் போகிறது என்று நினைத்துக் கொண்டேன். பெற்றோர்களும் தமக்கையும் தமையனும் நம்மைக் காணாமல் எவ்வளவு துன்பப்படுவார்கள் என்ற நினைவும் உண்டாயிற்று. அந்தச் சமயத்தில் யாரோ என்னை இரு கைகளாலும் வாரி அணைத்து எடுத்தது போலிருந்தது. அடுத்த கணத்தில் தண்ணீருக்கு மேலே வந்து விட்டேன். தலை, கண், மூக்கு, வாய் எல்லாவற்றிலிருந்தும் தண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. ஆயினும் என்னை வாரி எடுத்துக் காப்பாற்றிய கைகள் என் கண்ணுக்குத் தெரிந்தன. பிறகு அந்தக் கரங்களுக்குரியவரின் முகத்தையும் பார்த்தேன். சில கண நேரந்தான் என்றாலும், அந்த முகம் என் மனத்தில் பதிந்து விட்டது. இதற்கு முன் எப்போதோ பார்த்த முகமாகவும் தோன்றியது. ஆனால் இன்னார் என்பதாகத் தெரியவில்லை.

பின்னர் அந்தக் கைகள் வேறு யாரிடமோ என்னைக் கொடுத்தன. மறு கணம் நான் படகில் இருந்தேன். தாய் தந்தை, தமக்கை, தமையன் எல்லாரும்

என்னைச் சுற்றிக் கொண்டார்கள். அவர்களுடைய துயரமும், பரிவும், அன்பும், ஆதரவும் என் கவனத்தை முழுதும் கவர்ந்து விட்டன. சிறிது நேரத்திற்குப் பிறகு என்னைத் தண்ணீரிலிருந்து எடுத்துக் காப்பாற்றியது யார் என்பதைப் பற்றிக் கேள்வி எழுந்தது. ஒருவரையொருவர் கேட்டுக்கொண்டார்கள். என்னையும் கேட்டார்கள். நானும் சுற்று முற்றும் பார்த்தேன். அந்தத் தெய்வீகமான முகத்தை எங்கும் காணவில்லை. ஆகையால் கேள்விக்கு மறுமொழி சொல்ல முடியாமல் விழித்தேன். கடைசியில் எல்லாருமாகச் சேர்ந்து காவேரி அம்மன் தான் என்னைக் காப்பாற்றியிருக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள். நான் நதியில் விழுந்து பிழைத்த தினத்தில் ஆண்டுதோறும் காவேரி அம்மனுக்குப் பூஜை போடவும் ஏற்பாடு செய்தார்கள். ஆனால் என் மனத்தில் மட்டும் திருப்தி ஏற்படவில்லை. என்னைக் காப்பாற்றியது காவேரி அம்மனாயிருந்தாலும் சரி, வேறு மானிட ஸ்திரீயாயிருந்தாலும், என் மனத்தில் பதிந்திருந்த அவளுடைய திரு முகத்தை இன்னொரு தடவை தரிசிக்க வேண்டும் என்ற தாபம் என் மனத்தில் குடி கொண்டு விட்டது. காவேரி நதிப் பக்கம் போகும்போதெல்லாம் திடீரென்று அத் தேவி நீரிலிருந்து எழுந்து எனக்குத் தரிசனம் தரமாட்டாளா என்ற ஆசையுடன் அங்குமிங்கும் பார்ப்பேன். நாளாக ஆக, அவள் ஒரு மானிட ஸ்திரீயாகவே இருக்கலாம் என்ற எண்ணம் வலுப்பட்டது. ஆகையால் எந்தத் திருவிழாவுக்குப் போனாலும் அங்கே கூடியுள்ள மூதாட்டிகளின் முகங்களையெல்லாம் நான் ஆர்வத்தோடு உற்றுப் பார்ப்பது வழக்கம். சில காலத்துக்குப் பிறகு அப்படிப் பார்ப்பது அவ்வளவு நல்ல வழக்கமன்று என்பதை உணர்ந்தேன். வருஷம் ஆக ஆக, மறுபடியும் அந்தத் தெய்வ முகத்தைத் தரிசிக்கலாம் என்ற ஆசையை இழந்து விட்டேன்.

"சுமார் ஒரு வருஷத்துக்கு முன்னால் நமது தென் திசைப் படைகளின் மாதண்ட நாயகனாகி நான் இங்கு வந்து சேர்ந்தேன். அதற்கு முன்பே



சேனாபதி பூதிவிக்கிரம கேசரி இலங்கையில் பல பகுதிகளைப் பிடித்திருந்தார். இந்த அநுராதபுரம் பல தடவை கைமாறி அப்போது மறுபடியும் மகிந்தன் படைகளின் வசத்தில் இருந்தது. இந்நகரை நம் வீரர்கள் முற்றுகையிட்டிருந்தார்கள். முற்றுகை நடந்து கொண்டிருந்த சமயத்தில் நான் இலங்கையின் பல பகுதிகளையும் பார்த்துத் தெரிந்து கொள்ள விரும்பினேன். பொறுக்கி எடுத்த ஆயிரம் வீரர்களை என்னுடன் சேனாபதி அனுப்பி வைத்தார். நம் சைன்யத்தின் வசப்பட்டிருந்த எல்லாப் பகுதிகளுக்கும், காடு, மேடு, மலை, நதி ஒன்றும் விடாமல் போய், அந்தப் பிரதேசங்களின் இயல்பை நன்கு தெரிந்து கொண்டு வந்தேன். இந்த இலங்கைத் தீவையொட்டிக் கடலில் பல சிறிய தீவுகள் உண்டு என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அந்தத் தீவுகளுக்கும் போய்ப் பார்த்து வந்தேன். இப்படிச் சுற்றி வருகையில் ஒரு சமயம் இந்த நகரத்துக்கு வடக்கே சில காத தூரத்தில் காட்டின் மத்தியில் தாவடி போட்டுக் கொண்டு தங்கியிருந்தோம். நாங்கள் தங்கியிருந்த இடத்தின் பக்கத்தில் 'யானை இறவு'த்துறை இருந்தது. அங்கே இலங்கைக்குக் கிழக்கேயுள்ள கடலும் மேற்கேயுள்ள கடலும் மிக நெருங்கி வந்து ஒரு குறுகிய கால்வாயின் மூலம் ஒன்றுசேருகின்றன. அந்தத்துறையின் வழியாகச் சில சமயம் யானை மந்தைகள் இலங்கையின் வடபகுதிக்குச் செல்லுவது வழக்கமாம். ஆகையால் அந்த இடத்துக்கு 'யானை இறவு' என்று பெயர் வந்ததாகச் சொல்லுகிறார்கள். நாங்கள் அங்கே தங்கியிருந்த சமயத்தில் ஒரு விசித்திரமான சம்பவம் நிகழ்ந்தது. இரவு நேரங்களில் தாவடிக்குச் சமீபத்தில் ஒரு புலம்பல் குரல் கேட்டது. அது மனிதக் குரலா, பட்சியின் குரலா, விலங்கின் குரலா என்று முதலில் தெரியவில்லை. கேட்பவர்கள் ரோமம் சிலிர்க்கும்படியான சோகம் அதில் தொனித்தது. முதலில், தாவடியின் ஓரத்தில் இருந்த வீரர்கள் காதில் விழுந்தது. அதை அவர்கள் பொருட்படுத்தாமல் இருந்தார்கள். பிறகு, பாசறையைச் சுற்றிலும் பல இடங்களிலும் கேட்டது. என்னிடத்திலும்



சிலர் வந்து சொன்னார்கள். நான் அதை இலட்சியம் செய்யவில்லை. 'பேய் பிசாசு என்று பயப்படுகிறீர்களா? அப்படியானால் ஊருக்குத் திரும்பிப் போய் அம்மா மடியில் பயமின்றிப் படுத்துத் தூங்குங்கள்!' என்றேன். இதனால் அவர்களுக்கு ரோஷம் வந்துவிட்டது. அப்படி ஓலமிடுகிற குரல் மனிதக் குரலா, விலங்கின் குரலா அல்லது பிசாசின் குரலா என்று தெரிந்து கொள்ளத் தீர்மானித்தார்கள். ஓலம் வந்த இடத்தை நோக்கி ஓடிப் போய்ப் பார்த்தார்கள். அவர்கள் அருகில் நெருங்கியதும் அந்தக் குரலுக்குரிய உருவம் ஓடத் தொடங்கியது. அது ஒரு பெண்ணின் உருவம்

போலத் தோன்றியது. ஆனால் அந்த உருவத்தை இவர்களால் பிடிக்க முடியவில்லை. அதற்குப் பிறகும் அந்த ஓலம் நிற்காமல் அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தது.

''முதலில் அதை நான் இலட்சியம் செய்யாமல் தானிருந்தேன். ஆனால் என்னுடைய வீரர்களுக்கு இதைத் தவிர வேறு பேச்சே இல்லாமற் போய் விட்டது. உண்மையிலேயே சிலர் பயப் பிராந்தி கொண்டு விட்டார்கள். அதன் பேரில் மர்மம் இன்ன தென்பதைக் கண்டறியத் தீர்மானித்தேன். ஒரு நாள் இரவு அந்த ஓலம் வந்த திசையை நோக்கி நானும் சில வீரர்களும் சென்றோம். புதர் மறைவிலிருந்து ஒரு ஸ்திரீ உருவம் வெளிப்பட்டது. ஒரு கண நேரம் எங்களைப் பார்த்து விட்டுத் திகைத்து நின்றது. மறுபடி ஓடத் தொடங்கியது. எல்லாருமாகத் துரத்திச் சென்றால் அந்த உருவத்தைப் பிடிக்க முடியாது என்று என் மனத்திற்குள் ஒரு குரல் கூறியது. எனவே, மற்றவர்களை 'நில்லுங்கள்' என்று சொல்லி நிறுத்தி விட்டு, நான் மட்டும் தொடர்ந்து ஓடினேன். ஒரு தடவை அந்த உருவம் திரும்பிப் பார்த்தது. தனி ஆளாக நான் வருவதைப் பார்த்து என்னை வரவேற்கும் பாவனையில் காத்துக் கொண்டிருந்தது. இப்போது எனக்கும் திகிலாகத்தான் போய் விட்டது. ஒரு விநாடி நேரம் தயங்கி நின்றேன். மறுபடி நெஞ்சை உறுதிப் படுத்திக் கொண்டு முன்னால் சென்று அந்தப் பெண் உருவத்தை நெருங்கினேன். நிலா வெளிச்சம் அவள் முகத்தில் நன்றாக விழுந்தது. தெய்வீகமான அம் முகத்தில் புன்னகை அரும்பியிருந்தது. அந்தக் கணத்தில் எனக்கு நினைவு வந்து விட்டது. காவேரி அம்மன் இவள்தான்! என்னை வெள்ளம் அடித்துப் போகாமல் எடுத்துக் காப்பாற்றிய தெய்வ மங்கை இவள்தான்!... சற்று நேரம் பிரமை பிடித்தவன் போல் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். பிறகு 'தாயே! நீ யார்! இங்கே எப்போது வந்தாய்? எதற்காக வந்தாய்? உன்னை எத்தனையோ காலமாக நான் தேடிக் கொண்டிருந்தேனே? என்னைப் பார்க்க விரும்பினால் நேரே என்னிடம் வருவதற்கென்ன? இந்தத் தாவடியைச் சுற்றி ஏன் வட்டமிடுகிறாய்? ஏன் புலம்புகிறாய்?' என்று அலறினேன். அந்த மாதரசி மறு மொழி சொல்லவில்லை. மீண்டும் மீண்டும் நான் கேட்டும் பயனில்லை. சிறிது நேரத்துக்கெல்லாம் அவளுடைய கண்களில் கண்ணீர் பெருகத் தொடங்கியது. அந்தக் கண்ணீர் என் நெஞ்சைப் பிளந்தது. அவள் ஏதோ சொல்லமுயற்சி செய்தாள் என்று தோன்றியது. ஆனால் வார்த்தை ஒன்றும் வரவில்லை. உருத்தெரியாத சப்தம் ஏதோ அவள் தொண்டையிலிருந்து வந்தது. அப்போது சட்டென்று எனக்குத் தெரிந்துவிட்டது — அவள் பேசும் சக்தி இல்லாத ஊமை என்று. அப்போது நான் அடைந்த வேதனையைப் போல் என்றும் அடைந்ததில்லை. இன்னது செய்வதென்று தெரியாமல் நான் செயலற்று நின்றேன். அந்த ஸ்திரீ சட்டென்று என்னைக் கட்டித் தழுவி உச்சி மோந்தாள். அவள் கண்ணீர்த் துளிகள் என் தலையில் விழுந்தன. உடனே, அடுத்த கணத்திலேயே, என்னை விட்டு விட்டு ஓடினாள். திரும்பிப் பார்க்கவும் இல்லை. நானும் அவளைத் தொடர்ந்து செல்லமுடியவில்லை. பாசறைக்குச் சென்றதும் என்னை ஆவலோடு சூழ்ந்து கொண்டு கேட்ட வீரர்களிடம், 'அவள் பேயும் அல்ல, பிசாசும் அல்ல; சாதாரண ஸ்திரீதான்! வாழ்க்கையில் ஏதோ பெருந் துயரத்தினால் சித்தப் பிரமை கொண்டிருக்கிறாள். மறுபடியும் அவள் வந்தால் அவளைத் தொடர்ந்து போய்த் தொந்தரவு செய்யாதீர்கள்!' என்று கண்டிப்பாகக் கட்டளையிட்டேன்.

''மறுநாள் முழுதும் அங்கிருந்து தாவடியைக் கிளப்பிக் கொண்டு போய் விடலாமா என்ற யோசனை அடிக்கடி எனக்குத் தோன்றி வந்தது. ஆனாலும் முடிவு செய்யக் கூடவில்லை. ஒரு வேளை மறுபடியும் அந்த ஸ்திரீ வரக்கூடும் என்ற ஆசை மனத்திற்குள் இருந்தது. இத்தகைய யோசனையிலேயே பொழுதும் போய் விட்டது. இரவு வந்தது. நான் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. தாவடிக்கு அருகில் அந்த ஓலக் குரல் கேட்டது. நான் மற்ற வீரர்களிடம் என்னைப் பின் தொடர்ந்து வர வேண்டாம் என்று

சொல்லி விட்டுக் குரல் கேட்ட இடத்தை நோக்கிப் போனேன். அந்தப் பெண்ணரசி என்னை முதல் நாள் மாதிரியே புன்னகையுடன் வரவேற்றாள். சிறிது நேரம் என்னை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஏதோ சொல்ல முயன்றாள். எனக்கு விளங்கவில்லை.

பிறகு கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போனாள். அவளுடன் போவதற்கு எனக்குக் கொஞ்சம் கூடத் தயக்கம் உண்டாகவில்லை. காட்டு வழியில் போகும் போது முள் செடிகளின் கிளைகள் என் மீது படாத வண்ணம் அவள் விலக்கி விட்டுக் கொண்டு போனது என் நெஞ்சை உருக்கியது. கொஞ்ச தூரம் போன பிறகு ஒரு குடிசை தென்பட்டது. அந்தக் குடிசைக்குள் ஓர் அகல் விளக்கு மினுக்கு மினுக்கு என்று எரிந்தது. அந்த வெளிச்சத்தில் அங்கே படுத்திருந்த கிழவன் ஒருவனைக் கண்டேன். அவன் நோயாகப் படுத்திருந்தான் என்பதைத் தெரிந்து கொண்டேன். அவன் உடம்பெல்லாம் பொறுக்க முடியாத குளிரினால் நடுங்குவது போல் நடுங்கிக் கொண்டிருந்தது. அவன் உடம்பையே சில சமயம் தூக்கித் தூக்கிப் போட்டது. பற்கள் கிட்டிப் போயிருந்தன, கண்கள் சிவந்து தணல்களைப் போல் அனல் வீசின. ஏதேதோ உருத் தெரியாத வார்த்தைகளை அவன் பிதற்றிக் கொண்டிருந்தான்......

''உங்களுக்கு நினைவில் இருக்கிறதா? இன்று பாதாளக் குகையில் நாம் பார்த்த மகாபோதி விஹாரத்தில் ஒரு பிக்ஷு நடுங்கிக் கொண்டிருந்தார் அல்லவா? அவர் பேரில் தேவர்கள் ஆவிர்ப்பவித்திருந்ததாகச் சொன்னார்கள் அல்லவா? அப்போது எனக்குக் காட்டின் மத்தியில் குடிசையில் பார்த்த கிழவன் ஞாபகம் வந்தது. அந்தப் பிக்ஷுவின் பேரில் தேவர்கள் ஆவிர்ப்பவித்திருக்கிறார்களா அல்லது நடுக்கு சுரம் என்னும் கொடிய நோய் ஆவிர்ப்பவித்திருக்கிறதா என்ற சந்தேகம் ஏற்பட்டது. அதைப் பற்றி நான் பிரஸ்தாபிக்கவில்லை. ஏன் பிரஸ்தாபிக்க வேண்டும்! ஏன் அந்தப் பக்திமான்களின் நம்பிக்கையைக் கெடுக்க வேண்டும்? இந்த வருஷத்தில் இந்தப் பெரஹராத் திருவிழா நடப்பதற்கு அனுமதி கொடுத்தேனே, ஒரு விதத்தில் பெரிய தவறு செய்து விட்டேன் என்று தோன்றுகிறது. ஏற்கெனவே பாதிக்கு மேல் அழிந்து போயிருக்கும் இந்தப் புராதன நகரத்திற்குக் குளிர் காய்ச்சலும் வந்து விட்டால் என்ன கதி ஆவது? மிச்சமிருக்கும் ஜனங்களும் இங்கிருந்து ஓடவேண்டியதுதான்..."

இவ்வாறு சொல்லி அருள்மொழிவர்மர் ஏதோ யோசனையில் ஆழ்ந்தார்.

சற்றுப் பொறுத்துப் பார்த்துவிட்டு வந்தியத்தேவன் ''ஐயா! இந்த நகரம் எப்படியாவது போகட்டும். குடிசையில் பிறகு என்ன நடந்தது? சொல்லுங்கள்!'' என்றான்.

''குடிசையில் ஒன்றும் நடக்கவில்லை. அந்த மாதரசி நான் அதிக நேரம் அங்கு நிற்கக்கூடாது என்று கருதினாள் போலிருக்கிறது. உடனே என் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியில் வந்து விட்டாள். பிறகு, சில சமிக்ஞைகள் மூலம் தான் சொல்ல விரும்பியதைச் சொன்னாள். அவள் சொல்ல விரும்பியது என்னவென்பதை என் மனம் தெரிந்து கொண்டு விட்டது. 'இந்தப் பிரதேசத்தில் இருக்க வேண்டாம். இங்கே இருந்தால் இந்தக் குளிர் காய்ச்சல் நோய் வந்துவிடும். உடனே இங்கிருந்து தாவடியைப் பெயர்த்துக் கொண்டு போய் விடு!' என்று அவள் சமிக்ஞைகளின் மூலமாகச் சொல்லி, என்னையும் தெரிந்து கொள்ளச் செய்து விட்டாள். என் பேரில் அவளுக்குள்ள அளவில்லாத அன்பின் காரணமாகவே இந்த எச்சரிக்கை செய்ததாகவும் அறிந்து கொண்டேன். தெய்வத்தின் எச்சரிக்கையாகவே அதை எடுத்துக் கொண்டு அன்றிரவே தாவடியை அங்கிருந்து கிளப்பும்படி கட்டளையிட்டேன். என்னுடனிருந்த வீரர்களுக்கும் அது மகிழ்ச்சியை உண்டாக்கிற்று. அந்தப் பயங்கரமான ஓலக் குரலை இனி கேட்கவேண்டாம் என்று எண்ணி அவர்கள் உற்சாகமடைந்தார்கள்....''

(தொடரும்)

ராகமும்

"கையெழுத்து எதுக்கு?''

— சீதம்மா தளர்ந்த குரலில் கேட்கிறாள்.

இதற்குள், மூன்றாவது நாட்டுப் பெண், தன் ஓரகத்தியிடம் முணுமுணுப்பது காதில் விழுகிறது.

''கிழத்துக்கு என்ன பயம் பாரு... அதான், இருக்கிறதையெல்லாம் பொண்களுக்கு வாரி வழங்கியாச்சே. இங்கே என்ன சொத்து தட்டு கெட்டுப் போறது...''

'இவர்கள் எல்லோரும் எனக்குக் காது மந்தம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்'

— தொண்ணூறு வயசைத் தொட்டுக் கொண்டிருந்த சீதம்மா மனத்துக்குள் சொல்லிக் கொள்கிறாள்.

சாதாரணச் செவியா அவளுடையது?

மகா வித்வான்களின் மதுர கானத்தில் திளைத்த செவியாயிற்றே...

அது என்னமோ — தேகத்திலுள்ள மற்ற அவயவங்களெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக ஒடுங்கியாகி விட்டது. காது தீட்சண்யம் மட்டும் குறையவே இல்லை.

'அந்த நாளிலே, அவர் கூடத்தில் நம்ம சிநேகிதாளோட, இல்லேன்னா சிஷ்யாளோட உட்கார்ந்து பாடிண்டிருப்பார். நான், சமையலறையில் ஒரு பொழுதுக்கு அம்பது பேருக்குக் குறையாமல் நித்ய கலியாணமா இருக்கிற இவரோட ஜமாவுக்குச் சமைச்சுண்டிருப்பேன். சங்கீதத்தையும் விட மனசு வராது. சங்கதிகளுக்காகவும் ஸ்வரப் பிரஸ்தாரங்களுக்காகவும் காதைத் தீட்டிண்டு சமைப்பேன்...'

'இன்னிக்கு அந்தச் சங்கதிகளுக்குப் பதிலா வேறே என்னென்னவோ சங்கதிங்க எல்லாம் காதுல விழறது... ஈசுவரா... கண்ணுக்கு இமையைக் கொடுத்தாப்பல, வாய்க்கு உதட்டைக் கொடுத்தாப்பல — காதுக்கு ஒரு கதவை ஏண்டாப்பா கொடுக்கலே நீ...'

கிழவி, எத்தனையோ முறை மனம் நொந்து, தனக்குள் புழுங்கியிருக்கிறாள்.

'என்ன பூஜை செய்து, இத்தனை வயசு வாழ வரம் வாங்கி வந்தேனோ...?'

'அவர் பண்ணாத பூஜையா... சிவ பூஜை பண்ணும ஓர் உத்திரிணி ஜலம் உள்ளே இறங்காதே.. அவரை நாப்பத்தியேழு வயசுலேயே அழைச்சுட்டானே... எனக்கெதுக்கு இந்த ஆயுசு?'

கிழவி, கண்களை இடுக்கியபடி தன்னைச் சுற்றியுள்ள வாரிசுகளைப் பார்க்கிறாள்.

மூன்று பிள்ளைகள்... மருமகள்கள்.. மருமகள்கள் கூட மாமியார்களாகி விட்டார்கள்.

சீதம்மா நாலாவது தலைமுறையைக் கூடப் பார்த்து விட்டாள்.

மகா வித்வான் பைரவி பசுபதி—யின் குடும்பம் ஆல் போலத் தழைத்து, அருகு போல் வேரோடித்தான் இருந்தது.

அநுராதாரமணன்

ஆனால் — அவரின் ஞானம்.. மேதா விலாசம்.. இத்தனை குழந்தைகளில் ஏன் ஒருத்தருக்குக் கூட வரவில்லை..

சீதம்மாவுக்கு இரண்டு பெண்கள் உண்டு. அவர்களிருவருக்கும் ஓரளவுக்குச் சங்கீத ஞானம் இருந்தது. மேடைக் கச்சேரி, ரேடியோக் கச்சேரி எல்லாம் செய்திருக்கிறார்கள். எல்லாமே கல்யாணமாகி, ஒரு குழந்தை பிறக்கும் வரையில்தான்.

பிள்ளைகள்....

அப்பாவுடைய சங்கீதம் வராவிட்டாலும் தொலைகிறது. அவருடைய நல்ல குணங்களாவது வந்திருக்கக் கூடாதோ...?

ஒவ்வொருத்தனும் பெரிய பெரிய பதவிகளில் இருக்கிறார்கள். இருந்தாலும் அல்பப் புத்தி போகவில்லை.

அப்பா சேர்த்து வைத்த சொத்துக்களை, பெற்றவள் உயிருடன் இருக்கும் போதே பிரித்துக் கொண்டாயிற்று. தம்பூராவைக் கூட விற்று, மூன்று பாகங்களாக்கிச் சாப்பிட்டாயிற்று. பிள்ளைகள் எல்லோரும் சேர்ந்து சினிமா எடுக்கும் முயற்சியில், அப்பாவுக்குச் சமஸ்தானங்களிலிருந்து பரிசுப் பொருள்களாய் வந்த வெள்ளிப் பாத்திரங்கள், கேடயங்கள், மோகராக்கள் எல்லாவற்றையும் விற்றுக் கரியாக்கி விட்டார்கள். நிலம், வீடு எல்லாம் எப்பொழுதோ காலி.

அதிலும் மூன்றாவது மருமகள் விஜயம் இருக்கிறாளே... படு சமர்த்து.

மாமனாரின் பொன்னாடைகளைக் கூடத் தனக்கு ரவிக்கையாகவும், தன் பெண்களுக்குப் பாவாடையாகவும் தைத்துப் போட்டுக் கொண்டு விட்டாள்.

எஞ்சி நிற்பது சீதம்மாவும், அவள் சுருண்டு படுத்துக் கிடக்கும் பட்டுப் பாயும் தான்!

"எதற்குக் கையெழுத்து?''

பெரியவன், ஆத்திரத்தை உள்ளடக்கிக் கொண்டு இதமாய்ச் சொல்வது போலச் சொல்கிறான்.

''அம்மா... கவர்மெண்ட்டுல பழைய வித்வான்களுக்கு, எல்லாம் பென்ஷன் கொடுக்கிறாங்களாம்...''

''கொடுக்கட்டும். ரொம்ப நல்ல காரியம். உங்க அப்பா இருந்த காலத்துல கூட வித்வான்கள் சாப்பாட்டுக்கு இல்லாமல் கஷ்டப்பட்டால் தாங்க மாட்டார். தம் கையில எது கிடைக்கிறதோ அதைத் தூக்கிக் கொடுத்துடுவார்...''

''தெரியுமே.. அன்னிக்கு அவர் வாரியிறைச்சதை எல்லாம் சேர்த்து வச்சிருந்தா — இன்னிக்கு எத்தனையோ மேன்மையா

தானமும்





''நம்ம பாகவதருக்கு, வரிசையாகக் கல்யாணத்துக்கு நிற்கும் அவர் பெண்கள் மேலேயே ஞாபகம்னு எப்படி சொல்றே?''

''இன்னிக்கு அவர் பாடிய ராகங்கள் நாராயணி, கல்யாணி, மோகனு, ரஞ்சனி, வசந்தா எல்லாம் வரிசையா அவர் பெண்களோட பெயர்கள்!''

— ஜம்பு

இருந்திருக்கலாம்!'' — அவன் அம்மாவுக்குக் கேட்காது என்ற நினைப்பில் அந்தப் பக்கம் திரும்பி முணுமுணுப்பது சீதம்மாவின் காதுகளுக்கு எட்டி, அவள் மனத்துக்குள் சிரித்துக் கொள்கிறாள்.

''நீ சும்மாயிருப்பா. நான் சொல்றேன் பாட்டிக்கு...''

பேரன் ஒருவன், குழந்தைக்குச் சொல்வது போல, பாட்டிக்குச் சொல்லத் தொடங்குகிறான்.

''பாட்டி.. வித்வான்கள் உசிரோட இருந்தா— பென்ஷன் பணம் ஐந்நூறு ரூபா.. அவங்க காலமாகி பெண்டாட்டி உசிரோட இருந்தா — இருநூத்தியம்பது ரூபா...''

''ஓ...''

சீதம்மாவுக்கு, இவர்களனைவரும் எதற்காகத் தன்னைச் சுற்றிச் சக்கர வியூகம் அமைத்திருக்கிறார்கள் என்று புரிந்து விட்டது. இரண்டு நாட்களாகத் தனக்கு மாட்டுப் பெண்கள் அளித்த இமர் மரியாதைக்கும் உபசாரத்துக்கும் காரணம் விளங்கி விட்டது.

''இந்தக் காகிதத்துல என்ன எழுதியிருக்கு?''

''அப்பாவோட கீர்த்தியெல்லாம் எழுதியிருக்கோம்மா!'' — ஆவலாகப் பதில் சொல்கிறான் மூத்தவன்.

''நீங்களா...?''

சீதம்மா பொக்கை வாய் மலரச் சிரிக்கிறாள்.

அப்பாவுடைய கீர்த்தி என்னவென்று இவன்களுக்கு என்ன தெரியும்.. அவர் போகும்போது — பெரியவனுக்கே பதின்மூன்று வயசுதான்!

''என்ன யோசனை...?''

—சின்னவனுக்குக் கொஞ்சம் கூடப் பொறுமையே இல்லை.

சீதம்மாவுக்கும் அழுத்தம் அதிகம்.

அதற்கு மேல் யாருடனும் பேசப் பிடிக்காமல், தன் பாயில் சுருண்டு கொள்கிறாள்.

சற்றைக்கெல்லாம் ''பாட்டி! கையெழுத்துப் போட்டுடேன்...'' அவள் அருகே வந்து குனிந்தபடி பேத்தி குழைகிறாள்...

'வெறும் பழங்கதையைச் சொல்லி அறுக்கறதுல என்ன பிரயோஜனம்' என்று நினைக்-தாவின் கீர்த்திகளைக் கேட்ட போது அலுத்துக் கொண்டவள் இவள்.

சீதம்மா அசைந்து கொடுக்கவில்லை.

''அம்மா!'' — மூன்றாவது நாட்டுப் பெண் தம்ளரில் கஞ்சியோடு வருகிறாள்.

''சூடு சரியாக இருக்கு; கஞ்சியை உடனே குடிச்சுடுங்கோ... அப்படியே கையெழுத்துப் போட்டுடலாம்.''

—'ணங்' என்று டம்ளரை வைத்து, வைத்து அதை நசுக்கிய பெருமைக்குரியவள் இன்று பரிவு பொங்கச் சொல்கிறாள்.

சீதம்மாவுக்குச் சோர்வு மேலிட்டது. திரும்பிப் பார்க்காமல் சுவரைப் பார்த்தபடி சுருண்டு கொள்கிறாள்.

மூத்த பிள்ளை, தோளைத் தொட்டு, ''என்னம்மா உடம்புக்கு ஏதேனும் சரியில்லையா?'' என்று தேனொழுகக் கேட்கிறான். ரிக்ஷா வைத்துக் கொண்டு டாக்டரிடம் போய் வந்தபோது, நாலு ரூபாய் செலவாகிவிட்டதென்று நாலாயிரம் முறை அலுத்துக் கொண்டவன்!

சீதம்மா கண்ணைத் திறக்கவில்லை.

சற்று விட்டுத்தான் பிடிப்போமே என்று எல்லோரும் அகன்று போகிறார்கள்.

எத்தனை நேரம்தான் சுருண்டு கிடக்க முடியும்? சீதம்மா எழுந்து, சுவரில் சாய்ந்து காலை நீட்டிக் கொள்கிறாள். மூத்தவன் காத்துக் கொண்டிருந்த கழுகைப் போல் பறந்து வந்து கேட்கிறான்: ''என்மா கையெழுத்துப் போடேன்...! என்ன யோசனை?''

சீதம்மா சுருங்கிய விழிகளை இறுக மூடி, கணவரை மானசீகமாய்த் தனக்குள் உருவகப்படுத்திக் கொண்டு அவர் வணங்கிய தேவியைக் கேட்கிறாள்:

'நீ பாதமூலனு நம்மிதினி' என்று ஓராயிரம் தரம் அவர் உன்னை வேண்டியதெல்லாம் எனக்காகவும் சேர்த்துத்தானே. தாயே! என்னைச் சொச்ச காலத்துக்கு என்ன செய்வதாக உத்தேசம்...?'

''என்னம்மா யோசனை...?'' திரும்பவும் கேட்கிறான் மகன்.

கண்ணைத் திறக்கிறாள் சீதம்மா — சுற்றிலும் மகன்கள், மருமகள்கள் பேரன் பேத்திகள்.

மெள்ளப் பேச ஆரம்பிக்கிறாள் சீதம்மா...

''[illegible]

அருள்வாக்கு



“தியானம் செய்யுங்கள்; மற்றவர்களைச் செய்யச் சொல்லுங்கள்” என்று பகவத்பாதாள் எங்களுக்கு இட்ட ஆக்ஞையைத் தெரிவிக்கிறேன். உங்களைத் தியானம் பண்ணுமாறு செய்கிறேனே இல்லையோ, ‘தியானம் செய்யுங்கள்’ என்ற ஆதி ஆசார்யாள் ஆக்ஞையைத் தெரிவித்த அளவுக்காவது என் கடமையைச் செய்தவனாகிறேன். அதைச் சொல்லும் பாக்கியம் எனக்கு உங்களால் கிடைத்தது. ஸ்ரீ ஆசார்யாள் எதைச் சொல்ல ஆக்ஞை செய்தாரோ, அதைக் கேட்கும் பாக்கியம் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. உங்களால் என் கடமையில் ஒரு பங்கையேனும் செய்த லாபத்தை அடைந்தேன். நீங்களும் ஆத்ம லாபத்துக்கான உபாயத்தைக் கேட்டுக் கொண்டீர்கள். நமக்குள் பரஸ்பர லாபம் உண்டாயிற்று.

இதை நன்றாக மனஸில் வாங்கிக் கொண்டு பூரண லாபம் பெறுங்கள். இந்த ஜன்மா முடிகிற போது, “அப்பாடா, பிறவி எடுத்த பலனை அடைந்து விட்டோம், இனி பயமில்லாமல் போய்ச் சேரலாம்” என்று உறுதியும் திருப்தியும் பெறுகிற அளவுக்கு, நல்ல மார்க்கத்தில் நாம் செல்லப் பரமேசுவரன் எல்லோருக்கும் பூரண அநுக்கிரஹம் புரிவானாக!

மனம் கெட்டுப் போய் எவ்வளவோ பாபம் செய்திருக்கிறோம். குழந்தையாக இருந்ததிலிருந்து ஈசுவர தியானம் செய்திருந்தால் இவ்வளவு நாட்கள் எவ்வளவோ பாபம் போயிருக்கும். இப்பொழுதோ மேலேயும் பாபத்தைச் சம்பாதித்துக்கொண்டிருக்கிறோம். எத்தனை நாட்கள் ஈசுவர சரணாரவிந்த தியானம் செய்கிறோமோ அவ்வளவு நாட்களும் நம்முடைய பிறவிப் பயனை நாம் அநுபவித்தவர்களாகிறோம். இந்த ஜன்மத்தை எடுத்ததற்குப் பலன் அதுதான்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

கீர்த்தியை பேப்பர்லே எழுதித்தான் மத்தவங்களுக்குத் தெரியப்படுத்தணும்னு இல்லே. உங்க அப்பாவோட சிஷ்ய கோடிகள் இந்த லோகம் முழுதும் இருக்கறப்ப, அவரோட குரல் இன்னமும் கிராமபோன் தட்டுல ஒலிச்சுண்டு இருக்கறப்ப, ‘என் புருஷன் மாமேதைன்னு’ காகிதத்துல எழுதிக் கையெழுத்துப் போடறது அவரை அவமானப் படுத்தற மாதிரி....”

சொல்லுவதற்குள் மூச்சிரைக்கிறது சீதம்மாவுக்கு.

மூத்த மருமகள் இடைமறிக்கிறாள்:

“இந்த வறட்டுக் கௌரவம்தான் உங்க அம்மா கூடப் பொறந்த சொத்து. ஏன், இருநூத்தியம்பது ரூபா என்ன எறிஞ்சு விட்டுக் கிடக்காமோ இங்கே...? உங்களுக்கு வேண்டாம்; எனக்கு வேண்டாம்... மாசம் பொறந்தா டாக்டருக்கே நோட்டு நோட்டா அழ வேண்டியிருக்கே! இருக்கிற வரைக்கும் அதுக்காவது பிரயோஜனப் படட்டுமே. எடுத்துச் சொல்லுங்கோ...”

சீதம்மா விரக்தியுடன் சிரிக்கிறாள்.

மூத்த மருமகள் ஆரம்பித்து வைத்த துணிச்சலில் ஆளாளுக்குப் பேச ஆரம்பிக்கிறார்கள். அவையொன்றையும் அவள் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

பசுபதி கொஞ்சமாகவா சம்பாதித்தார்! இன்னும் பந்தி பந்தியாகச் சோறு போட்ட கை சீதம்மாவுடையது! அவளைக் கையேந்தச் சொன்னால்...? அந்தக் கலைஞனுக்கு இருந்த தன்மான உணர்வில் பாதியாவது அவருடன் வாழ்க்கையைப் பகிர்ந்து கொண்டவளுக்கு இருக்காதா?

அந்த நாளில் பசுபதி மனைவியை ஒரு பார்வை பார்த்தால் போதும். வார்த்தை கூட வேண்டாம். அந்தப் பார்வையின் அர்த்தம் புரிந்து உடன் செயல்பட்டு விடுவாள்.

“பொண்ணுக்குக் கல்யாணம் — திருப்பதியில ...”

— இப்படியோர் ஏழை வித்வான் வந்த போது பசுபதி மனைவியைப் பார்க்க, அவள் கழுத்துச் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்திருக்கிறாள்.

அவளா இன்றைக்கு அந்த மகா மனிதரின் பெயரைச் சொல்லிப் பணம் கேட்பது?


அவரோட கீர்த்தியை எழுதியிருக்காணும்... கீர்த்தியை! ஒரு காகிதத்துல அடங்கற விஷயமா அது? வெறும் இருநூற்றைம்பது ரூபாய்க்கு விலை பேசற விஷயமா அது? அதற்காகவா அவர் நாதத்தை உபாசனை செய்தார்? சங்கீத தேவதைக்கு ஓயாமல் சேவை செய்தார்? எவனோ முட்டாள் அந்தப் பெருமைக்கு விலை பேசறான்னு... இவள்களுக்கு எங்கே போச்சு புத்தி? கையேந்தி குழைஞ்சு இப்படியா....?

இவ்வளவு நாட்களாகப் பட்ட துன்பத்தையெல்லாம் தூக்கிச் சாப்பிட்டு விடும் போல் இருக்கிறதே இந்தத் துக்கம்! நெஞ்சமே வெடித்து விடுமோ?

“கையெழுத்துப் போட மாட்டேன், போங்கடா!”

ஒரே வரியில் முடித்துக் கொண்டு தன் மூலையில் திரும்பச் சுருண்டு கொள்கிறாள் சீதம்மா.

விளக்கமாகச் சொன்னால் இவர்களுக்குப் புரியவா போகிறது?!



பாடசாலை வித்யார்த்திகளில் ஒரு பகுதி


மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால் 1542ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 85 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் உணவளிக்க சுமார் ரூ 250/— ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ 2500/— மூலதனம் ஏற்படுத்தியோ அல்லது அவ்வப்போது ரூ 250/— அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்;

அத்வைத வித்யாசார்யா மஹா ராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி
D—76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம்—612 001.

இந்த நன்கொடைக்கு 80 G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு.





21

கட்டுப் படுத்திக் கொள்ள முடியாத திகைப்பும் சுவாரஸ்யமுமாகப் பிரபு அவளைப் பார்த்தான். அவளை மீண்டும் இத்தனை சுருக்கில் சந்திப்போம் என்று அவன் நினைத்திருக்கவில்லை. அதை விடத் திகைப்பு அந்தப் பெயரைக் கேட்டதும் ஏற்பட்டது.

அவள் எதுவுமே பேசாமல் அவனை இதற்கு முன் பார்த்திருந்ததற்கான அடையாளம் எதுவும் இல்லாமல் விஜயபாலசூரியவின் கட்டளையை எதிர்நோக்கி நிற்பவள் போல் நின்றாள்.

''சீலியா — இது மிஸ்டர் பிரபு. ஒரு இந்திய ஜர்னலிஸ்ட்'' என்றார் பாலசூர்ய ஆங்கிலத்தில்.

சீலியா மிகச் சிக்கனமான புன்னகையுடன் ''ஹல்லோ'' என்றாள்.

''இவர் என்னுடைய கெஸ்ட் ரூமில் தங்குவார். இவருக்கு அறையைக் காண்பி.'' என்ற பாலசூர்ய, ''உங்கள் சாமானை வைத்து விட்டு என்னுடன் தேநீர் அருந்த வாருங்கள்'' என்றார் பிரபுவிடம்.

''தாங்க்யூ'' என்று புதிய உற்சாகத்துடன் பிரபு எழுந்தான்.

அந்தப் பெண் கிட்டத்தட்ட அவனை லட்சியமே செய்யாதவள் போல், நீள முன்னால் நடந்தாள். அலுவலகம் போல் இருந்த ஒரு பகுதியைக் கடந்து அவர்கள் சென்றார்கள்.

''இது என்ன அலுவலகம்?'' என்று அவன் பேச்சுக் கொடுத்தான்.

''இனப் பிரிவுகளைப் பற்றின ஆராய்ச்சிக் கழகம்'' என்றாள் அவள் திரும்பாமலே.

ஒரு மூலை திரும்பியதும் பளீரென்று சூர்ய வெளிச்சம் தெரிந்தது. கண்ணாடிக் கூரை வழியே வந்த ஒளியில், நடையில் ஒரு பாகம் பச்சைப் பசேல் என்ற உயரமான செடிகளும் கொடிகளும் நிறைந்து பார்வைக்கு ரம்யமாக இருந்தது.

''வீட்டுக்குள்ளேயே தோட்டமா?'' என்று அவன் வியந்த போதும் அவள் புன்னகை புரியாமல் யதார்த்தமான குரலில் ''எல்லா சிங்கள வீடுகளிலும் இது ஒரு முக்கிய அம்சம்'' என்றாள்.

''நீங்கள் சிங்களவரா?''

அவனுடைய கேள்வி காதில் விழுந்ததாக அவள் காண்பித்துக் கொள்ளவில்லை.

அவளுடைய நளினம்தான் அவளுடைய கவர்ச்சி என்று அவனுக்குப் பட்டது. இவள் சிரித்தால் எப்படியிருப்பாள் என்கிற யோசனையுடன் அவள் காட்டிய ஓர் அறைக்குள் அவன் நுழைந்தான்.

அறை காற்றோட்டமாகத் துப்புரவாக இருந்தது.

''இந்த அறைக்கு வெளிக் கதவும் உண்டு'' என்று அவள் காண்பித்தாள். ''நீங்கள் விருப்பம் போல் வெளியில் சென்று வரலாம் வீட்டிலுள்ளவர்களுக்குத் தொந்தரவு இல்லாமல்.''



''வண்டர்ஃபுல்!'' என்றான் அவன் திருப்தியுடன்.

''சாப்பாடு நீங்கள் வெளியில் பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கும். அருகில் சாந்தி விஹார் என்று...''

''தெரியும். நோ ப்ராப்ளம்!'' என்று அவன் சிரித்தான்.

''நீங்கள் விஜயபாலசூர்யவின் மகளா?''

அவள் அந்தக் கேள்வியை எதிர்பாராதவள் போல் கண்கள் அகல அவனைப் பார்த்தாள்.

''உங்கள் வேலைக்கு எது அவசியமோ அதை மட்டும் நீங்கள் தெரிந்து கொண்டால் போதும்'' என்றாள் இயல்பான குரலில். ''லைப்ரரியில் உங்களுக்காக மிஸ்டர் விஜய பாலசூர்ய காத்திருக்கிறார்.''

அவன் தனது அதிகப்பிரசங்கித்தனத்துக்கு மன்னிப்புக்கோர யத்தனிக்கையில் அவள் விருட்டென்று திரும்பிச் சென்று எங்கோ மறைந்து போனாள்.

அவன் ஏமாற்றத்துடன் அறைக்குள் நுழைந்து தனது சொற்பச் சாமானை ஒழுங்கு படுத்திக் குளியலறைக்குள் சென்று முகம் கழுவிக் கொண்டான்.

'மகா கர்வம் பிடிச்ச பெண்' என்று முணுமுணுத்துக் கொண்டான்.

சீலியா என்ற பெயரைக் கேட்டதும் தனது கற்பனை விரிந்து போனதை நினைத்து வெட்கமேற்பட்டது. ஜயசீலனின் காதலி இவள் என்று முடிச்சுப் போட்டது சினிமாத்தனம் என்று தனக்குள் சிரித்தபடி கதவைச் சாத்திவிட்டு, பாலசூர்யவைச் சந்திக்கக் கிளம்பினான். அலுவலகப் பகுதியில் சீலியாவைக் காணவில்லை.

லைப்ரரியின் வாசல் திறந்திருந்தது. பாலசூர்ய ஏதோ பத்திரிகையில் ஆழ்ந்திருந்தார். அறையின் நாற்புறமும் கூரையைத் தொட்டபடி புத்தக அலமாரிகள் இருந்தன.

''ஆ வாருங்கள் பிரபு!'' என்றார் பாலசூர்ய அவனைப் பார்த்து. கையிலிருந்த சஞ்சிகையை மடித்து வைத்து, எதிரில் இருந்த டீபாட்டிலிருந்து கோப்பையில் தேநீர் கஷாயத்தை ஊற்றியபடி.

''அறை சௌகர்யமாக இருக்கிறதா?'' என்றார்.

''ரொம்பச் சௌகர்யமாக இருக்கிறது.'' என்றான் அவன்.

தேநீர் கோப்பையை அவனிடம் நீட்டியபடி இளநகையுடன் அவர் சொன்னார்.

''விஷயம் சேகரிப்பது மட்டும் போதாது. உண்மையை உள்ளபடியும் எழுதுவது முக்கியம். உங்கள் நாட்டில் எழுத்துச் சுதந்திரம் இருக்கிறது. இங்கு எங்களுக்கு இல்லை. நாங்கள் சொல்ல விரும்புவதையெல்லாம் சொல்ல முடிவதில்லை. அரசாங்கத்துக்குத் தான் செய்த தவறெல்லாம் தெரியாமல் போனதற்கு அதன் தணிக்கை முறைகளே காரணம்.''

சீலியாவைப் பற்றின விவரங்களை இவரிடம் கேட்கலாமா, வேண்டாமா என்று அவன் யோசித்துக் கொண்டே,

''இங்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''உலகத்தில் இருக்கும் முக்கியமான இனப் பிரிவுகளைப் பற்றியும் அவற்றுள் எழும் பிரச்னைகளைப் பற்றியும் ஆராய்ச்சி செய்கிறோம். படித்தவர்களிடையேயாவது அவர்களைச் சூழ்ந்திருக்கும் போலித்தனத்தைப் பற்றிய பிரக்ஞையை ஏற்படுத்த வேண்டும் என்கிற எண்ணம்.''

''வெற்றியடைந்திருக்கிறீர்களா?''

''எங்கே?'' என்று அவர் கைகளைத் தூக்கிச் சிரித்தார். ''சராசரி மனிதன் சுயநலவாதி. தற்காப்புதான் அவனுடைய முதல் எண்ணம். போலித்தனம் என்று தெரிந்தாலும் அது தான் பாதுகாப்பு என்று நினைப்பவன்.''

அவர் பேச்சு புதிராக இருந்தது. யாரைச் சொல்கிறார் என்று புரியவில்லை.


''இங்கிருக்கும் பிரச்னைக்கெல்லாம் என்ன மூலகாரணம் என்று சொல்வீர்கள்?''

''சிங்களவரின் தவறான ஆதிக்க வெறி தான் — அதில் சந்தேகம் வேறா?''

''ஆதிக்க வெறியில் தவறானது சரியானது என்று வேறு உண்டா?''



வாஸந்தி



"எல்லா வித்வான்களும் தங்களோட கச்சேரியைச் செவ்வாய்க்கிழமை சாயந்தரம் வெச்சுக்கணும்னு ஏன் கேட்கிறாங்க?"

"அன்னிக்கு டி. வி. யிலே டிராமா இருக்கே. அதனாலே சபாவிலே கூட்டம் அதிகமா வருமாம்."

— ராகவன்

அவர் பகபகவென்று சிரித்தார்.

"நீங்கள் சொல்வது சரிதான். எல்லா ஆதிக்கமும் தவறானது. இங்கு என்ன ஆயிற்றென்றால், நாடு பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்த போது உங்கள் நாட்டில் நடந்தது போல் தேச விடுதலைக்காகப் போராட்டம் நடக்கவில்லை. நடந்திருந்தால் எல்லா இனப் பிரிவுகளும் ஒன்று சேர்ந்து ஒரு தேசிய எழுச்சியாக இருந்திருக்கும். இங்கு ஒரு கலாசார எழுச்சிதான் ஏற்பட்டது.

"எனக்கு நீங்கள் விளக்கமாகக் கூற வேண்டும்" என்றான் பிரபு தன் நோட்டுப் புத்தகத்தைத் திறந்து.

"சொல்கிறேன். இங்கு ஒரு வேடிக்கையான சரித்திர உண்மை. உலகின் மற்ற இனங்களோடு ஒப்பிடும் போது பௌத்த சிங்களவர்கள் மிகச் சிறுபான்மையினரே. அதனாலேயே இலங்கைத் தீவில் மட்டுமே இருக்கும் தங்கள் மதத்தையும் மொழியையும் காக்க வேண்டியது தங்களுடைய தலையாய கடமை என்கிற தீவிரம் அவர்களுள் கிளம்பிற்று. அடிப்படைக் காரணம் பொருளாதாரம்தான். சிறுபான்மை இனங்களான இலங்கைத் தமிழர்களும் இந்தியத் தமிழர்களும் முஸ்லிம்களும் எல்லா முக்கிய துறையிலும் முன்னேறி நாட்டின் பொருளாதாரத்தைக் கைப்பற்றி விட்டார்கள் என்கிற பயம்தான் இவர்களுக்கு எதிரான கலாசார எதிர்ப்பாக வெளிக் கிளம்பிற்று. அதிலிருந்து நியாயமற்ற, ஒடுக்கு முறைகள் கிளம்பின— 'சிங்களம் மட்டும்' என்கிற சட்டத்திலிருந்து தொடங்கி..."

பிரபு வியப்புடன் அவரைப் பார்த்தான். ஒரு சிங்களவரான இவர் இத்தலை நடுநிலைமையோடு பேசுவது ஆச்சரியமாக இருந்தது.

"பௌத்த பிக்குகளின் ஆதிக்கமும் அதிகம் போலிருக்கிறதே, இங்கு?"

"ஆ, அதெல்லாம் சும்மா. அவர்களை ஒவ்வொரு அரசும் தனது செய்கைக்கு நியாயம் சேர்க்க உபயோகித்துக் கொள்கிறது. வேண்டுமென்றால் அவர்களை ஒடுக்க எத்தனை நேரம் செல்லும்? புத்த குருமார்கள் மட்டுமே வெறியைக் கிளப்பவில்லை. படித்த சிங்களவர்கள், எழுத்தாளர்கள் கூடத் தங்களது இதிகாச கலாசாரப் பெருமை பேசியும் மற்ற இனங்களைப் பழித்தும் நடந்துகொண்டது வெட்கக் கேடானது. இவர்கள் எல்லாரையும் பகைத்துக் கொள்ள விரும்பாமல் சிங்கள மக்களின் வோட்டை இழக்க விரும்பாமல் அரசாங்கம் மேலும் மேலும் தவறுகள் செய்து கொண்டு போயிற்று. தமிழர்களின் குறைகள் எல்லாம் உண்மையானவை —பிரசாரத்துக்காகப் புத்தகங்களில் மிகைப் படுத்தப்பட்டாலும்."

"ஆயுதப் போராட்டத்துக்கு விரட்டப் படும் அளவுக்கு!" என்றான் பிரபு.

"நிச்சயமாக" என்றார் பாலசூர்ய புன்னகை மாறாமல். "'48 —லிருந்து இருக்கும் பல்வேறு அரசாங்கங்கள்தான் குற்றவாளி. எந்தப் பேச்சு வார்த்தையையும் ஒப்பந்தத்தையும் மதிக்காமல் இருந்தால் சிறுபான்மை இனம் வேறு என்னதான் செய்யும்?

பிரபு பேசவில்லை. மல்ஹோத்ரா தன்னைச் சரியான ஆளிடம்தான் அனுப்பியிருக்கிறார் என்று நினைத்துக் கொண்டான். ஒரு வேளை இவர் பயங்கரவாதப் போராளிகளை ஆதரிக்கிறவரோ என்று அவனுக்குத் திடீரென்று சந்தேகம் வந்தது.

"ஆயுதப் போராட்டம் எந்த நிலைக்குப் போய் விட்டது பாருங்கள்!" என்றான் அவன் பொதுவாக.

"ஆ, அது வேறு கதை!" என்று அவர் சிரித்தார். "வெளிநாட்டுத் தலையீடும் ஆதரவும்தானே! அதற்குக் காரணம்! போராட்டமே திசை திரும்பிப் போய் விட்டது பயங்கரவாதத்தால். அவர்களது தனித் தமிழ் ஈழக் கோரிக்கையை நான் என்றுமே ஆதரித்ததில்லை. அவர்களது பயங்கரவாதமும் மனித நேயத்துக்கும் நாகரீகத்துக்கும் புறம்பானது."

"இந்த உடன்படிக்கை ஏதாவது மாறுதலைக் கொண்டு வராதா?"

"கொண்டு வர வேண்டும். அதுதான் என்னுடைய எதிர்பார்ப்பும் ஆசையும். இதைவிட நல்ல சந்தர்ப்பம் தமிழர்களுக்குக் கிடைக்காது. அதை உபயோகித்துக் கொள்ள அவர்களுக்குத் தெரிய வேண்டும்."

ஹோட்டலில் சற்று முன் ஈசுவரன் சொன்ன விஷயம் நினைவுக்கு வந்தது. அதைப் பற்றிச் சொல்ல அவன் வாயைத் திறக்க யத்தனிக்கையில் விஜயபாலசூர்ய சட்டென்று எழுந்தார்.

"மன்னியுங்கள். எனக்கு ஒரு மீட்டிங்குக்குப் போக வேண்டும். நேரமாகி விட்டது. உங்கள் உபயோகத்துக்கு இங்கே இருக்கும் சின்ன டைப் ரைட்டரை நீங்கள் உங்கள் அறைக்கே எடுத்துச் செல்லலாம்."

அவன் 'நன்றி' என்று சொல்வதற்குள் அவர் சென்று விட்டார். ஆரம்பத்திலேயே சீலியாவைப் பற்றி விசாரிக்காமல் போனோமே என்று அவன் அலுத்துக்

கொண்டான். டைப்ரைட்டரைத் தூக்கிக் கொண்டு தன் அறைக்குச் சென்றான்.

அவன் வேலை முடிந்து, திருப்தியுடன் கைகளை உயரத் தூக்கி நெடிய சோம்பல் முறிக்கும் போதுதான் மேஜை மேல் ஒரு வெள்ளைத் தாளில் அந்த ஆங்கில வாக்கியத்தைப் பார்த்தான்.

'ஊரில் ஊரடங்கு சட்டம் இருப்பதால் நீங்கள் மாலை ஏழு மணிக்குள் சாப்பாட்டை முடித்துக் கொண்டு வருவது நல்லது. பிறகு சாப்பாடு கிடைக்காது.'

கையெழுத்தில்லா விட்டாலும் அதைச் சீலியாதான் எழுதியிருக்க வேண்டும் என்று நினைத்துச் சிரிப்பு வந்தது. 'வந்துடுவா வழிக்கு' என்று பலமாக மண்டையை ஆட்டி சட்டையை மாட்டிக் கொண்டு வெளிப் பக்கமாக ஞாபகமாகப் பூட்டி விட்டுக் கிளம்பினான்.

யோசித்தபடி நடந்தான். விஜயபால சூர்யவின் கணக்குப்படி இவையெல்லாம் தவிர்க்கப்பட்டிருக்கக் கூடிய சிக்கல்கள். ஈசுவரனின் கணக்குப்படி சிக்கல் தீருவதில் எதேச்சாதிகார வெறிகொண்ட போராட்டக் காரர்களுக்கு ஆர்வமில்லை. பத்திரிகைக்காரனின் கணிப்புப்படி இந்த உடன்படிக்கை வெற்றி பெறுவதில் சில வெளி நாட்டுச் சக்திகளுக்கு ஆர்வமில்லை.

கடவுளே — இதனால் திண்டாடப் போவது ஜயசீலன்களும் சீலியாக்களும்... அவர்களுக்காக அமைதி திரும்ப வேண்டும்.

சாந்தி விஹாரில் ஈ காக்கை இல்லை. அங்கிருந்த மௌனமே வயிற்றைக் கலக்கிற்று. ஹோட்டலைச் சீக்கிரம் மூட முதலாளி காத்திருந்தது தெரிந்தது. அவன் அவசரமாகச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு வெளியில் வந்தான்.

தெருவில் யாருமே இல்லை. அவன் ஹாஸ்டலுக்குச் செல்லும் வீதியில் வேகமாக நடக்க ஆரம்பித்தான்.

திடீரென்று பின்னால் யாரோ ஓடி வரும் சப்தம் கேட்டது. அவன் திடுக்கிட்டுத் திரும்பினான். தெரு விளக்கின் ஒளியில் ஒரு பெண் என்று தெரிந்தது.

அவளுக்குப் பின்னால் இரண்டு ஆண்கள் துரத்துவது போல ஓடி வந்து கொண்டிருந்தார்கள். மின்னல் வேகத்தில் அவள் அவனைத் தாண்டிக் கொண்டு ஓடினாள். தாண்டும் அந்த விநாடியில் அவள் சீலியா என்று அவன் அதிர்ச்சியுடன் கண்டு கொண்டான்.

துரத்துபவர்கள் நூறு கஜ தூரத்தில் இருந்தார்கள். பிரபு யோசனையே செய்யாமல் அவளுடன் கூட ஓடினான். பின்னால் அவர்கள் வருகிறார்களா என்று அடிக்கடி திரும்பிப் பார்த்தபடி ஓடுகையில் சீலியாவைக் காணவில்லை. ஏதோ ஒரு அந்தகாரச் சந்தில் நுழைந்திருந்தாள். பின்னால் துரத்தியவர்கள் அருகில் வந்து கொண்டிருந்தார்கள்— அவனை நோக்கி—

— (தொடரும்)

மேடை ஏறாத கலைஞர்




கர்நாடக இசை உலகில், அறிவும் ஆற்றலும் படைத்த சிலர் உள்ளனர். இவர்கள் மேடை ஏறுவது பிற இசைக் கலைஞர்களைப் பற்றியோ கலையைப் பற்றியோ பேசத்தான். ஆனால் இவர்களும் இசையுலகின் ஆதாரத் தூண்கள். அத்தகைய ஒருவரைப் பற்றி......

வாசல் திண்ணையில் வந்து உட்கார்ந்து கொண்டால் கல்யாணியோ பைரவியோ காற்றில் மிதந்து வந்து மனத்தை மயக்கும். அந்தக் காலத்தில் இசைக் கலைஞர்கள் பெரும்பாலும் தஞ்சாவூர் மிராசுதார்கள் விட்டுக் கல்யாணங்களில் பாடித்தான் ஜீவனம் நடத்தி வந்தார்கள். இப்பொழுது உள்ளது போன்ற நகர்ப்புற சபாக்கள் அந்த நாளில் கிடையாது. கும்பகோணம்தான் இசை உலகத் தலைநகராக இருந்தது. இந்த இசைச் சூழலில் வளர்ந்த பார்த்தசாரதி, தான் கேட்ட கச்சேரிகளைப் பற்றியெல்லாம் குறிப்புக்கள் எழுதிக் கொண்டான். ஒவ்வொரு ஆண்டும் பகுள பஞ்சமியின் போது, சைக்கிளை எடுத்துக் கொண்டு, நண்பர்களுடன் திருவையாறில் தியாகராஜ ஆராதனைக்குப் போய் வந்தான். ஹரிகதைகளுக்குப் பின்பாட்டுப்! பாடி வந்த சீனிவாச அய்யங்கார் என்பவரிடம் ஸரளி வரிசை தொடங்கி, முறையாகப் பாட்டுக் கற்றுக் கொண்டான்.

ஒரு முறை பார்த்தசாரதி சென்னை நகருக்குப் போக நேர்ந்தது. அப்போது தியாகராஜ கீர்த்தனைகள் அடங்கிய புத்தகம் ஒன்றை வாங்கிக் கும்பகோணத்துக்கு எடுத்துச் சென்றான். அப் புத்தகம் கும்பகோணத்தை ஒரு கலக்குக் கலக்கி விட்டது! அது வரை வாய் வழியே மட்டுமே பாடம் கேட்டும் கற்றும் வந்த வித்வான்கள் புத்தகத்தில் கீர்த்தனைகள் நிரந்தரப்படுத்தப்பட்டிருப்பதைக் கண்டு அதிசயித்தார்கள். இந்த நிகழ்ச்சி பார்த்தசாரதியின் இளம் மனத்தில் ஆழப் பதிந்தது. இசையைப் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் புத்தகங்களை எழுதவும் தூண்டியது.

பார்த்தசாரதி மேல்படிப்புக்குக் கல்கத்தாவுக்கு அனுப்பப்பட்டார். இங்கு பி.ஏ. ஹானர்ஸ் படிக்கையிலேயே வங்காள மொழியையும் கற்றார். ஹிந்துஸ்தானி இசையால் கவரப்பட்டு அதைப் பற்றி நிறையத் தெரிந்து கொண்டார். பட்டப் படிப்பு முடிந்ததும் 'ஸ்டேட்ஸ்மன்' பத்திரிகையில் இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்து, பத்திரிகைத் துறை அனுபவமும் பெற்றார். 1936 இல் ரயில்வேயில் வேலை கிடைத்ததும் சென்னை வந்து சேர்ந்தார்.

இதற்குள் சென்னையில் சபாக்கள் முளைக்க ஆரம்பித்திருந்தன. மீண்டும் கச்சேரிகள் கேட்கும் வாய்ப்பும் வித்வான்களைச் சந்திக்கும் வாய்ப்பும் பார்த்தசாரதிக்குக் கிடைத்தது. ரயில்வே ஊழியர்கள் ஒரு புதிய மொழி கற்க வேண்டும் என்ற விதியின் காரணமாகக் கன்னட மொழியைக் கற்றார். பேராசிரியர் சாம்பமூர்த்தியின் புத்தகங்களை வாங்கிப்



"கச்சேரிக்கு வருவதற்கு முன்னால பாகவதர் ஸ்ரீலங்கா செய்திகளை நிறையப் படிச்சுட்டு வந்திருக்கணும்னு ஏன் சொல்றே?"

"கவனிக்கலே? 'கஜவதனு வேடுவே'ங்கிற பாட்டை கவனப்பிசகா 'ஜெயவர்தனு வேடுவே'ன்னு மாத்திப் பாடினாரே!"

— ஜம்பு

படித்து, இசை பற்றிய அறிவைத் தாமே வளர்த்துக் கொண்டார்.

பார்த்தசாரதியின் திருமணத்திற்கு வந்திருந்த கல்கி, ஓர் ஆண்டு கழித்துத் தமது பத்திரிகையில் வேதாந்த தேசிகர் பற்றி ஒரு கட்டுரையை எழுதச் சொல்லி அவரிடம் கேட்டார். பி.ஸ்ரீ. அவர்கள் எழுதியிருந்த ஆழ்வார்களும் வட இந்தியாவும் என்ற சர்ச்சைக்குரிய கட்டுரைக்குப் பார்த்தசாரதியின் கட்டுரை தக்க பதிலாக அமைந்தது. தொடர்ந்து இசை சம்பந்தமான பல கட்டுரைகளை எழுதும் வாய்ப்பும் பார்த்தசாரதிக்குக் கிடைத்தது.


இசை உலகுக்கு மட்டுமின்றி இலக்கிய உலகுக்கும் தமது பங்கைச் செய்துள்ளார் பார்த்தசாரதி. தாகூரின் நாடகங்கள் இவரால் மொழி பெயர்க்கப்பட்டு சாகித்ய அகாடமியினரால் 'ரவீந்திரர் நாடகத் திரட்டு' என்ற தலைப்பில் புத்தகங்களாக வெளியிடப்பட்டுள்ளன.

1979 முதல் சென்னை மியூசிக் அகாடமியின் செயலாளராக இருந்து வரும் பார்த்தசாரதி சிறந்த கலை விமர்சகராகவும் விளங்குகிறார்.

தியாகராஜரின் பிரகலாத பக்தி விஜயத்தைத் தமிழில் மொழிபெயர்த்ததும்தான் பார்த்தசாரதியின் திறமைக்கும் அறிவுக்கும் முன்னெப்போதையும்விட அதிக அங்கீகாரம் கிடைத்தது. நண்பர் டாக்டர் கிருஷ்ணசாமி அளித்த ஊக்கத்தின் பேரில் தியாகராஜசுவாமியின் கீர்த்தனைகளைத் தமிழாக்கம் செய்தார். 1967 இல் தியாகராஜரின் இருநூறாவது ஆண்டு நிறைவையொட்டி வெளியான இந்தப் புத்தகம்தான் இன்றைக்கு வித்வான்களுக்கும் ரசிகர்களுக்கும் தியாகையர் கிருதிகளின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு பாடவும் ரசிக்கவும் கை கொடுத்து வருகிறது.

— எஸ். ஆர்.

— புகைப்படம்: கே. வி. ஆனந்த்


BISON
BRIEF & VESTS
ஆடவருக்கென உயர் ரக எகிப்திய
பருத்தி நூலினால்
தயாரிக்கப்பட்டவை.
Chari,
பைஸன் பனியன்கள்/ ஜட்டிகள் டயானா ப்ரிப்
ட்ரைமி ப்ரிப் கூல்டெக்ஸ் பனியன்கள் பார் யூ
பெண்கள் பேண்டிஸ்
பைஸன் நிட்டிங் கோ
திருப்பூர் 638 602


உங்கள் விரலுக்கு மட்டும் ப்ரஷ் இருந்தால்...
உங்கள் பற்களின் பின்புறத்தையும் நீங்கள் எளிதில் துலக்க முடியும். அங்குதான், சொத்தை, பற்களை முதலில் பாதிக்கிறது. பல டூத்ப்ரஷ்களால் விரலைப்போல் வளைந்து பற்களின் பின்புறத்தை அணுகமுடிவதில்லை. ஆனால் இப்போது வந்துள்ளது புதிய ப்ராமிஸ் 15—முன்னுக்கு 15° வளைத்து புதுமையாகத் தயாரிக்கப்பட்ட டூத்ப்ரஷ். இது சுலபமாக பற்களின் பின்புறத்தையும் துலக்க உதவுகிறது. ஆகவே பல் டாக்டர்கள், இதனை, விஞ்ஞானரீதியாகத் தயாரிக்கப்பட்ட டூத்ப்ரஷ் எனக் கருதுவதில் வியப்பில்லை.
புதிய
ப்ராமிஸ் 15
உங்கள் பற்களின்
பின்புறத்தையும்
துலக்கவல்ல டூத்ப்ரஷ்.
15°
BALSARA
CHAITRA-B-BLS-678 TAM

இந்த வருஷம் என்ன ஸ்பெஷல்?

'அகாடெமி'காரர்கள் யோசிக்க வேண்டாமோ?

போன வருஷம் கிருஷ்ணகான சபாவில் லால்குடிக்கு (வேலூர் ராமபத்ரன் மிருதங்கத்தோடு) ஜாகிர் உசேன் ஏதோ ரொம்பவும் பழக்கப்பட்டவர் மாதிரி தபலா வாசித்த போது, வந்து குவிந்தன பாராட்டுக்கள். இந்த வருஷம் ஹரிபிரசாத் சௌராசியாவின் புல்லாங்குழலுக்குத் தபலா வாசிக்க வர இயலாத ஜாகிர் உசேனை, மாண்டலின் சீனிவாசுக்கு மடக்கிப் போட்டு விட்டார் காரியதரிசி யக்ஞராமன். 'நான் அவருக்கு ஒரு படி மேலே' என்று காண்பித்து, கொள்ளுவதில் கை தேர்ந்த பத்மா சுப்பிரமணியம், தமது பரதநாட்டியத்துக்கு, ஸாரி, பரத நிருத்யத்துக்கு ஜாகிர் உசேன் தபலா வாசிக்க வேண்டும் என்று சொல்லி விட்டாராம்! ரஷ்ய சங்கீதத்துக்கு ராமாயண நிகழ்ச்சியை வழங்குவதைவிட இது எவ்வளவோ மேல் என்று பலர் அவசரப்பட்டு நிம்மதிப் பெருமூச்சு விட வேண்டாம். செக்கோவ்ஸ்கியின் இசைக்கு 'ஜடாயு மோட்சம்' வழங்கத்தான் போகிறார் பத்மா!



* வித்யா சுப்ரமணியன்.

'தேசிய ஒருமைப்பாடு' என்று எல்லாரும் வாய் வலிக்கப் பேசுகிறார்கள். என்னைப் பொறுத்தவரை நான் செயலிலேயே காட்டி விடுகிறேன்.' என்று சொல்லாமலே செய்து வருகிறார் யக்ஞராமன். கேரளா, கர்நாடகா, ஆந்திராவிலிருந்து வயலின் — மிருதங்க வித்துவான்களைக் கிருஷ்ண கான சபா கச்சேரிகளில் நிறையவே பார்க்கலாம். 'நிருத்ய சூடாமணி' பட்டம் பரதநாட்டியத்துக்கு மட்டுமல்ல, எல்லா வகை நடனங்களுக்கும்தான் என்று வருடத்துக்கு ஒன்றாக, மோகினி ஆட்டம், கதக், குச்சிப்புடி, ஒடிஸி என்று கொடுத்து வந்தவர், இந்த வருடம் 'மணிப்புரி' கலைஞர் ராஜா சின்ஹாஜித் சிங்குக்குக் கொடுக்கப் போகிறார். 'போன வருஷத்திலிருந்து விருதுடன் ஐயாயிரம் ரூபாயும் கொடுக்கிறார். (ஆறுபட்ட அகாடமியே 'சங்கீத கலாநிதி' விருதோடு மூவாயிரம் ரூபாய்தான் கொடுக்கிறது என்பது தெரியுமோ?)

'நிருத்ய சூடாமணி' பட்டம் கொடுத்த கையோடு அலர்மேல் வள்ளியை மறந்து விட்டார்களோ என்று நாம் போன வருஷம் எழுதியது கிருஷ்ண கான சபைக்காரருக்கு உறுத்தியதோ என்னவோ, அழைத்து விட்டார் அலர்மேல் வள்ளியை மறுபடி இந்த



• சாருமதி — பதவி உயர்வு.

வருஷம். (இல்லாவிட்டால் ரவிசஙகர் மாதிரி அயல்நாடுகளிலேயே ஆறு மாதத்துக்கு மேல் நிகழ்ச்சிகள் நடத்தி வரும் வள்ளியைச் சென்னை ரசிகர்கள் எப்போது தான் பார்ப்பது?)

காரைக்குடி மணியின் 'சுருதிலயா'வில் இந்த வருஷம் ஏ.கே.சி. நடராஜனின் கிளாரினட், தாயுமானவரின் கொன்னக் கோல், விநாயகராமின் கடம் சேர்ந்திருக்கின்றன. போன வருஷமே பிரபலமாகிவிட்ட இந்த நிகழ்ச்சி இன்னும் சூடு பிடிக்கும்...

ரவிகிரண், சாருமதி ராமச்சந்திரன் இருவரும் இந்த வருஷம் மாலைக் கச்சேரிக்குப் பதவி உயர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். நாலு வருடங்களாய் இங்கே பாடாத பம்பாய் சகோதரிகள் இந்த வருஷம் பாடுகிறார்கள். பத்து வருஷங்களுக்கு மேலாக இருவரை தான சபையை எட்டிப்பாராத வி.வி. சுப்பிரமணியம், டி.வி. சங்கரநாராயணனுக்கு வயலின் வாசிக்கிறார். (நிரந்தர நண்பர்களும் கிடையாது— நிரந்தரப் பகைவர்களும் கிடையாது என்பது அரசியலுக்கு மட்டும்தான் பொருந்துமா என்ன!)

இளம் நடனமணிகளாக உமா பாலசுப்பிரமணியம், சுஜாதா சீனிவாசன், கமலா ரெட்டி (குச்சிப்புடி) சீனியர் அந்தஸ்து பெறுகிறார்கள்...

ஒரு கிசுகிசு: போன வருஷத்திலிருந்து சீசனில் ஒரே ஒரு வித்துவானுக்கு 'பெரிய தொகை' கொடுக்க ஆரம்பித்திருக்கிறார் யக்ஞராமன். பாடகர் உள்பட யாருக்குமே விஷயத்தை முன்கூட்டித் தெரிவிப்பதில்லை. 'வீட்டுக்குப் போய் கவரைப் பிரித்துப் பாருங்கள்' என்று பாடகரிடம் சொல்லி விடுகிறார்! இந்த வருடம் யாருக்கு அதிர்ஷ்டம் அடிக்கப் போகிறதோ!

மியூசிக் அகாடமியில் போன வருஷம் செம்மங்குடி விழாவைத் துவக்கி வைத்தாரா? இந்த வருஷம் எம். எஸ்.! அரசியல் பிரமுகர்களை அழைத்து விட்டுக் காத்துக் காத்துக் களைத்துப் போவதற்கு இந்த ஏற்பாடு மகா உத்தமம். பண்டிட் ரவிசங்கர், பிஸ்மில்லா கான், கிஷோரி அமோங்கர் என்று— பாக்ஸ் ஆபீஸ் மேல் ஒரு கண் வைத்துக் கொண்டு — இந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகள் இங்கே உண்டு. (ஆனால் இவர்களுக்கு எடுத்து வைக்கும் கரன்ஸி கற்றைகளில் பத்தில் ஒரு பங்காவது கர்நாடக சங்கீத வித்துவான்களுக்குக் கொடுக்க மியூசிக் அகாடமிக்கு எப்போதுதான் மனம் வருமோ?)

நாலு சங்கீத கலாநிதிகள் காலை நேரக் கச்சேரி செய்கிறார்கள். டி.கே. பட்டம்மாள்; டாக்டர். எஸ்.ராமநாதன்; டி.எம். தியாகராஜன்; 'பிரான்ட் நியூ' சங்கீத கலாநிதி பி. ராஜமய்யர்.

திறமையுள்ள இளம் நாட்டியக் கலைஞர்களுக்கு சீனியர் அந்தஸ்து வழங்க எப்படியோ தைரியம் வந்து விட்டது அகாடமிக்கு. சுஜாதா சீனிவாசன் (பரத நாட்டியம்), ஷோபா நடராஜன் (குச்சிப்புடி), இருவருக்கும் அந்த யோகம் அடித்திருக்கிறது. அது போலவே மாலை நேர 'மெயின்' கச்சேரிக்கு பிரமோஷன் ஆகியிருப்பவர்கள்

• பத்மா — ரஷ்ய பாணி ஜடாயு மோட்சம்.





கமலா ரெட்டி.

சாருமதி ராமச்சந்திரன்; திருவாரூர் சேதுராமன்— குழிக்கரை விசுவலிங்கம்.

கச்சேரிகள் எல்லாமே ஒரு மணிநேரம் முன்னுக்குத் தள்ளிப் போடப்பட்டு 'மெயின்' கச்சேரி நாலு மணிக்கே தொடங்குகிறார்கள், இந்த வருஷம். இரவுக் கச்சேரிக்குக் கடைசி வரை கூட்டம் இருப்பதில்லையாம்; பஸ் பிடிக்க ஓடுகிறார்களாம். அலுவலகம் விட்டு நாலு மணிக்கே கச்சேரிக்கு எப்படி வருவது என்று அகாடமிகாரர்கள் யோசிக்க வேண்டாமோ?

லெக்சர் — டெமான்ஸ்ட்ரேஷன்களில் பங்கு கொள்ளும் வெளிநாட்டுக்காரர்கள் மூன்று பேர். வீணை வித்துவான் டேவிட் ரெக்; புல்லாங்குழல் கலைஞர் கார்டன் கோஸ்ட்ரேங்க் இருவரும் 'அமெரிக்காவில் கர்நாடக இசை' பற்றிப் பேசப் போகிறார்கள். நியூயார்க்கில் டாக்டருக்குப் படிக்கும் ஆந்திரக்காரரான அவந்தி மெடூரி, 'நாட்டிய உலகில் பெண்கள் வகிக்கும் ஸ்தானம்' பற்றிப் பேசுகிறார்.

திருத்தணிகைக் கோயிலில், பதினாறு வகை உபசாரங்களில் பதினைந்தாவதான—

நாட்டியம் நடைபெறுகிறதாம். ஹாலந்துக்காரரான சஸ்கியா என்ற நடனமணி இதைப் பற்றி ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம்



• எம்.கே. எஸ். சிவா



முருகபூபதி

* பாக்யராஜ்.
—இளையும் இளைஞர்கள்.



வாங்கியிருக்கிறார். அவர் இது பற்றிப் பேசுகிறார்.

நாட்டுக்குச் சேவை செய்தால் மட்டும் போதாது என்று நாட்டியத்துக்கும் சேவை செய்ய வந்திருக்கிறார் வைஜயந்திமாலா, எம். பி! இவரது 'நாட்டியப் பிரதர்சனம்' '87க்கு டாடா சொல்லும் தினத்தன்று நடைபெறும். (கிருஷ்ணகான சபாவில் விழாவுக்குத் தலைமையும் வைஜயந்திமாலாதான்!)

லட்சுமி விசுவநாதன் தேவார—திவ்ய பிரபந்தங்களில் வரும் நாயகி பாவம் பற்றிப் பாடி நடித்துக் காண்பிக்கிறார். சித்ரா விசுவேசுவரன் குழுவின் ராமாயண நாட்டிய நாடகமும் உண்டு. ஆக, சீனியர்களை ஒரேயடியாக ஒதுக்கவும் இல்லை....

பிற்பகல் கச்சேரிகளில் விஜய் சிவா, நெய்வேலி சந்தான கோபாலன், டாக்டர் எம். பிரமிளா, அமெரிக்காவிலிருந்து அனுராதா சுப்பிரமணியம் என்று எல்லாரும் இளைய தலைமுறையின் நம்பிக்கை நட்சத்திரங்கள்.

அண்ணாமலை மன்றத்தில், தமிழிசைச் சங்க விழாவை மத்திய துணை அமைச்சர் ப. சிதம்பரம் துவக்கி வைக்கிறார். விழாத் தலைவர், நாடகக் காவலர் ஆர். எஸ். மனோகர். (மனோகர் தமிழிசைக்காரர்களுக்குப் புதியவர் அல்ல; ஆண்டு தோறும் அண்ணாமலையார் நினைவுப் பரிசை நூலாசிரியருக்கு வழங்கிய கையோடு, ஆர். எஸ். மனோகர் நாடகம் ஒன்று தவறாது இடம் பெறுவதுண்டு...) பண் ஆராய்ச்சி மாநாட்டு விழாத் தலைவர் பேராசிரியர் கா. வெள்ளைவாரணர்.

மாலை நேர, இரவு நேர (9—30 முதல் 12—30 வரை!) கச்சேரிகளில் வழக்கம் போல லால்குடி, மகாராஜபுரம், சேஷகோபாலன், சீர்காழி என்று சீனியர் வித்துவான்கள்தாம்; ஒரு மாற்றமுமில்லை. இளைய தலைமுறை இங்கே படையெடுக்கவில்லை என்றாலும் பங்கெடுக்கிறது. சீர்காழி சிவசிதம்பரம் தவிர, சிறுவன் எம். பாக்கியராஜ் பாட, இன்னொரு சுட்டிப் பையன் தஞ்சாவூர் முருகபூபதி மிருதங்கம் வாசிக்கிறான்.

காலை நேரப் பேச்சுக் கச்சேரிகள்தாம் இன்னும் சுவாரசியமாக இருக்கும் போல் தெரிகிறது: பண்களும்—நுண் அலகுகளும்; உலக இசையில் தமிழிசையின் பங்கும் பழமையும், முப்பத்தைந்து தாளங்களில் மோகராகங்கள்; சங்கரதாஸ் சுவாமிகள் பயன்படுத்திய ராகங்கள்; பண் இசையில் அற்புதச் செயல்கள்; பதங்களும் பிள்ளைத் தமிழும்; தமிழிசை பரவுவதற்குச் சில புதிய வழி வகைகள் (மீ. ப. சோமு) என்று ஒரு பட்டியல் விரிகிறது.

அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைக் கல்லூரி மாணவர்கள் சென்ற வருடம் மிக நன்றாகப் பாடியதாக ஒரு 'ரிப்போர்ட்'. இந்த வருடம் இவர்கள் ரிபீட் பர்ஃபாமென்ஸ்.

கனடா நாட்டு கார்ல்டன் பல்கலைக் கழகப் பேராசிரியர் சுப்பிரமணியம் எழுதிய 'கலிங்கத்துப்பரணி' நாட்டிய நாடகத்தை வசந்தலட்சுமி—நரசிம்மாச்சாரி வழங்குகிறார்கள்.

'வேதாந்த மரத்தில் ஒரு வேரைக் கண்டேன்' என்ற புலவர் கீரனின் ஜனவரி முதல் தேதி காலைச் சொற்பொழிவு ஸ்டார் நிகழ்ச்சியாக இருக்கப் போகிறது!

சில இளம் நடனமணிகளுடன், பத்மா—சித்ரா—சுவர்ணமுகி ஆகிய சீனியர்களையும் இங்கே பார்க்கலாம்.

டாக்டர் சேலம் எஸ். ஜெயலட்சுமியின் கல்சுரல் சென்டர் ஃபார் பர்ஃபாமிங் ஆர்ட்ஸ், எல்லாருக்கும் முன்னால் இசைவிழாவைத் தொடங்கி விடுகிறார்கள். மத்திய துணையமைச்சர் அருணாசலம் மாநில வறட்சி விஜயங்களை மறக்க, இங்கே தலைமை தாங்குகிறார். இந்தியாவின் பல பாகங்களிலுமிருந்து கலைஞர்கள் கலந்து கொள்ளுகிறார்கள். மதுரை சோமு 'சங்கீத சாகரம்' ஆகிறார் இங்கே...

ஹைதராபாத் நடராஜ் ராமகிருஷ்ணாவின் பேரிணி சிவதாண்டவம், வைரமங்கலம் லட்சுமி—நாராயண் பாட்டு, ஸோனால் மான்சிங் ஒடிஸி, தேபு சௌத்ரி சிதார், திருவிழா ஜெய்சங்கர் நாதசுரம் எல்லாம் முக்கிய

* சுரேஷ் — அறிமுகம்.





* ராஜம் அய்யர்
—'பிராண்ட் நிஜ'
சங்கீத கலாநிதி.



• சுசீலாவிடம் வீணை பரிசு பெறுகிறார் கோமதி— வலது கோடியில் சேலம் ஜெயலக்ஷ்மி.

நிகழ்ச்சிகள். இதை எல்லாம் விட, இந்த அமைப்பு செய்யும் முக்கியமான பணியைக் குறிப்பிட வேண்டும்.

TRYSEM என்கிற அரசாங்கத் திட்டத்தின் கீழ், கிராமத்து இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் இசையில் பயிற்சியும் ஸ்டைபெண்டும் (200 ரூபாய்!) கொடுத்து வருவது உருப்படியான பணி. பூந்தமல்லி, புழல், வில்லிவாக்கம், திருவாலங்காடு ஆகிய புற நகர்ப் பகுதிகளில் இந்தப் பயிற்சி பெற்ற இளங் கலைஞர்கள் பாடுவதோடு நிற்காமல், பலர் சம்பாதிக்கவும் தொடங்கி விட்டார்களாம். வாய்ப்பாட்டு தவிர மிருதங்கம், டிரம்ஸ், ஹார்மோனியம், தபலா வாசிக்கிறார்களாம். கோமதி என்ற பெண் வீணை கற்றுக் கொண்டதோடு, பூந்தமல்லியில் பல பெண்களுக்கு வீணையில் பயிற்சியும் அளிக்கிறாராம்! (வீணை செய்வதற்குப் பயிற்சி, பண வசதி கூடச் செய்கிறார் ஜெயலட்சுமி, சென்னையில்) காசட் மூலம் கர்நாடக இசை கற்பிப்பது இவரது இன்னொரு பணி. பல வெளிநாட்டு மாணவ மாணவிகள் சீரியஸாகக் கற்றுக் கொள்கிறார்களாம்!

இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொஸைடியும் மாலை நேரக் கச்சேரிகளில் எதுவும் புதுமை செய்யவில்லை. ஆனால் காலை (நேர) லெக்சர் டெமான்ஸ்ட்ரேஷன்களில் 'பிரமாத ஐட்டங்கள்' சில இருக்கின்றன: கடலூர் சுப்பிரமணியம் 'பைரவி' பற்றி உரை; கே.வி.என். திருப்பாவை; கோபாலகிருஷ்ண பாரதி பாடல்களில் தமிழ்ப் பஞ்சரத்ன கிருதிகளின் பங்கு; சுவாமிமலை ராஜரத்தினத்தின் 'காதல் தூதுவர்கள்'; வயலின் டி. ருக்மிணியின் ராகங்களும் இசையும்; ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதரின் சாகித்தியங்கள் பற்றி திருச்சூர் வி. ராமச்சந்திரன்; அமெரிக்காவிலிருந்து மைதிலி குமாரின் தெய்வீக நாட்டியம்; அரியக்குடி பாணி பற்றி பி. ராஜமய்யர்; தோடி ராகம் பற்றி எம். எல். வி. என்று சுவாரசியமான காலை நிகழ்ச்சிகள். துவக்க நாள் நிகழ்ச்சிக்கு இங்கு மட்டும் 'போட்டா போட்டி' கிடையாது; போன வருஷம் முதல் பரிசு வாங்கிய நடனக் கலைஞருக்கு அடுத்த வருஷ ஆரம்ப நாள் நிகழ்ச்சி ஆட்டோமாடிக்காகக் கொடுக்கப்படுகிறது. ('அதிகபட்ச பணம் தந்தால் ஆரம்ப நாள் நிகழ்ச்சி' என்கிற ஏலம் போடுகிற பிசினஸ் இங்கே கிடையாது.) இந்த வருஷம் விழா துவக்க நாளில் ஆடுகிறவர் குமாரி வித்யா சுப்பிரமணியம்.



• டாக்டர் பிரமீளா.

இதெல்லாம் தவிர, வழுவூரார் விழா, கலாரசனா, தியாகபிரம்ம கான சபா, சுவாதி ஃபைன் ஆர்ட்ஸ், கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ் (தலைவர் யார் தெரியுமோ? டி.டி. வாசு தான்!) எல்லாம் ஒரு வாரத்துக்கு இசை நடன மழை பொழிகிறார்கள்.

இந்த வருஷம், வயலின் கன்யாகுமாரி நாதஸ்வரக் கலைஞர் எம்.கே. சிவாவுடன் இணைந்து 'வாத்யலகரி' மூன்று இடங்களில் வழங்குகிறார். இது ஒரு புதிய முயற்சி. இந்த சீசனில் புதிதாக அறிமுகமாகிற இளைஞர் பாலக்காடு சுரேஷ். (முதல் குரு பாலக்காடு மணி ஐயர். அப்புறம் அவர் புதல்வர் ராஜாமணி.) ஏற்கெனவே சென்னை—வெளியூர்களில் எல்லா 'பெரிய தலை'களுக்கும் வாசித்த அனுபவம்தான் இவர் கைவசம் வைத்திருக்கும் சர்ட்டிபிகேட். பாணி, அப்பட்டமாகக் குருவின் பாணி...

இந்த சீசனில் மழை பொழிகிறதோ இல்லையோ, இசை மழை சென்னையில் நாலா புறமும் புயலாகக் கொட்டி ரசிகர்களை எந்தத் திசைக்குச் செல்வது என்று திணற வைக்கப் போவது உறுதி.

— **நமது நிருபர்**



* கா ந்தியம் . உணர்த்தியவர்

'பேசும் விழிகள்' என்று வர்ணிப்பதில்லையா அதுபோலத்தான் இதுவும்.

* ஆ. சதாசிவம், காவேரி.

? சமீபத்தில் தங்களுக்கு அதிர்ச்சி அளித்த செய்தி எது?

! பாட்னா ரயில் நிலையத்தில் விடியற்காலையில் டி.வி.யில் திடீரென புளூஃபிலிம் காண்பிக்கப்பட்டது. எப்படி நேர்ந்தது. தவறு யாருடையது என்பதை நிர்ணயிப்பது ஒரு புறமிருக்க, இந்த நாடு பொது இடத்தில் புளூஃபிலிம் காட்டும் அளவிற்கு, தரம் தாழ்ந்து போனது பேரதிர்ச்சிதான்.

* ஆர். மின்னல்ராஜன், திருச்சி – 8.

? 'தேசத்தின் நன்மை கருதிப் பல சந்தர்ப்பங்களில் அரசு பொய் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது' என்று ரமேஷ் பண்டாரி கூறியுள்ளது சரியா?

! முற்றிலும் தவறு. ஜனநாயகத்தில் அரசு நாட்டின் பாதுகாப்பு கருதிச் சில விஷயங்களைப் பகிரங்கமாக வெளியிடாமல் இருக்கலாம்; ஆனால் பொய் சொல்லக் கூடாது. பொய் கூறப்படுவது நாட்டு நலனுக்காக அல்ல; தனி மனிதரின் குற்றங்களை மறைக்கவே.

அ.தி.மு.க. அமைச்சரவையில் திறமையான அமைச்சர் யார்?

* எம். ஏ. பாஷா, சேலம்.

? தமிழர் என்றால் முன் நிற்கும் குமரி அனந்தன் ஏன் இப்போது மௌனியாகி விட்டார்?

! பேசத் தொடங்கி விட்டாரே — 'தமிழன் ரத்தம் தண்ணீரல்ல' என்ற தலைப்பில்!

* பொன். ராஜேந்திரன், முருங்கப்பேட்டை.

? பேசாத படத்துக்குப் பேசும் படம் என்று பெயர் வைத்திருப்பது சரியா?

! கதாபாத்திரங்கள் பேசா விட்டாலும் திரைப்படம் பேசுகிறதே — மௌனமாக.

* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? காவிரி நீர்ப் பிரச்னை முற்றுப் பெறாமல் இருக்கக் காரணம் தி. மு. க. ஆட்சியா? அ. இ.மு.க. ஆட்சியா? காங்கிரஸ் ஆட்சியா?

! கர்நாடக அரசையும் சேர்த்து நாலு.

* அயூர். கே. அருள்செல்வன், விக்கிரபாண்டியம்.

? ஜே. வி. பி. யை அடக்க ஜெயவர்த்தன அபுரசு பச்சைப் புலிகளை உருவாக்குகிறதே?

! பச்சைப் புலிகளை ஜெயவர்த்தனவால் அடக்கிக் கட்டுக்குள் வைக்க முடியுமானால்



* ரத்தம் தண்ணீரல்ல!



* சந்தேகமின்றி...!



* குற்றச்சாட்டு



* 'சந்திப்பேன்'

ஜே. வி. பி.யைப் பச்சைப் புலிகள் அடக்கட்டும்.

* கே. வேங்கடசுப்பிரமணியன், குடியாத்தம்.*

? தொடர்ந்து நடக்கும் இட ஒதுக்கீடு ஆலோசனைகளால் தராசு அறிவது என்ன?

! தமிழகத்தில் அடேயப்பா, இத்தனை ஜாதிகளா என்று ஒரு மலைப்பு. ஜனத் தொகை நூறு எனில் கோரப்படும் இட ஒதுக்கீடு சதவிகிதங்களின் கூட்டுத் தொகை 153 ஆக இருக்கக் கண்டு ஒரு திகைப்பு. ஜாதியாவது ஒழியவாவது என்று ஒரு சலிப்பு. எம். ஜி. ஆர். நழுவிக் கொள்ள இந்த ஆலோசனைகள் உதவியுள்ளன என்பதாக ஒரு கணிப்பு.

* ஆர். கே. லிங்கேசன், மேலக்கிருஷ்ணன் புதூர்.

? அ. தி. மு. க. அமைச்சரவையில் திறமையான அமைச்சர் யார்?

! சந்தேகமென்ன, எம். ஜி. ஆர். தான்!

* சி. மணி, புத்தனம்பட்டி.

? 'கருணாநிதி அறிவிக்கும் அத்தனை போராட்டங்களையும் காங்கிரஸ் சந்திக்கத் தயாராக உள்ளது' என்று மூப்பனார் கூறுகிறாரே?

! போராட்டங்களைச் சந்திப்பதாக மார் தட்டுவதைவிடப் பிரச்னைகளின் ஆழத்தைப் புரிந்து கொண்டு பேசுவதே சரியான அணுகுமுறை.

* ரேவதி பிரியன், ஈரோடு.

? டி.வி. யில் சோவியத் கலை நிகழ்ச்சிகள் எப்படி?

! 1. டி.வி. பார்க்கவே வேண்டாம்; 2. பார்த்துத் தொலைக்கணும்; 3. பார்த்தே ஆக வேண்டும்; 4. பார்த்து வைக்கலாம். — சோவியத் கலைநிகழ்ச்சிகளைப் பொறுத்த மட்டில் மூன்றாவதை 'டிக்' அடித்துக் கொள்ளுங்கள்.

* கே. எம். ரவிச்சந்திரன், மதுரை — 20.

? பவுன் விலை நாளுக்கு நாள் ஏறிக் கொண்டே போகிறதே?

! 'மகளுக்குக் கைக்குக் கழுத்துக்கு ரெண்டு நகை பண்ணிப் போடற வழியைப் பாருங்க'ன்னு வருஷா வருஷம் அடிச்சுக்கறேன், கேட்கறீங்களா? இல்லையே!' என்ற குற்றச்சாட்டு இப்போது பல இல்லங்களில் பலமாகவே ஒலித்துக் கொண்டிருக்கும்!

நீங்கள் கேட்டவை — தராசு

* ஆர். எஸ். இராஜ், சீர்காழி.

? 'இன்றைய தினசரிகள் மத்திய அரசின் கைக்கூலிகளாக மாறிவிட்டன' என்று கலைஞர் குற்றம் சாட்டுகிறாரே?

! சில பிரச்னைகளில் அவருடன் கருத்து வேறுபாடு கொள்ளும்போது அவர் இப்படிப் பேசுவது வாடிக்கைதான்.

* ஏ. பாலசந்திரன், கே. வி. குப்பம்.

? தமிழக அரசியலில் தனி மனித வழிபாடு மறைந்து உண்மையான ஜனநாயகம் மலர்வது எப்போது?

! அகில இந்திய ரீதியில் தனி மனித வழிபாடு மறைந்து உண்மையான ஜனநாயகம் மலரும்போது.

* ஆர். நடராஜ் கண்ணன், கும்பகோணம்.

? பெருகி வரும் மாத நாவல்களின் எண்ணிக்கை எதைக் காட்டுகிறது?

! குறிப்பிட்ட சில எழுத்தாளர்களின் பேங்க் பேலன்ஸ் அதிகமாகி வருவதை!

* எஸ். சுந்தரராஜ், பாளையங்கோட்டை.

? தமிழ்நாட்டில் பஸ் கொள்ளை, மிகவும் அதிகரித்து வருகிறதே?

! நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள்? பஸ் முதலாளிகளிடம் அடிக்கப்படும் கொள்ளையையா, பயணிகளிடம் அடிக்கப்படும் கொள்ளையையா?

* வி. துரைராஜ், சென்னை — 112.

? நாயகன் படம் பார்த்தீர்களா?

! பார்த்தேன். அது அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகப் போவதை அறிந்து வெட்கித் தலை குனிந்தேன். காந்தியையும் அவரது அஹிம்சைக் கொள்கையையும் நமக்கு உணர்த்த ஒரு மேல்நாட்டு அட்டன்பரோ வரவேண்டியிருந்தது. நாமோ வன்முறையையும் கொடூரத்தையும் வழிபாட்டுக்குரியதாக்கி ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணி சம்பாதிக்கிறோம்!

* ரூ. 1[illegible] பரிசு பெறுபவர்:

கே. வேங்கடசுப்பிரமணியன்,
515, [illegible]ப்பேட்டை,
குடியாத்தம் — [illegible]

பொய்யின் விலை...!



"மூப்பத்தஞ்சு ரூபாய் போதாது. கடன் வாங்குகிறதுதான் வாங்கறீங்க. அம்பதா கேட்டு வாங்கிண்டு வந்துடுங்க. நாளைக்குப் பாமாயில் கொடுத்தாலும் கொடுப்பான். மாசம் முடிய இன்னும் ஐந்து நாட்கள் இருக்கே!"

மைதிலிக்கு மாதத்தின் மீதி நாட்களை விரட்டியடித்து ஓட்டத் துடிக்கும் அவசரம். பாக்கி நிற்கும் ஒவ்வொரு நாளிலும் என்னென்ன புதுக் கடன்கள் ! மூனேக்கு,மோ என்ற மத்தியதர குடும்பக் கவலே!

கடன் கேட்டுப் பெறுவதற்காகப் படி இறங்கிய மூர்த்தி, வாசலில் நின்றிருந்தவனைப் பார்த்தான். தண்டு வடத்தில் உதற லெடுத்தது.

சிவராமன்!

இருபது வருடங்களுக்கு முன்பு 'நீயும் வேண்டாம், உன் குத்தல் பேச்சு உறவும் வேண்டாம்' என்று யாரை ஒதுக்கிச் சென்னைக்கு ஓடி வந்தானோ அதே சிவராமன்!

எங்கே வந்தான்; எதற்கு வந்தான்?

"என்னடா மூர்த்தி. அசந்து போயிட்டே. ஞாபகமிருக்கா. இருபது வருஷமா ஒரு லெட்டர் கூடப் போடல்லே. எங்களையெல்லாம் விட்டுட்டு மெட்ராசே கதின்னு வந்துட்டே. இப்ப வீடு தேடி வந்திருக்கேன். வான்னு கூப்பிடக் கூட முடியல்லியோ? மெட்ராஸ் நாகரிகம் ஊறிப் போயிடுத்தோ."

அதேசிவராமன்தான். இன்னும் மாறவில்லை.


"ஐயய்யோ. அப்படியெல்லாம் ஒண்ணு மில்லேப்பா. பார்த்து ரொம்ப வருஷமாச்சு. திடீர்னு பார்த்ததும் என்ன பேசறது என்ன பண்றதுன்னே தெரியல்லே! வா, வா! மைதிலி! யாரு வந்திருக்கா பாரு."

கதவைத் திறந்து விட்டான். செருப்பு விடும் மூலையைக் காட்டினான். கையில் கனத்த பையை வாங்கிச் சுவரோரம் வைத்தான். ஈசிசேரை விரித்து மின்விசிறியைப் போட்டான்.

தலைப் பக்கம் பிசுக்கேறிய ஈசி சேரில் இடுப்பைப் புதைக்கச் சிவராமன் கூச்சப் பட்டான்.

"வாங்கோ. சௌக்கியமா." மைதிலியின் குரல் பிசிறியது. எதிர்பாராமல் வந்த விருந்தாளிக்கு முன்பு வீட்டின் நிலை கொஞ்சம் தலை குனிய வைத்தது.

"லோச்சே ஊராடா இது. பேருதான் மெட்ராஸ். நம்ம கிராமத்து மொரட்டு மண் ரோடுகூட இதைவிடச் சுத்தமா, சுகாதாரமா இருக்கும். தெருவெல்லாம் ஒரே மாட்டுச் சாணம். மூத்திர நாற்றம். சாக்கடைத் தண்ணிலே கால் வைச்சு அலம்பிண்ட பின்



ரா. குருராசன்

தான் வீட்டுக்குள்ளே நுழையணும் போலி ருக்கே. அசிங்கம்டா. எடறி விழுந்தா உங்க தெரு எருமை மேலே தான் விழணும். என்ன மெட்ராஸோ. நம்ம கிராமம், நம்ம வீடு மாதிரி வராது. என்ன சொல்றே?''

சிவராமன் குற்றம் காண ஆரம்பித்து விட்டான்! இருபது வருஷமாகியும் மாறாத குணம். அப்பாவுக்குத் தப்பாமல் பிறந்த மகன்.

சிவராமன் மூர்த்தியின் பெரியப்பா மகன்: தஞ்சாவூர் பக்கக் கிராமம். ஆறு வேலி தாங்கும். காவிரிப் பாசனம். தென்னை யும், வாழையும், நெல்லுமாக நல்ல வசதி. மூன்று கட்டு வீடு. எல்லாம் பெரியம்மா கொண்டு வந்த சீதனம். பெரியப்பாவுக்குக் கொடிக்கால் வெற்றிலையும், பன்னீர் புகை யிலையும் பக்கம் இருக்க வேண்டும். குதர்க் கத்துக்குப் பெயர் போன வாய். லட்சிய மில்லாமல் பேசுவார்.

''இப்ப எல்லாம் என்ன கல்யாணம்னு பண்றான்கள். அந்தக் காலத்திலே என் மச்சினி கல்யாணம். அஞ்சு நாள் கல்யாணம். ராஜரத்தினம்தான் நாதசுரம். தெருவிலே மேடை போட்டுக் கச்சேரி. சாப்பாட்டு இலைக்குன்னு ஒண்ணரைக்குழி வாழைத் தோட்டமே காலி. தாளிக்க ரெண்டு மரக் கால் கடுகு செலவு!''

உண்மையோ, பொய்யோ. தன்னிடம் மூன்று வட்டிக்குக் கடன் வாங்கியவர்களை யெல்லாம் பிடித்து இழுத்துக் கொண்டு நாள் முழுதும் அறுப்பார். தான்தான் உசத்தி, தனக்கு யாரும் சமமாக முடியாது என்ற எண்ணம், பேச்சு! அல்ப சந்தோஷம்!

பெரியம்மாவும் அப்படியே. ''எங்க வீட் டிலே நூல் புடைவை கட்டினதே கிடையாது. எப்பவும் பட்டுப் புடைவைதான்! அதுவும் காஞ்சிபுரம் தறியிலே சொல்லி வச்சி நெய் தாகணும். எனக்கு நைலக்ஸ், வாயில்னாலே அலர்ஜி.'' — பேச்சில் இல்லாத தலைவலி கள், வியாதிகள் தெரியும். பல்லில் தங்கம், காதில் வைரம்!

பெரியப்பா வீட்டில் எத்தனையோ விசே ஷங்கள் நடக்கும். பெரியப்பாவின் வீட்டுக் குத்தான் எல்லாரும் போக வேண்டும். அவர் யார் வீட்டுக்கும் போக மாட்டார். பசையுள்ள இடங்களுக்குப் பெரியம்மா நேரே போய் அழைப்பாள். மூர்த்தியின் அப்பா வீட்டுக்கு மட்டும் நேரில் வந்ததில்லை. வீட்டிலுள்ள உதிரிகள்தான் வந்து அழைக் கும்.

மூர்த்தியின் அப்பாவுக்கு இதெல்லாம் குற்றமாகத் தெரியாது. ''யார் வந்து அழைச்சா என்ன, உறவு தானே. கூப்பிட்டால் போக வேண்டியதுதானே'' என்று மனைவியை அனுப்பி வைப்பார். அம்மாவின் அவ மானம் அவருக்குத் தெரியாது.

அப்பா, அம்மா காலமாகும் வரை பல் லைக் கடித்துக் கொண்டு மூர்த்தி கிராமத்தி



"பாட்டு பாட்டுன்னு எல்லோரையும் குத்தி எடுத்துண்டு இருப்பாரே நம்ப ராமசாமி, அவர் இப்போ என்ன செய்யறார்?"

"ம்! 'பின் பாட்டுக்காரர்'ராகத்தான் இருக்கார்!"

— ராகவன்.

லேயே இருந்தான். அதற்குப் பிறகு பெரியப்பாவின் நெடி தாங்காமல் மனைவி, குழந்தையுடன் சென்னைக்கு வந்து விட்டான்.

இருபது வருஷங்களாக இவனும் கிராமத்தின் பக்கம் போகவில்லை. அவர்களும் கவலைப்படவில்லை. கடிதமும் இல்லை.

இப்பொழுது திடீரென்று சிவராமன் வந்திருக்கிறான். என்ன காரணம் என்று புரியவில்லை.

மைதிலி சிவராமனுக்கு மோர் கொண்டு வந்தாள். சட்டென்று சிவராமன் பார்வை மைதிலியின் கழுத்தைத் தடவிக் கைகளின் மேல் ஓடியது. மைதிலி முந்தானையை எடுத்துக் கழுத்தைப் போர்த்திக் கொண்டாள். கண்ணாடி வளையல்கள் காட்டிக் கொடுத்து விட்டன.

"என்னடா, மைதிலிக்குச் சோறு ஒழுங்காகப் போடுகிறாயா, இல்லையா. இப்படி ஒரேயடியா கறுத்துப் போய் இளைச்சு கருவேப்பிலைக் குச்சி போல இருக்கா. இங்கே ரேஷன் அரிசி தானே வாங்கறே. நம்ம கிராமத்திலே இருந்தப்போ எப்பிடி இருந்தா... இப்பிடி ஆயிட்டாளே..."— இது வருத்தமா, கிண்டலா, இளக்காரமா?

"அதெல்லாம் ஒண்ணுமில்லே. நீ பார்த்து ரொம்ப வருஷமாச்சு. அதுதான் அப்படி தெரியறது" மூர்த்தி சமாளித்தான்.

"அது சரி. கழுத்திலே என்ன ஒண்ணையும் காணோம். கையிலே கூடக் கண்ணாடி வளையல்?"

மூர்த்தி சிக்கிக் கொண்டான். மகள் கிரிஜாவின் டெர்ம் பீஸ் கட்ட செயினை பண்ட் ஆபீஸில் அடமானம் வைத்ததை எப்படி மறைப்பது?

எரிச்சலாக வந்தது.

இது என்ன கேள்வி. அசட்டுத்தனமான கேள்வி. அடுத்தவனின் தன்மானத்தைத் தாக்கி அவன் அழுகையை ரசிக்க ஆசைப்படும் கேள்வி. ஐம்பது வயதாகியும் நாகரிகம் தெரியாமல் நெருஞ்சி முள்ளாகக் குத்தும் கேள்வி.

சிவராமன் விடவில்லை. "உனக்கு ஒரே ஒரு பெண்தானே. கிராமத்திலே எலி வால் ஜடை போட்டுண்டு மூக்கு ஒழுக ஓடுவாளே பேரென்ன கிரியா. இப்ப என்ன பண்றா, எஸ்.எஸ்.எல்.சி.யாவது பாஸ் பண்ணியிருக்காளா...? என்னவோ போடா, உன்னைப் பார்க்கவே எனக்குக் கொஞ்சம் வருத்தமாயிருக்கு. நீ இந்த வாத்தியார் வேலையை நம்ம ஊர்லேயே செய்துண்டு நல்லாயிருந்திருக்கலாம். இந்தப் பட்டணத்திலே வந்து என்ன வாரிக் கட்டிண்டே?"

மூர்த்தியின் பொறுமை உடைந்துக் கொண்டது. விடக் கூடாது. இவனைப் பேச விடக் கூடாது.

"சிவராமா, நீ இப்பதான் என் வீட்டிற்கு வந்திருக்கே. என்னைப் பத்தி உனக்குத் தெரியாது... மைதிலிக்கும் கிரிஜாவுக்கும் பன்னெண்டு சவரன் நகை பண்ணி வச்சிருக்கேன். என் பெண் கிரிஜா இப்ப எம்.காம். படிக்கறாடா! அடுத்த மேலே பரீட்சை எழுதி டிகிரி வாங்கப் போறா. கையிலே ஒரு தொகை சேர்ந்திருக்கு. அவள் படிச்சு முடிச்ச கையோடு சூட்டோடு சூடா ஒரு கல்யாணம் பண்ணிடலாம்னு இருக்கேன். உனக்குத் தெரிந்த டாக்டர், இன்ஜினியர் வரன் இருந்தா சொல்லேன்.."

"என்னடா சொல்றே? உம் பொண்ணு எம் பொண்ணை விட மூணு வயசுச் சின்னவ... எம் பொண்ணுக்கே நான் இன்னும் கல்யாணம் பேச ஆரம்பிக்கலே! இவளுக்கென்னடா அவசரம்? டாக்டர், இன்ஜினியர்னு எக்கச் சக்கமா செலவு இழுக்கும். உன்னாலே முடியுமா?"

"என்ன நினைச்சிண்டிருக்கே? மெட்ராஸ் வந்ததுலே நாங்க ஒண்ணும் கெட்டுப் போயிடல்லே. என் பெண்ணை எம்.காம். படிக்க வைச்சேன். உன்னாலே நம்ம கிராமத்திலே உன் பெண்ணை படிக்க வைக்க முடிஞ்சுதா. கையிலே கொஞ்சம் பணம் சேர்த்திருக்கேன். கிராமத்திலே அது முடியுமோ?"

சமையற்கட்டிலே நின்ற மைதிலிக்குச் சிரிப்பு வந்தது. மாதக் கடைசி. வந்த விருந்தாளிக்குச் சமையல் செய்யக் காய்கறி இல்லை. ரேஷன் வாங்கப் பணமில்லை. இவர் தன் மகளுக்குக் கல்யாணம் பண்ணப் போறாராம்! சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

மூர்த்தியின் ரத்தம் சூடேறிற்று.

"சிவராமா! அடுத்த தடவை வந்தா என்னை நீ இந்த வீட்டிலே பார்க்க முடியாது." மூர்த்தி போட்ட போடில் சிவராமன் திணறினான்:

"ஏன் இதைவிட மோசமான சந்திலே சின்னதா வீடு பார்த்திருக்கியா?"

"போடா! பழவந்தாங்கல் பக்கத்திலே ஒரு கிரவுண்டு வாங்கிப் போட்டிருக்கேன். கடன் எண்பதாயிரம் ரெண்டு மாசத்திலே சாங்ஷன் ஆயிடும். பணம் வந்ததும் வீடு கட்ட ஆரம்பிச்சிடுவேன்."

'நீ என்னடா என்னை மட்டம் தட்டுவது?' என்ற ரோஷம், தன்னையும் தன் கௌரவத்தையும் காத்துக் கொள்ள வேண்டும் என்ற

துடிப்பு. இவை உந்தித் தள்ள மூர்த்தியின் கற்பனை மேலே மேலே பறந்தது.

சிவராமன் திடீரென்று மௌனமானான். தலை குனிந்து தரையையே பார்த்துக் கொண்டிருந்தவன் எழுந்தான்.

"மூர்த்தி! இப்ப தஞ்சாவூர்க்கு ராத்திரி வண்டி இருக்குடா, திருவள்ளுவர்லே டிக்கட் சுலபமா கிடைக்குமில்லே?"

"என்னடா, இவ்வளவு அவசரம்? எங்க வீட்டுக்கு வந்து பத்து நிமிஷம் கூட ஆகல்லே. அதுக்கு தன்னே ஊருக்குப் போகணும்கறே. எங்க வந்தே. என்ன சமாசாரம்?"

"ஒண்ணுமில்லேடா. என்னவோ ஒரு ஐடியாவோட மெட்ராஸ் வந்தேன். உன் வீட்டுக்கு வந்ததே நல்லதாப் போச்சு. மெட்ராசிலே இந்தச் சனியும், ஞாயிறும் தங்கி வந்த வேலையை வெற்றிகரமா முடிச்சுட்டுப் போகலாம்ங்கற முழு நம்பிக்கையோட வந்தேன். ஆனால், உங்களையெல்லாம் பார்த்த பிறகு என் ஐடியா எவ்வளவு முட்டாள்தனமானது, அபாயகரமானதுன்னு புரிஞ்சுது. நீயும் உன் குடும்பமும் நல்லாயிருக்கணும்டா. வர்றேன்."

எவ்வளவு தடுத்தாலும் கேளாமல் சிவராமன் கிளம்பி விட்டான்.

எழும்பூர் செல்லும் பஸ்ஸில் சிவராமன் தன்னைத் தானே நொந்து கொண்டிருந்தான்.

மூர்த்தி. உன் குடும்பம் ஏழ்மையான குடும்பம். நீ குறைச்சல் சம்பளக்காரன். வாடகை வீட்டிலேயிருந்தாலும் கௌரவமா குடும்பம் நடத்தறே. வீடே இல்லாத உன்னால் வீடு கட்ட முடியுது. பெண்ணைப் பெரிய படிப்புப் படிக்க வைக்க முடிஞ்சுது. அவள் கல்யாணத்துக்குப் பணம் சேர்க்க முடிஞ்சது... ஆனால், உன்னை விட நல்ல வசதி படைச்ச நான் அகம்பாவத்திலே, பணம் இருக்கிற திமிர்லே, கண்டவங்களோட சகவாசம் பண்ணி — மூணு சீட்டும், ரம்மியும் ஆடி, விஸ்கியும் பிராந்தியும் குடித்து, கைப் பணத்தையெல்லாம் அழிச்சு— பெத்த மகளுக்குக் கூட கல்யாணம் பண்ணி வைக்கத் துப்பு இல்லாம கண்ட இடங்களிலே கடன் வாங்கி — வட்டி கட்டக் கூட முடியாமல் அவஸ்தைப்படறேன்.

மெட்ராசுக்கு வந்து, குதிரைப் பந்தயத்திலாவது என் அதிர்ஷ்டத்தைச் சோதனை பண்ணிப் பார்த்துடணும்னு ஆசையோடு வந்தேன். நீ எனக்கு வழிகாட்டிட்டே.

என்னைவிட வசதி குறைஞ்ச நீயே மெட்ராசிலே எண்பதாயிரம் கடன் வாங்கி வீடு கட்டறப்போ, பெண்ணுக்குப் பெரிய இடத்திலே கல்யாணம் பண்ணி வைக்கத் துடிக்கறப்போ— நான் ஏன் என் பழக்கத்தை மாத்திண்டு முன்னேற முடியாது...?

நான் சொன்ன பொய்யின் விலை தெரியாமல் மூர்த்தி, நண்பன் நடராஜனிடம் ஐம்பது ரூபாய்க் கைமாற்று வாங்கக் கிளம்பிக் கொண்டிருந்தான்!



சோபனா — ஆனந்த்

பம்பாயில் கம்பெனி பிரதிநிதியும் திரு வி. ஆர். எம். சுவாமி அவர்களுடைய மகனுமான செல்வன் ஆனந்த் சுவாமிக்கும் பூனா, திரு ஒய். வி. யக்ஞன் அவர்களுடைய அருமைப் புதல்வி செல்வி சோபனாவுக்கும் நவம்பர் 26 ஆம் தேதி பூனாவில் மிகச் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமண வைபவத்துக்கும், நவம்பர் 28-ஆம் தேதி பம்பாயில் நடந்த வரவேற்பு வைபவத்துக்கும் ஏராளமான நண்பர்களும் உறவினர்களும் வந்திருந்து சோபனா—ஆனந்த் தம்பதியின் இல்வாழ்க்கை ஆனந்தமயமாக சோபிக்க மனதார வாழ்த்தினர். வாழ்க, மணமக்கள்! வாழ்க பல்லாண்டு!

ஏன் கர்நாடகம்?

ஏன் ''கர்நாடகம்?''

• தேவாரங்களிலேயே நமது இன்றைய இசை மரபின் மூலத்தைக் காண்கிறோம். பின் ஏன் இது 'தமிழ் (அல்லது) திராவிட ஸங்கீதம்' எனப்படாமல் 'கர்நாடக ஸங்கீதம்' என வழங்குகிறது? பலவித காரணங்கள் கூறப்படுகின்றன எனினும் மறுப்பதற்கில்லாத ஓர் அநுமானம்: கர்நாடகம் என்பது தென்னிந்தியா முழுவதையும் குறிப்பதாக நினைக்கப்பட்டிருக்க வேண்டும். இதற்குச் சான்றாகப் பதினைந்தாம் நூற்றாண்டு மத்தியில் 'ஸங்கீத ரத்னாகர'த்துக்குக் கல்லிநாதர் எழுதிய 'கலாநிதி' என்ற உரையிலிருந்து ஒரு மேற்கோள் காட்டுகிறார்கள். அது கிருஷ்ணா நதிக்கும் காவிரிக்கும் இடைப்பட்ட பகுதி முழுவதையுமே கர்நாடக நாடு என்கிறது!

''வெள்ளி வில்லை தங்கவில்லை!''

• சென்ற நூற்றாண்டின் மாபெரும் இசைக் கலைஞரான மஹா வைத்யநாத சிவன் இடையிடையே வெள்ளித் தக்கைகள் கொண்ட ருத்திராக்ஷ மாலை அணிந்திருந்தார். அப்போதிருந்த ராமநாதபுரத்துச் சேதுபதி மன்னர் அவரிடமிருந்து அம்மாலையைக் கேட்டுப் பெற்றார். பிற்பாடு ஒரு விசேஷ சதஸ் கூட்டி, அதில் மாலையை மஹா வித்வானுக்கு மீளவும் சூட்டினார். முன்பு அதிலிருந்த வெள்ளித் தக்கைகளுக்குப் பதில் இப்போது தங்கத் தக்கைகள் ஜொலித்தன! வெள்ளி வில்லைகள் தங்காமற் போனதையும், அவை தங்கமாக மாறியதையும் ஒரே போதில் குறிக்குமாறு மஹா வித்வான், ''வெள்ளி வில்லை தங்கவில்லை'' என்று சிலேடை செய்தார்!





அதென்ன ''பூச்சி?''

• அரியக்குடியின் குருவும், ஸாஹித்யகர்த்தருமான ராமநாதபுரம் ஸ்ரீநிவாஸய்யங்காரைப் ''பூச்சி'' என்ற பெயராலேயே அழைத்தனர். அவர் 'பூச்சி'யானதற்கு மூன்று காரணம் கேள்விப்படுகிறோம். ஒன்று — குழந்தைப் பிராயத்திலிருந்தே சதா அவர் துருதுருவென்று 'பறந்து' கொண்டிருந்ததால் தகப்பனார் அவரைப் 'பூச்சி' என்று அழைத்தாராம். இரண்டு — எப்போதும் அவர் சந்தனப் பூச்சில் கமகமத்துக் கொண்டிருப்பாராம். அந்தப் பூச்சுதான் பூச்சி ஆயிற்றாம். மூன்று — இசை சுவை வைத்து அழகான காரணம்: பூச்சி என்பது குறிப்பாக வண்டுதான். ராக மலர்களின் தேனைப் பருகி ரீங்கரித்ததால் அவர் பூச்சி ஆனாராம்.

புலித்தோல் போர்த்திய பசு!

• ''பசுத்தோல் போர்த்திய புலி என்றுதான் வசனம். நீங்களோ புலித்தோல் போர்த்திய பசு. வெளியிலும், மேலெழுச்சியிலும் புலி; ஆனால் பாலாகப் பாட்டைப் பொழியும் பசுவாயிருக்கிறீர். மனசும் பால் வெள்ளை!'' — இப்படி வர்ணிக்கப்பட்டவர் 'டைகர்'



வரதாச்சாரியார். வர்ணித்தவர் மைசூர் வாசுதேவாச்சாரியார்.

அரசி இல்லாத அரசவையா?

• திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளையின் 'யோசனா கமல லோசனா' இசைத்தட்டு வெளியாகியிருந்த சமயம். அதில் தர்பார் ராகத்துக்கு ஒவ்வாத நாயகி ராக ஸஞ்சாரங்கள் கலந்திருப்பதாக ஒரு விமர்சகர் கூறியிருந்தார். இதுபற்றிப் பிள்ளையவர்களிடம் கேட்டபோது, அவர் சிரித்துக் கொண்டே, "நாயகி இல்லாவிட்டால் ஒரு தர்பார் எப்படி சோபிக்கும்?" என்றாராம்!



ஓர் அற்புத இசைக் கருவி

• சங்கீதத் தூண்கள், ஸ்வரம் எழுப்பும் சிலைகள் என்றெல்லாம் பல ஆலயங்களில் கண்டுள்ள நாம் இவற்றையெல்லாம்விட அதிசயமான ஒன்றைச் செம்பகராமநல்லூரிலுள்ள கோவிலில் காண்கிறோம். நான்குநேரித் தாலுகாவிலிருக்கும் அவ்வூர்ச் சிவாலயத்தில் ஒரு சதுரத் தூணின் ஊடே லேசாக வளைந்த ஒரு கூம்புக் குழாய் செதுக்கப்பட்டிருக்கிறது. அதன் இருபுறமும் துவாரங்கள் உள்ளன. ஒருபுறத் துவாரத்தின் வழியாக ஊதினால் சங்கின் நாதம் எழும்புகிறது. மறுபுறத்தில் ஊதினாலோ எக்காளத்தின் முழக்கம் எழும்புகிறது.



தாவும் ராகம்

• 'நிரோஷ்டம்' என்றால், 'உதடு இல்லாதது.' இப்படி ஒரு ராகம் இருக்கிறது! ஸப்த ஸ்வரங்களில் ம, ப ஆகிய இரண்டும் உதட்டைக் கூட்டித்தானே உச்சரிக்கக் கூடியவை? இவ்விரு ஸ்வரங்களையும் ஒதுக்கிவிட்டு, 'ச'விலிருந்து 'த'வுக்குத் தாவும் ஒரு ராகமே நிரோஷ்டம் என்பது. இந்த ராகத்தில் 'ராஜ ராஜாராதிதே' என்ற கிருதியை முத்தையா பாகவதர் இயற்றியிருக்கிறார்.

தென்றல் வருவித்த தேனிசையார்

• பாடியே தீபத்தை எரியச் செய்தவர்களைப் பற்றியும் மழை வருவித்தவர்களைப் பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறோம். குளிர் பூந் தென்றலை இசையால் வருவித்த கிருஷ்ணய்யர் என்பவர் தஞ்சை மாவட்ட வம்சத்தைச் சேர்ந்த சிவாஜியின் தர்பாரில் (1833 — 55) இடம் பெற்றிருந்ததாகத் தெரிகிறது. இவருக்குச் 'சல்ல காலி' என்றே பட்டப் பெயர் இருந்திருக்கிறது. தெலுங்கில் 'சல்ல காலி' என்றால் குளிர்ந்த காற்று என்று பொருள்.



கோ. பாரதியின் நூதன 'செக்!'

• கோபாலகிருஷ்ண பாரதியார் தமது நந்தன் சரித்திரம் முதலிய இசை நாடகங்களைக் காலக்ஷேபமாகச் செய்வது வழக்கம். ஒரு காலக்ஷேபத்துக்கு அறுபது ரூபாய் சன்மானம் பேசிக் கொள்வார். ஆனால் துறவி போல் வாழ்ந்த அந்த நைஷ்டிகப் பிரம்மச்சாரி தொகையைத் தாம் வாங்கிக் கொள்ள மாட்டார். காலக்ஷேபம் ஏற்பாடு செய்யும் பிரபுவிடமே அதை வைப்பு நிதி (டிபாஸிட்) போல விட்டுவைத்து விடுவார். பிறகு தம்மிடம் தான தர்மம் கேட்டு வருபவர்களிடம், அப்பிரபுவிடம் போய் டிபாஸிட்டிலிருந்து குறிப்பிட்ட தொகை பெறுமாறு ஓலை எழுதிக் கொடுப்பார். இவ்வாறு அவரது பனையோலை 'செக்'குகளைக் காட்டிப் பொருளுதவி பெற்றவர் பலர்.

எந்தெந்த டிபாஸிட்டில் எவ்வளவு எடுத்திருக்கிறோம் என்று பாரதி கவனமாகக் கணக்கெழுதித் தம்மிடம் வைத்துக் கொண்டிருந்தார். ஒருபுறம் அவரது பாடலும் மறுபுறம் இம்மாதிரிக் கணக்கு விவரமும் கொண்ட ஓலைகள் பல கிடைத்திருக்கின்றன.

— "கன்யா"



''மாணவர்களுக்கு இலவசப் படிப்பு, இலவசச் சீருடை, இலவசப் புத்தகங்கள், இலவசச் செருப்பு, இலவசச் சத்துணவு ஆகியன வழங்கும் திட்டத்தின் அடுத்த கட்டமாக எங்களது அரசு மாணவர்களுக்கு இலவச மதிப்பெண்கள் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்!''

— டி. பழனீஸ்வரி, மதுரை.

வறுமை ஒழிய இதோ வழி!

— துளபிதிடமதி



''நமது நாட்டிலே வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்கள் தொகையைக் குறைப்பதிலே என்ன கஷ்டம் என்று கேட்கிறேன்? மிக எளிதாக அதைச் சாதிக்கலாமே! வறுமைக் கோட்டினை நிர்ணயிக்கிற வருமான அளவைக் குறைத்துவிட வேண்டியதுதானே!''

— தி. கீதா கிருஷ்ணன், மொரப்பூர்.

''எங்கள் தலைவர் செல்லுமிடமெல்லாம் கறுப்புக் கொடி காட்டப்படுவதை, கட்சிக்கு ஆதரவு திரட்டும் விதமாக மாற்றி அமைத்திடும் நோக்கில் இனி எங்கள் கட்சியின் கொடியே கறுப்புக் கொடியாக இருக்கும் என்பதைத் தலைவரின் ஆசியுடன் அறிவிக்கிறேன்!''

— கோ. உதயகுமார், சிதம்பரம்.



''ஏதோ அவரால் மட்டுமே முடியும் என்பது போலவும் மற்றவர்களால் முடியவே முடியாது என்பது போலவும் ''வெங்சர்க்கார் நூறு போட்டு விட்டார்'' என்று அதிசயமாகச் சொல்கிறார்கள். ஆனால் எங்கள் தலைவர் தினமும் ஐந்நூறுக்குக் குறையாமல் போடுவார் என்பதைப் பணிவுடனும் பெருமிதத்துடனும் கூறிக் கொள்கிறேன்!''

— க. இளங்கோ, நந்தியநல்லூர்.



பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 4 3154 3, 4 34 157.
ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை — 600 034. போன்: 473389.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 280/-; விமானத் தபால் ரூ. 680/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 340/-.

அறிமுகம் இதோ ஒரு மணிப் பயல்.

பஜாஜ் காம்பேக்ட் வாஷிங் மெஷின். நாசூக்கான கலைதுலங்கும் நன்மணி... இதற்கு நாங்கள் இட்ட பெயர்: மணிப் பயல்.



காம்பேக்ட் என்னென்ன வரங்களை வாரிவழங்குது பாருங்கள் வரிசையாக.

சிங்கிள் பட்டன் கண்ட்ரோல்: நவீனமிக்க CMOS மின் சர்க்யூட்—துணி வகைக்கேற்ப 1 முதல் 4 நிமிடங்கள் வரை, அலசி வெளுக்க 4 வித சுற்றோட்ட வகைகளை அமைத்துக் கொள்ள அனுமதிக்கிறது. பழங்கால பாணி டைமர்கள் இனி உமக்கில்லை.

எதிர்கால நவீனக் கலை: சிட்டு வடிவிலே சிகரமான கட்டழகு இழையும் வாஷிங் மெஷினாக ஓங்கி விளங்குவது காம்பேக்ட் தான். குறைந்த இடத்தில் அடங்கிடும், எளிதில் நகர்த்த சரளமான உருள் சக்கரங்கள் பதிந்த மெஷின்.

LED இயங்கு நிலைகாட்டி: எலக்ட்ரிக் செட்டிங் நிலையினைக் காட்டுகிறது ஆடியோ ஒலிச் சைகைகளோடு. சலவை முடிந்ததுமே அதனை அறிவிக்கிறது ஓர் அலாரம் ஓசை.

திசை மாறிமாறிச் சுற்றும் வாஷர்: அதிகத் துப்புரவான சுத்தமும், உயர்த்தியான சலவையும் பெற உதவுகிறது.

திடவலு மிக்கது காம்பேக்ட். ஸ்டைல் மிளிரும் வலுவான ஃபைபர்கிளாஸ் கட்டுமானம். உட்புறம்: அரிமான எதிர்ப்புள்ள ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தொட்டி.

உள்நோக்க வாகு: அக்ரிலிக் மூடி: உட்புறம் நடக்கும் சலவையை நேரில் நீங்கள் பார்த்திடலாம்.

நிறைவான சலவைத் திறம்: காம்பேக்ட் சிற்றடக்கமாக இருப்பினும் எத்தனை துணிகளை வெளுக்கிறது பாருங்கள்: ஒரே வீச்சில் 1 புடவை, 2 ஷர்ட்டுகள், 1 ஜீன்ஸ், 1 ஷீட், 5 சிறு உருப்படிகள்.

பேக்-அப் ஸ்விட்சு: உங்கள் காம்பேக்ட் மெஷினின் எலக்ட்ரானிக் பேனலுக்கு எப்போதேனும் ரிப்பேர் தேவைப்பட்டால், மெஷின் வேலை தடைப்படாது. பேனலைக் கழற்றிப் பழுது திருத்தக் கொடுத்துவிட்டு, பேக்-அப் ஸ்விட்சைப் பயன்படுத்தி மெஷினைத் தொடர்ந்து இயக்கலாம். மறவாதீர், சிறியதே அழகு: சிக்கனமே செழிப்பு. முத்தான அழகோடு மூளை பலம். இத்தனை பெருமைகளும் உரிமையோடு பணிச்சிடும் எந்திரம் பஜாஜ் காம்பேக்ட்— இல்லத்தரசிக்கு மகத்தான நல்வரம்.



bajaj COMPACT

பஜாஜ் காம்பேக்ட் வாஷிங் மெஷின்

LINTAS BE P 1 2416 TM

bajaj

அடக்கமான சிறு வடிவம், அபார மூளைத்திறம், சலவைக்கு நல்வரம்.

REGISTERED No. M. 4302
Registered as a Newspaper in Sri Lanka